Registered as a News Paper in Srilanka

விலை : ரூபா 20 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 | திருவள்ளுவர் ஆண்டு 2046 மாசி 29 வெள்ளிக்கிழமை (13.03.2015) | பக்கங்கள் 20 | ஓசை – 164

# உள்ளக விசாரணை விரைவில்

## ஐ.நா.ஆதரவுடன் விசேட குழு



(லண்டன்)

வடக்கில் இடம்பெற்றதாக கூறப்படும் யுத்தகால குற்றச்செயல்களை விசாரணை செய்வதற்கு ஐ.நா. ஆதரவுடன் விசேட குழு ஒன்று அமைக்கப்படவுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

வடக்கில் இடம்பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தின் போது வடக்கில் இடம்பெற்றதாகக் கூறப்படும் குற்றசசெயல்களில் சம்மந்தப்பட்டவர்களுக்கு நாட்டின் வழமையான சட்டதிட்டங்களின்படி தண்டனை வழங்கப்பட்டும் என்றும் சிறிசேன மேலும் தெரிவித்துள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## உள்ளக விசாரணையை ஏற்க முடியாது



(கொழும்பு)

அரசின் எந்த உள்நாட்டு விசாரணையையும் நாம் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை என்று தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இறுதிக்கட்டப் போரின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து உள்நாட்டிலேயே காத்திரமான விசாரணை முன்னெடுக்கப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா பி.பி.சி.யிடம் தெரிவித்திருந்தார்.

ஆனால் ஜனாதிபதியின் இந்தக் கருத்தை தாமும்,தமிழ் மக்களும் ஏற்கவில்லை என்றும், உள்ளக விசாரணையின் மூலம்

19 ஆம் பக்கம் பார்க்க

## முல்லை இளைஞர்கள் மூவர் கட்டுநாயக்காவில் கைது

போலி ஆவணங்களை சமர்ப்பித்து பிரித்தானியாவுக்கு செல்ல முயற்சித்தார்கள் என்ற குற்றச்சாட்டில் முல்லைத்தீவைச் சேர்ந்த இளைஞர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து புலனாய்வுப் பிரிவினரால் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவைச் சேர்ந்த 21,25 மற்றும் 32 வயதுடைய மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதுடன்,

19 ஆம் பக்கம் பார்க்க

## இந்திய மீனவர்கள் அனைவரும் விடுதலை

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இன்று வெள்ளிக்கிழமை கொழும்பு வரவுள்ள நிலையில், அங்குள்ள 86 தமிழக மீனவர்களையும் நல்லெண்ண அடிப்படையில் விடுவிக்க இலங்கை அரசு முடிவெடுத்துள்ளது. எல்லை தாண்டி மீன் பிடித்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டுள்ள இவர்களை விடுவிக்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டிருக்கிறார் என ஜனாதிபதி அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

## மக்கள் நலத்திட்டங்களை மோடியிடம் எதிர்பார்க்கிறோம்

இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் வருகையை தாம் வரவேற்பதாகவும் வடபகுதிக்கு வருகைதரும் இந்தியப் பிரதமர் இந்திய அரசின் நிதியுதவியுடன் மேலும் பல மக்கள் நலன்சார் அபிவிருத்தித் திட்டங்களை அறிவிக்க வேண்டும் என்பதே தமது விருப்பமாகுமெனவும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயமாக இன்று இலங்கைக்கு வருகை தரவுள்ள நிலையிலேயே டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

1987 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் வரப்பிரசாதமாக மாகாணசபை உள்ளடங்கிய 13ஆவது திருத்தச்சட்டம் தமிழ் பேசும் மக்களுக்கு கிடைக்கப் பெற்றது. அதுபோல் தற்போதைய பிரதமர் நரேந்திரமோடி அவர்களும் இலங்கைக்கு வருகை தருகின்றபோது, நீண்ட காலமாக நாம் வலியுறுத்தி வருகின்றதும் இந்தியா வலியுறுத்தி வருவதுமான 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கு தேவையான சூழலை உருவாக்குவதற்கு தமது தார்மீகப் பங்களிப்பை பிரதமர் நரேந்திரமோடி


19 ஆம் பக்கம் பார்க்க

## மோடியின் உரை நாடாளுமன்றில் இன்று

கொழும்புவரும் இந்திய பிரதமர் நரேந்திர மோடி இன்று மாலை நாடாளுமன்றில் உரையாற்றவுள்ளார் என இலங்கை நாடாளுமன்ற பிரதிச்செயலாளர் நீல் இத்தவெல தெரிவித்தார்.

மாலை சுமார் 3.00 மணியளவில் இந்தியப் பிரதமர் கொழும்பு வரவுள்ளார்.

36 வருடங்களின் பின்னர் இந்தியப் பிரதமர் ஒருவர் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளமை சிறப்பம்சமாகும். இலங்கைக்கு விஜயம் செய்யும் நான்



காவது இந்தியப் பிரதமர் மோடி ஆவார்.

மாலை நாடாளுமன்றத்திற்கு செல்லும் நரேந்திர மோடியை

19 ஆம் பக்கம் பார்க்க

## கொழும்பில் உச்ச பாதுகாப்பு

கொழும்புக்கு விஜயம் செய்யும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் பாதுகாப்பிற்காக 5000 காவல்துறை உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட உள்ளனர். 100 காவல் நிலையங்களைச் சேர்ந்த அதிகாரிகள் உத்தியோகத்தர்கள் இவ்வாறு கட

19 ஆம் பக்கம் பார்க்க

## மகிந்தவையும் சந்திப்பார் மோடி

உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு இன்று வெள்ளிக்கிழமை கொழும்பு வரவுள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் சந்திப்பார் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. இந்திய ஊடகமான "த ஹிந்து" இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது. கொழும்பில் நடை

19 ஆம் பக்கம் பார்க்க

## ரணிலுக்கு அழைப்பாணை

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிற்கு உச்ச நீதிமன்றம் அழைப்பாணை பிறப்பித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவினால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு தொடர்பில் பரிசீலனை செய்த உச்ச நீதிமன்றம் இந்த அழைப்பாணை உத்தரவினை பிறப்பித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்புரிமை ரத்து செய்யப்பட்டமைக்கு எதிராக அத்தநாயக்க மனுவொன்றை தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு எதிர்வரும் 19ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

இந்த தினத்தில் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவிற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

## நேபாள பிரஜைக்கு மரண தண்டனை

நேபாள நாட்டுப் பிரஜை ஒருவருக்கு கண்டி நீதிமன்றம் நேற்று மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

ஹெரொயின் போதைப் போருள் குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட 63 வயதுடைய நபருக்கே இவ்வாறு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த நபர் நோபாளம் - லலித்புர பட்டான் பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2010ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 9ஆம் திகதி குறித்த நபர் தனது உடம்பினுள் சுமார் 80 கிராம் அளவு ஹெரோயின் வைத்திருந்த நிலையில் கண்டியில் வைத்து கைது செய்யப்பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவருக்கெதிராக வழக்கு விசாரணைகள் கண்டி நீதிமன்றத்தில் இடம்பெற்று வந்தன.

இந்தநிலையில் நேற்று வழக்கு விசாரணை எடுத்துக் கொள்ளப்பட்டபோது, கண்டி நீதிமன்ற நீதவான் மனிலால் வைத்தியதிலகவினால் மரண தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

# பதநீர் உற்பத்தியாளர்கள் 45 பேருக்கு உதவி

(முல்லைத்தீவு)

மாங்குளத்தில் மாவட்ட பனை அபிவிருத்தி சபையினரால் முல்லைத்தீவு பதநீர் உற்பத்தியாளர்கள் 45 பேருக்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

துவிச்சக்கரவண்டி மற்றும் அதனுடன் கூடிய உபகரணங்களும் பனங்களி உற்பத்தியாளர்கள் 10 பேருக்கு பனங்களி எடுக்கும் உபகரணம் மற்றும் அதனுடன் கூடிய உபகரணங்களும் ஒடியல் உற்பத்தியாளர்கள் 34 பேருக்கு ஒடியல் சீவும் இயந்திரம் மற்றும் அதனுடன் கூடிய உபகரணங்களுமாக மொத்தமாக 89 பேருக்கு வழங்கிவைக்கப்பட்டது

இந்நிகழ்வு நேற்று பிற்பகல் 2.00 மணிக்கு மாங்குளத்தில் அமைந்துள்ள பனை அபிவிருத்திசபையின் முல்லைத்தீவு மாவட்ட காரியாலய வளாகத்தில் பனை அபிவிருத்திசபையின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் பா. றஜிபரன் தலைமையில் நடைபெற்றது இந்நிகழவில் முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேசசபையின் எதிர்க்கட்சி தலைவர் எம். தயாநந்தன் மற்றும் பனை அபிவிருத்தி சபையின் நிர்வாக முகாமையாளர் மற்றும் பலரும் கலந்துகொண்டனர். (160)





# இல்ல மெய்வல்லுநர் போட்டி

கோண்டாவில் சிறுவர் மனவிருத்திப் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை பிற்பகல் 3.00 மணிக்கு செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது. இப்போட்டி நிகழ்வில் அனைவரையும் கலந்து கொண்டு சிறார்களை உற்சாகப்படுத்துமாறு பாடசாலைச்சமூகம் கேட்டுள்ளது. (85)

## DD TV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| நேரம் | வெள்ளிக்கிழமை |
|---|---|
| Am 05.00 | ஆலய தரிசனம், பக்திப் பாடல்கள் |
| Am 07.00 | கலைக்கதிர் |
| Am 08.00 | நாளிதழ் நேரம் |
| Am 09.00 | SMS Time |
| Am 9.55 | காலை செய்திகள் |
| Am 10.00 | Hello DD |
| Am 10.30 | IT.Com |
| Am 11.00 | சிரிக்க சிரிக்க |
| PM 12.00 | வாழும் கலைஞர்கள் |
| PM 01.00 | மதியச் செய்திகள் |
| PM 01.30 | சுப்பர் திரைப்படம் |
| PM 03.55 | மாலைச் செய்திகள் |
| PM 04.30 | மழலைகள் |
| PM 05.00 | சிரிக்க சிரிக்க |
| PM 06.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00 | வரலாற்று நாயகர்கள் |
| PM 07.30 | தமிழ் பேசும் தமிழா |
| PM 08.00 | பிரதான செய்திகள் |
| PM 08.30 | Hello DD |
| PM 09.00 | திரைப்படம் |
| PM 11.30 | நீங்காத நினைவுகள் |

# அக்கராயன் குளத்தினை முழுமையாக புனரமைக்க கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அக்கராயன்குளத்தினை முழுமையாகப் புனரமைத்துத் தருமாறு குளத்தின் கீழான விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். 1000 ஏக்கர் வரையான வயல் நிலங்களுக்கு நீர்ப்பாசனம் செய்யக்கூடிய கிளிநொச்சி மாவட்டத்தின் இரணைமடுக்குளத்திற்கு அடுத்த பெரிய குளமாகிய அக்கராயன்குளம் முழுமையான புனரமைப்பு இடம்பெறாமலுள்ளது. அக்கராயன் குளத்தின் வாய்க்கால்கள் மற்றும் அக்கராயன் ஆறு துப்புரவாக்கல் என்பன இவற்றில் அடங்கும். கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் நவரத்தினம் சுதாகரன் இது குறித்து கூறும்போது 2010ஆம் ஆண்டு ஜப்பான் அரசின் 350 மில்லியன் ரூபா நிதியுதவியுடன் குளத்தின் அணைக்கட்டு மற்றும் வான்பகுதிகள் புனரமைக்கப்பட்டன. குளத்தினை முழுமையாகப் புனரமைப்பதென்றால் 1000 மில்லியன் வரையான நிதி தேவைப்படுகின்றது. நிதிக்கான கோரிக்கைகளை விடுத்திருக்கின்றோம். நிதி கிடைக்கின்றபோது குளத்தினை முழுமையாகப் புனரமைக்க முடியுமெனவும் தெரிவித்தார். (160)




பாராட்டி வாழ்த்துகிறோம்


**திருமதி சாரதாதேவி கிருஷ்ணதாஸ்**

BA (Hons), Dip.in. Ed, SLPS I

கொழும்பு இராஜகிரிய வித்தியாலயத்தில் 10-03-2015 அன்று நடைபெற்ற அதிபர் தரம் I இற்கான பதவியுயர்வு, நியமனம் வழங்கும் வைபவத்தில் எமது பாடசாலை அதிபர் திருமதி சாரதாதேவி கிருஷ்ணதாஸ் அவர்கள் இலங்கை அதிபர் சேவை தரம் I இற்குப் பதவியுயர்வு பெற்றதையிட்டும் பாராட்டுக்களைத் தெரிவிப்பதோடு அவர் மேலும் பட்டங்கள் பல பெற்றுப் பல்லாண்டு காலம் சீரும் சிறப்போடும் வாழவேண்டுமென வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச்சமூகம்,
யாழ். நெடுந்தீவு
மகாவித்தியாலயம்.

(R/503)

காவேரி கலா மன்றத்தின் வெற்றிலைக்கேணி சமுதாய நாடகக் குழுவினருக்கான பயிற்சிப் பட்டறை அண்மையில் நடைபெற்றபோது...

# குஞ்சுக்குளம் கிராமத்திற்கான பிரதான வீதி புனரமைப்பு

மடு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட குஞ்சுக்குளம் கிராமத்துக்குச் செல்லும் பிரதான பாதை புனரமைக்கப்பட்டு வருவதாக அக்கிராம மக்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

குஞ்சுக்குளம், மாதா கிராமம், பெரிய முறிப்பு ஆகிய 3 கிராமங்களுக்கும் செல்லும் பிரதான வீதி கடந்த டிசம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் காரணமாக சேதமடைந்த நிலையில் இருக்கின்றது.

இதனால் கடந்த 3 மாதங்களுக்கு மேலாக போக்குவரத்து வசதிகள் இன்றி குறித்த 3 கிராமங்களையும் சேர்ந்த மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வந்தனர்.

இந்நிலையில் தற்போது வீதிப் புனரமைப்பு இடம்பெற்று வருகின்றது.

வீதி புனரமைப்பு வேலைகளை வட மாகாண அமைச்சர் பா.டெனிஸ்வரன், நேரில் சென்று பார்வையிட்டதுடன் குறித்த வீதியின் புனரமைப்பு பணிகள் முடிவடைந்ததும் பஸ் சேவையை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்தார்.

# நிதி ஒதுக்கீடு

(உடுவில்)

வலிகாமம் தெற்கு (உடுவில்) பிரதேச சபையின் பௌதீக வளங்களைப் பராமரிக்க மற்றும் நிர்வகிக்கும் பொருட்டு 78.789 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக பிரதேச சபையின் தவிசாளர் தியாகராசா தெரிவித்தார்.

பொது வீதிகளை புனரமைப்பதற்காக 49.58 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் சபைக்குச் சொந்தமான காணி கட்டடங்கள் என்பவற்றை உரிய முறையில் பேணுவதற்கும் நிர்வகிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

# கரப்புக்குத்தி அ.த.க. பாடசாலைக்கு அதிபர், ஆசிரியர்களை நியமிப்பது யார்?

## கல்விச் செயற்பாடு பாதிப்பதாக மாணவர்கள் குற்றச்சாட்டு

(வவுனியா)

வவுனியா வடக்கு கல்வி வலயத்துக்குட்பட்ட கரப்புக்குத்தி அ.த.க.பாடசாலை அதிபர், ஆசிரியர் இல்லாமல் இயங்காதிருந்த நிலையில் கடமையிலிருந்த வலயக்கல்விப் பணிப்பாளரும் கடந்த திங்கட்கிழமை ஓய்வு பெற்றுச் சென்றுள்ளார். இதனால் தமது கல்வி நடவடிக்கையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக மாணவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

மேலும் தமக்கென அதிபராகவும், ஆசிரியாரகவும் இருந்த அதிபர் மாரடைப்பால் மரணமடைந்ததைத் தொடர்ந்து குறித்த பாடசாலைக்கு அதிபர், ஆசிரியர்களை புதிதாக நியமிக்குமாறு பல்வேறு தடவைகள் பலரிடம் கோரிக்கை விடுத்தபோதிலும் அதற்கான தீர்வினை வழங்காது வலயக்கல்வி அதிகாரியும் ஓய்வு பெற்றுச் சென்றுள்ளார். இதனால் தாம் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டதாக கவலை தெரிவித்துள்ளனர்.

அதுமட்டுமன்றி முதலாம் தவணைப் பரீட்சை ஆரம்பமாகவுள்ள நிலையில் தமக்கான பாடத்திட்டங்கள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை எனவும் இத்னால் தமது கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்படுவதாகவும் விசனம் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு மாணவர்களில் அக்கறையின்றி கல்வித் திணைக்களம் செயற்பட்டுவருகின்றது. இதுவரை அதிபர், ஆசிரியர் இல்லாது நிலை என்ன? என பலரும் கேள்வி யெழுப்பியுள்ளனர்.

மேலும் அதிபர், ஆசிரியர் இல்லாத நிலையில் வலயக்கல்வி பணிப்பாளரும் ஓய்வுபெற்றுச் சென்றுள்ளநிலையில் யார் யாரை நியமிப்பது? இதற்கு யார் பொறுப்பு? என்று கேள்வியெழுப்பியுள்ள மாணவர்கள் தமது கல்வியைத் தொடர்வதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும் மெனவும் அதிபர், ஆசிரியரை உடன் நியமிக்க ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டுமனெவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# அப்படியா சங்கதி?

எல்லா சாமியும் நல்லா
பிரே பண்ணுவோம்...




ஒபாமாவாய நமஹ...
கமரூனாய நமஹ...
நவித்தாயாய நமஹ...
கீ மூனாய நமஹ...
அல்ஹுசைனாய நமஹ...

'இலங்கை அரசு மீண்டும் தவறிழைக்கக் கூடாது. பாதிக்கப்பட்ட மக்களுடன் கலந்தாலோசித்தே உள்ளக விசாரணைப் பொறி-முறை ஆரம்பிக்கப்பட வேண்டும். தோல்வியில் முடிந்த விசாரணைப் பொறிமுறையை நடைமுறைப் படுத்த முனையக் கூடாது' என்று சொல்லியிருக்கிறார், ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் செயிட் அல் ஹுசைன்.

இதை அவர் சாதாரணமாகச் சொல்லவில்லை. – கடுமையான தொனியில் சொல்லியிருக்கிறார் என்று செய்திகளைப் பிரசுரித் திருக்கின்றன பெரும்பாலான தமிழ் ஊடகங்கள்.

அப்பாடா! என்ன இருந்தாலும் ஐ.நா.எங்கட பக்கந்தான் என்று சொல்லிப் பெருமைப் பட்டுக்கொண்டிருக்கிறார்கள் தமிழ்ப்பெருங்குடிகள்.

ஆனால், யாருக்கும் தெரியவில்லை, ஐ.நாவும் அல் ஹுசைனும் இப்படிச் சிம்பிளாகத் தமிழாக்களின்ரை காதில பூவை வைச்சிருக்கினம் என்பதைப்பற்றி.

போர்க்குற்ற விசாரணை தொடர்பான அறிக்கை சமர்ப்பிப்பதை ஒத்திப்போட்ட ஐ.நா.மனிதஉரிமைகள் ஆணையகம் தமிழ்ச்சனங்களைச் சமாளிப்பதற்காக யாழ்ப்பாணத்துக்கு ஒரு விசேட பிரதிநிதியை அனுப்பியிருந்தது.

அவர் இங்கே வந்து கொதித்துக் கொண்டிருந்த சனங்களை ஆற்றுப்படுத்தினார். இதற்காக அவர் உள்ளூர் முகவர்களைச் சந்தித்தார். இந்த உள்ளூர் முகவர்களான தமிழ்ச்சமூகத்தின் பிர-திநிதிகளும் பிரமுகர்களும் வந்திருந்த அதிகாரியுடன் சேர்ந்து படம் எடுப்பதிலும் கைகுலுக்குவதிலும் கண்ணும் கருத்துமாக இருந்தார்களே தவிர, சனங்களின் உணர்வைப் பற்றியோ நீதி மறுப்பில் ஐ.நா. ஈடுபடுவதைப் பற்றியோ பிரஸ்தாபிக்கவில்லை.

ஆனால், வந்திருந்த ஐ.நா.பிரதிநிதிக்கு வெற்றி.

இந்தப் போர்க்குற்ற விசாரணை பற்றிய அறிக்கை சமர்ப்பிப்பதை ஒத்திவைக்க வேண்டாம் என்று கேட்டு பல்கலைக்கழக சமூகத்தினர் வீதியில் இறங்கியதைப் பார்த்துப் பயந்துதான் ஐ.நா.அதிகாரி பறந்தோடி வந்ததாக ஊர்களில் கதைகளை அவிழ்த்து விட்டுக்கொண்டிருக்கும் ஆட்களும் இருக்கிறார்கள்.

அவர்கள்தான் இப்பொழுது அல் ஹுசைனும் தமிழர்களுக்குச் சார்பாகத்தான் கதைச்சிருக்கிறார். இலங்கை அரசாங்கத்துக்குக் கடுமையான எச்சரிக்கையை விடுத்திருக்கிறார். இலங்கை அரசாங்கமோ (இலங்கை அரசாங்கம் என்றால்... எந்த அரசாங்கத்தைச் சொல்கிறார்கள்? மகிந்த அரசாங்கத்தையா? அல்லது தாம் ஆதரவளித்த மைத்திரி அரசாங்கத்தையா?) இனித் தப்பவே முடியாது என்று சொல்கிறார்கள்.

இதைக் கேட்க எமக்கும்தான் புல்லரிக்கிறது.

ஆனால், இந்த ஐ.நாவை நம்ப முடியுமா? என்று ஒரு பயல் கேள்வி கேட்கவில்லை. இதைப்பற்றி எவரும் சிந்திக்கவில்லை. தமது கடந்த கால அனுபவத்தை ஒருதடவை திரும்பிப் பார்க்கவில்லை.

ஆனாலும் நம்புகிறார்கள். கண்மூடித்தனமாக நம்புகிறார்கள்.

என்னதான் அவர்கள் மாறாக நடந்தாலும் வெளியார் என்றால் நமது ஆட்களுக்கு இனிக்கிறது. அவர்களுடைய பொய்கள் கூட இனிக்கிறது.

ஆகவே, அவர்களை இவர்களுக்குப் பிடித்துப்போகிறது. நமக்கு விருப்பமானவர்கள் என்ன செய்தாலும் – எவ்வளவு அநீதியைச் செய்தாலும் அதையெல்லாம் கண்டும் காணாமலும் இருப்போம் அல்லவா. அதைப்போல இனிப்பானவர்கள் எத்தனை அநீதியாக நடந்தாலும் நமக்கு அதெல்லாம் உறைப்பதில்லை.

ஆகவே அல் ஹுசைனும் வெற்றியடைந்து விட்டார். இப்பொழுது ஈழத்தமிழர்களுடைய மனங்களிலும் அவர்களுடைய ஊடகங்களிலும் அல் ஹுசைனின் படங்களும் செய்திகளுமே பொலிந்து கிடக்கின்றன.

வாழ்க அல் ஹுசைன். வளர்க ஐ.நா. வீழ்க தமிழர். மறந்து போகக்கடவது போர்க்குற்றம்.

பகை மனதுக்கு நல்விதை எதுவும் தெரிவதில்லை என்று சொன்னேன்.

அப்படியா சங்கதி? என்று கேட்கிறார் பக்கத்தில் நிற்பவர்.

■ ம. அய்யம்பிள்ளை

வாசகர்களே!
நீங்கள் அனுப்பிவைக்கும் கருத்துப்பகிர்வுகளும் இப்பகுதியில் தொடர்ந்து வெளிவரும்.

# பிரதேச செயலகத்தின் குறுந்திரைப்பட விழா



சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் பெருமையோடு வழங்கும் "குறுந்திரைப்பட விழா" இடம்பெற்றது. இவ் விழா கடந்த செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் சு.முரளிதரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கலந்துகொண்டார்.

சிறப்பு விருந்தினராக மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம், நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்கள ஆணையாளர் தி.விஸ்வரூபன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கௌரவ விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சிவானந்தராஜா, சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி ஜி.ரஜீவ் ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்வின் வரவேற்புரையினை உதவிப் பிரதேச செயலர் நேசகுமாரி செல்வரட் ணம் வழங்கினார்.

"அபிராமி வயது - 11" என்னும் சிறுவர்களுக்கெதிரானவன்முறைக்கெதிரானகுறுந்திரைப்படத்தை பிரதம விருந்தினர் வெளியிட்டு வைக்க திறனாய்வை ஈழத்து திரைப்பட திறனாய்வாளர் அஜேசுராசா வழங்கினார். ஏற்புரையினை ஜேம.ஜோசப் மேரி (ஜோசித்தன்) வழங்கினார். தொடர்ந்து குறும் படத்திற்காக பணியாற்றிய கலைஞர் கௌரவிப்பும் இடம்பெற்றது. (48)

# செம்மணி இந்துமயானத்தின் தகனக் கொட்டகை புனரமைப்பு



செம்மணி இந்து மயானத்தின் தெற்கு புறமாக உள்ள மயானத்தில் சடலங்களைத் தகனம் செய்யும் கொட்டகை புனரமைப்பு செய்யப்பட்டுப் புதுப் பொலிவுடன் காட்சியளிக்கிறது.

செம்மணி இந்து மயான அபிவிருத்திச் சபை இதற்காக சுமார் மூன்று இலட்சத்து இருபத்தையாயிரம் ரூபாவை செலவு செய்துள்ளது. இதில் இரண்டு இலட்சம் ரூபாவை யாழ்ப்பாணம் தியாகி அறக்கொடை நிறுவனம் அன்பளிப்பாக வழங்கியது.

இம் மயான வளாகத்துக்குள் பல நிழல்தரும் மரங்கள் நாட்டப்பட்டுள்ளன. இவற்றைப் பராமரித்து வருவதற்கும் தியாகி அறக்கொடை நிறுவனமே நிதி உதவி அளித்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. அண்மையில் தியாகி அறக்கொடையின் சொர்ணாம்பிகை மண்டபத்தில் இடம்பெற்ற இந் நிறுவனத்தின் ஸ்தாபகரின் பிறந்த நாளின் போது கூட இம் மரங்களின் பராமரிப்புக்கென செம்மணி இந்து மயான அபிவிருத்தி சபையின் தலைவரிடம் நாற்பதாயிரம் ரூபா பணம் வழங்கப்பட்டது.

இக் கொட்டகை அமைந்துள்ள மயானக்காணி இரண்டு ஏக்கர் பரப்பளவைக் கொண்டதாகும். சில வருடங்களுக்கு முன்னர் பொதுமக்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட சுமார் நாற்பது இலட்சம் ரூபா செலவில் இக்காணிக்கான சுற்று மதில் அமைக்கப்பட்டது. செம்மணி மயான அபிவிருத்தி சபையின் இவ் வருடத்துக்கான பொதுக்கூட்டம் இம் மாத இறுதிப் பகுதியில் நடைபெறவுள்ளது. இதற்காக வடமாகாண சபை மற்றும் வலி.கிழக்குப் பிரதேச சபையின் முக்கியஸ்தர்களையும், அழைத்து அவர்களது ஒத்துழைப்புக்களையும், உதவிகளையும் பெற்றுக் கொள்ளவிருப்பதாக இச் சபையின் தலைவர் லயன் சின்னத்துரை இலட்சுமிகாந்தன் தெரிவித்துள்ளார்.

• சடலங்களை மின்சாரத்தில் தகனம் செய்யும் மின் உலை ஒன்றை அமைப்பது செம்மணி இந்து மயான அபிவிருத்தி சபையின் முக்கிய நோக்கமாக உள்ளது. (137)

# விளையாட்டு உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வு

ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரினின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்ட நிதியூடாக ஒதுக்கீடு செய்யப்பட்ட விளையாட்டு உபகரணங்கள் நேற்றுமுன்தினம் வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலகர் பிரிவுக்குட்பட்ட வெற்றிலைக்கேணி கிராமத்தில் அமைந்த றம்போ மற்றும் சென் செபஸ்ரியன் விளையாட்டு கழகங்களுக்கு நாடாளுமன்ற பிரதி குழுக்களின் பிரதி தலைவரும் ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய சந்திரகுமார் கழக வீரர்களிடம் கையளித்தார்.

இந்நிகழ்வில் மருதங்கேணி பிரதேச செயலருடன் ஈழமக்கள் ஜனநாயக கட்சி வடமராட்சி அமைப்பாளர் ரங்கனும் கலந்துகொண்டனர்.

புகழ்தான் நம்மைத் தேடி வரவேண்டும் நாம் அதைத் தேடிப் போகக்கூடாது. - எம்.ஜி.ஆர்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## என்னதான் வேண்டும் உங்களுக்கு?

தேவர் மகன் படத்தின் இறுதிக்காட்சியில், தன்னிடம் கத்தியை வாங்கிக்கொள்ள ஓடிவரும் வடிவேலுவைப் பார்த்து, “போங்கடா, போய்ப் புள்ளகுட்டிகளைப் படிக்க வைங்கடா” என்று சலிப்புடன் சொல்லியபடியே திரும்பிப்பாராமல் நடந்து செல்வார் கமல்ஹாசன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைச் சந்தித்துவிட்டுத் திரும்பிச் செல்லும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளும், அப்படியானதொரு சலிப்புடன்தான், “போங்கடா, போய் உங்கள் அரசுடன் பேசுங்கடா” என்று சொல்லிவிட்டுப் போய்க் கொண்டேயிருக்கிறார்கள்.

முந்தநாள் சுஸ்மா சொல்லிவிட்டுப் போனா. நேற்று அமெரிக்காவிலிருந்து வந்தவர் சொல்லிவிட்டுப் போனார். நாளை நரேந்திர மோடியும் யாழ்ப்பாணம் வந்து அதைத்தான் சொல்லிவிட்டுப் போவார்.

“அரசுடன் போய்ப் பேசுங்கள். 13ஆவது திருத்தத்திலிருந்து ஆரம்பித்து மாகாண சபைகளுக்கு வேண்டிய அதிகாரங்களைப் பெற்றுக்கொள்ளப் பாருங்கள். உரிய முறையில் பேசத் தெரிந்தால் தீர்க்க முடியாத பிரச்சினை என்றோ பெற்றுக்கொள்ள முடியாத தீர்வு என்றோ ஏதுமில்லை.... போய்ப் பேசுங்கள்...” என்று பாந்தமாக எடுத்துச் சொல்லிவிட்டுப் போகிறார்கள்.

இவர்களோ வடிவேலு பாணியிலேயே எவ்வளவு அடிகளை வாங்கினாலும், வலிக்காதது மாதிரியே முகத்தை வைத்துக் கொண்டு, “தன்னாட்சி, தனியலகு, சுயநிர்ணய சுயாட்சி என்று கிட்டத்தட்ட தனிநாடு போல ஒரு தீர்வை வைக்க சிங்கள அரசு மறுத்து வருகிறது.... சர்வதேசத்துக்கு விரைவில் இந்த அரசு மீதும் கோபம் வரப்போகிறது...” என்று தமிழ்மக்களிடம் வந்து சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

“சிங்கள அரசு தீர்வை வைக்க மறுத்து வருகிறது” என்று இவர்கள் சொல்வதைக் கேட்டு ஆவேசத்தை மட்டும் பாடுவதற்குத்தோதாகத்தான் தமிழ்மக்களை சிங்கள வெறுப்பிலேயே தொடர்ந்து மூழ்கடித்து வெகுளிகளாக வைத்துக்கொள்கிறார்கள்.

“சிங்களவனோடு நமக்கென்ன பேச்சு?” என்ற இனவாதத் திமிரிலும் வெறுப்பிலும் ஊறவைத்துக் காயப்போடப்பட்டிருக்கும் நம் மகாசனம், அரசு மறுத்துவரும் அந்தத் தீர்வு என்ன என்று இவர்களைக் கேட்பதில்லை.

அப்படிக் கேட்டுப் பார்த்திருந்தால் விளங்கியிருக்கும், “கிட்டத்தட்ட தனிநாடு மாதிரியான ஒரு தீர்வைத்தான் அவர்களாகவே வைக்க வேண்டும்” என்பதைத்தான் உட்கிடக்கையாக இவர்கள் வைத்திருப்பதை.

இவர்களுடன் பேசிப் பார்த்துவிட்டுச் செல்லும் வெளிநாட்டுப் பிரதிநிதிகள், இவர்கள் கேட்டுக் கொண்டிருப்பது நடைமுறைக்குச் சாத்தியமில்லை என்பதை விளங்கிக்கொண்டுதான், அதை உணர்த்தும் விதமாக,13ஆவது திருத்தத்திலிருந்து அரசுடன் பேசுங்கள் என்பதை நாசூக்காக சொல்லிவிட்டுப் போய்க் கொண்டிருந்தார்கள்.

இத்தனை வருசமாகியும் அது இவர்களுக்கு விளங்காதது போல, மீண்டும் “அ”விலிருந்து ஆரம்பித்து, “சிங்கள அரசு தீர்வை வைக்க மறுத்து வருகிறது” என்பதைக் கேட்டுவிட்டுத்தான், இவர்களுக்கு மட்டும் செல்லிக் கொண்டிருந்ததை அந்தப் பிரதிநிதிகள் இப்போது வெளிப்படையாகவே சொல்லிவிட்டுப் போகிறார்கள்.

இப்போது இவர்களுக்குச் சிக்கல். 13ஆவது திருத்தத்திலிருந்து போய்ப் பேச வேண்டி வந்துவிட்டால், துடைப்பக்கட்டையால் கூட தீண்ட முடியாது என்று சொல்லி விட்டோமே இப்போது மக்களுக்கு என்ன சொல்வது?

எனவேதான், 13வது திருத்தத்துக்குப் பதிலாக வேறொன்றைப் பற்றித்தான் பேசமுடியும் என்பதை மோடிக்கு கறாராகச் சொல்லப்போகிறார்களாம். அதாவது, “மாகாணசபை” என்பதற்கு அதே அதிகாரங்கள் சட்டங்களோடு “மாநில அரசு” என்றாவது பெயரை மாற்றித் தந்துவிடுங்கள் என்று கேட்டுக்கொள்ளப் போகிறார்கள் போலிருக்கிறது.

“என்ன கோதாரியாக இருந்தாலும் நடைமுறைக்குச் சாத்தியமானதை விளங்கிக்கொண்டு போய்ப் பேசுங்கள்; வெட்கத்தைப் பாராதீர்கள்” என்றுதான் மோடியும் சலிப்புடன் சொல்லிவிட்டுப் போவார்.

- ஆசிரியர்

# 19 ஆவது அரசியலமைப்பு சட்டமூலம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும்

## நாடாளுமன்றில் விஜித ஹேரத் தெரிவிப்பு

(கொழும்பு)

19 ஆவது அரசியலமைப்பு திருத்த சட்டமூலம் தயாரிக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளதுடன், அதனை விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாக அரசியலமைப்பு மறுசீரமைப்புக்காக நியமிக்கப்பட்ட குழுவின் அங்கத்துவமான விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

பிரதமர் தலைமையில் இந்த குழு நேற்றுமுன்தினம் மாலை கூடியது.

அரசியலமைப்பு மறுசீரமைப்பு குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழு இன்றும் கூடி ஆராயவிருந்த போதிலும், அந்தக் கூட்டம் நடைபெறவில்லை.

இது குறித்து குழுவின் அங்கத்தவரான நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத்திடம் வினவியபோது, அரசியலமைப்பு திருத்தங்கள் தொடர்பான பேச்சுவார்த்தைகள் அன்றே நிறைவடைந்ததாக சுட்டிக்காட்டினார்.

இந்த நிலைமையின் கீழ், எதிர் வரும் நாடாளுமன்ற தேர்தல் புதிய தேர்தல் முறைமையின் கீழ் நடாத்தப்பட வேண்டுமென்பதே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடாகும்.

எனினும், புதிய தேர்தல் முறைமையை துரிதமாக உருவாக்க முடியாது என்று ஒரு சில அரசியல் கட்சிகள் கருதுகின்றன.

தேர்தல் முறைமையில் மாற்றம் மேற்கொள்வது தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழு, நடைமுறை ரீதியாக எதிர்கொள்ள நேரிட்டுள்ள பிரச்சினைகளை தேர்தல்கள் ஆணையாளரின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், நேற்று முன்தினம் நடைபெற்ற ஐக்கிய தேசிய கட்சியின் செயற்குழு கூட்டத்தின்போது, ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதியின் பின்னர் நாடாளுமன்ற தேர்தலை எதிர்கொள்வதற்கு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

தேர்தல் முறைமையில் மாற்றம் மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்ட குழு, அடுத்த வாரத்தில் மீண்டும் கூடவுள்ளதாக அந்தக்குழுவின் அங்கத்தவரான விஜித ஹேரத் மேலும் கூறினார்.

# மன்னார் ஆயுர்வேத பாதுகாப்பு சபையின் செயற்றிட்டங்கள் தொடர்பில் ஆராய்வு

(மன்னார்)

மன்னார் ஆயுர்வேத பாதுகாப்புச் சபையின் 16 ஆவது பொதுக்கூட்டம், நேற்று ஆயுர்வேத வைத்தியர் செல்வ மகேந் திரன் தலைமையில் மன்னார் மாவட்ட செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தின் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட செயலாளர் எம்.வை.எஸ்.தேசபிரிய, சிறப்பு விருந்தினராக மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.ஸ்டான்லி டி மெல், கௌரவ விருந்தினராக லங்கா சித்தஆயுர்வேத மருத்துவக் கல்லூரி அதிபர் டாக்டர் ஜீவகுமார், வட இலங்கை சுதேச வைத்திய சபையின் தலைவர் டாக்டர் விக்னேஸ்வரா, மன்னார் மாவட்ட சுதேச மருத்துவ இணைப்பாளர் டாக்டர் கார்த்திகாயினி, டாக்டர் எஸ்.லோகநாதன், டாக்டர் கதிர்காமநாதன் உட்பட வடமாகாண ஆயுர்வேத பாதுகாப்புச் சபையின் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

இதன்போது அதிதிகள் உரை, அதிதிகள் கௌரவிப்பு, மூத்த சுதேச மருத்துவர்களை கௌரவித்தல், செயற்றிட்டங்கள் தொடர்பான ஆய்வுகள் என்பன இடம்பெற்றன. இதனைத் தொடர்ந்து நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு நடைபெற்றது. இதில் ஏகமனதாக பழைய நிர்வாக சபை உறுப்பினர்களே தெரிவு செய்யப்பட்டனர்.

இதன்போது ஆயுர்வேத நிர்வாக உறுப்பினர்களின் நீண்ட நாள் கோரிக்கைகளில் ஒன்றான மருத்துவத்திற்காக அபின் மற்றும் கஞ்சா பெறுவதில் உள்ள சிக்கல்கள் தொடர்பாக மாவட்ட செயலாளரின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது.

இது தொடர்பாக மாவட்ட செயலாளர் தெரிவிக்கையில், “கடந்த ஆண்டுகளின் ஆயுர்வேத மருத்துவத்துக்காக அபின் கணிசமான அளவு வழங்கப்பட்டுள்ளது. எனினும் இவ்வாண்டிலும் பதிவு செய்யப்பட்ட ஆயுர்வேத வைத்தியர்களுக்கு 9 கிலோ அபின் வழங்குவதற்கு அனுமதி பெறப்பட்டுள்ள போதிலும் தற்பொழுது கையிருப்பில் அபின் இல்லாததினால் அபின் கிடைப்பது தாமதமடையலாம்” என தெரிவித்தார்.

# 18 பொலிஸாருக்கு இடமாற்றம்

(கொழும்பு)

பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் மூவருக்கும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் 11 பேர் உள்ளிட்ட 18 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

பொலிஸ் ஊடகப் பேச்சாளராக கடமையாற்றிய அஜித் ரோஹன, கொழும்பு வடக்கு பிராந்தியத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பொலிஸ் அத்தியட்சகர்கள் மூவருக்கும் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக புதிய பொலிஸ் ஊடகப் பேச்சாளரான, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர தெரிவித்தார்.

# வாழ்வாதாரத்தை உயர்த்த 370 பேருக்கு நிதியுதவி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கில் 370 பேருக்கு நிதியுதவி வழங்கப்படவுள்ளதாக மாந்தை கிழக்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் மகாலிங்கம் தயாநந்தன் நேற்று தெரிவித்தார்.

கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சர் றிசாத் பதியுதீனின் நிதியதவியுடன் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கில் இந்த வாழ்வாதாரக் கொடுப்பனவுகள் இந்த வாரமளவில் வழங்கப்படவுள்ளன.

இதன் மூலம் கோழிக்குஞ்சுகளை கொள்வனவு செய்து அதன் மூலம் தமது வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். இதற்காக, 10 ஆயிரம் ரூபா வீதம் 370 பேருக்கு கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன என்று அவர் மேலும் கூறினார்.

# பலநோக்கு கூட்டுறவுச்சங்க ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு நகரில் உள்ள பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் ஊழியர்கள் நேற்றுக்காலை முதல் பணி பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றுக் காலை தொடக்கம் மட்டக்களப்பு நகரில் உள்ள அலுவலகம் மற்றும் கடைத்தொகுதிகளை பூட்டி இந்த பணி பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்று பிற்பகல் பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் கட்டட தொகுதிக்குள் நுழைந்த அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் தலைவர் ஒருவர் அங்கு கடமையில் இருந்த முகாமையாளரை தகாத வார்த்தைகளினால் திட்டியதுடன் ஊழியர்களையும் திட்டியதாகவும் ஊழிர்கள் தெரிவித்தனர்.

அத்துடன் பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் வர்த்தக நிலைய தொகுதிக்குள் குறித்த அரச சார்பற்ற நிறுவனத்தின் தலைவி முறையற்ற வகையில் வர்த்தக நிலையங்களைப் பெற்றுள்ளதுடன் இரண்டு வருடமாக அதற்கான வாடகைகளையும் செலுத்தவில்லையெனவும் தெரியவந்துள்ளது. இது தொடர்பில் முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மேலும் கிழக்கு மாகாண விவசாய, கூட்டுறவு அமைச்சர் கி.துரைராஜசிங்கத்தின் கவனத்துக்கு கொண்டுசெல்லப்பட்டதை தொடர்ந்து அவரின் பணிப்பின் பேரில் அங்கு சென்ற கிழக்கு மாகாணசபை உறுப்பினர் பிரசன்னா இந்திரகுமார் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடினார்.

இதன்போது குறித்த விடயம் தொடர்பில் உரிய விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என அமைச்சர் வழங்கிய உறுதிமொழியையடுத்து பணிப்பகிஸ்கரிப்புப்போராட்டம் நிறுத்தப்பட்டு அலுவலகம் மற்றும் கடைத்தொகுதிகள் திறக்கப்பட்டன.

# கண்ணீர் விட்ட எவரும் கைவிடப்படுறதில்லை

**நாங்க யாழ்ப்பாணத்த விட்டுப் போனபோது இருந்த கோவம் இப்ப இல்லை. அந்தக் கோவத்தை பிள்ளைகளுக்கும் கொடுத்தா என்னாகும்? நாம எப்ப ஒற்றுமையா இருக்கிறது? இனி என்ன செய்யப்போறம்? எண்டு யோசிக்கவே விரும்பிறன். எங்களப் பொறுத்தவரை நாங்கள் யாழ்ப்பாணத்து மக்கள். நாங்க யாழ்ப்பாணத்துக்கு வாறதும் யாழ்ப்பாணத்தில இருக்கிறதும் எப்படி எண்டு நாங்க யோசிக்கிறம்.**



**- ஸகசதுல்ல ஜதூரோஸ்**

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் ஸகசதுல்ல ஜதூரோஸ். ஜதூரோஸ்க்கு வயது 60. இப்போது புத்தளம் வாசி. ஆனால், அவருடைய நினைவும் கனவும் யாழ்ப்பாணத்தில்தான். 1990 இல் யாழ்ப்பாணத்திலிருந்து விடுதலைப்புலிகளின் அறிவிப்பை அடுத்து வெளியேறியவர்களில் ஸகசதுல்ல ஜதூரோஸின் குடும்பமும் ஒன்று. நீண்டகால அகதி வாழ்க்கை – பின்னர் புத்தளத்திலேயே காணி, வீடு என்று நிரந்தர வாழ்க்கைக்கு மாறி, புத்தளம் வாசியாகிவிட்டார் ஸகசதுல்ல ஜதூரோஸ். 20 ஆண்டுகளாக யாழ்ப்பாணத்துக்கு வெளியே வசித்து வரும் ஸகசதுல்ல ஜதூரோஸ் யாழ்ப்பாணத்தில் புடவை வியாபாரத்துக்காக வந்து செல்கிறார். அவருடன் கூடவே அவருடைய பிள்ளைகளும் வந்து செல்கிறார்கள். நடமாடும் வியாபாரியாகத் தொழில் செய்துவரும் ஸகசதுல்ல ஸதூரோஸையும் அவருடைய பிள்ளைகளையும் சந்தித்து உரையாடினேன்.

**1**

## நேர்கண்டவர் - கருணாகரன்

2010 இல் பயணமொன்றின்போது பேருந்தொன்றில் வழிப்பயணியாகச் சந்தித்தேன் ஸரமகத்துல்லாஹ்வை. 20 ஆண்டுகளுக்குப் பிறகு யாழ்ப்பாணத்துக்கு (தன்னுடைய சொந்த ஊருக்கு) வந்து திரும்பிக் கொண்டிருந்தார். பேச்சுக் கொடுத்ததுதான் தாமதம், உடைப்பெடுத்தது அணை. மகிழ்ச்சி, துக்கம், நம்பிக்கை, ஏமாற்றம், சலிப்பு, அடுத்து என்ன செய்வது என்று தெரியாத தடுமாற்றம் என பலவிதமான உணர்ச்சிக் கொந்தளிப்போடு பேசினார்.

19[illegible] இல் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேற்றப்பட்ட ஸரமகத்துல்லாஹ் இலங்கையின் வடமேற்குக் கடலை அண்மித்த புத்தளத்தில் 20 ஆண்டுகளாக அகதியாக அலைந்து கொண்டிருந்தார். இப்படி அலைந்து கொண்டிருந்தவருக்கு யுத்தம் முடிவுக்கு வந்தது இனித்தது. மீண்டும் யாழ்ப்பாணத்துக்குச் சென்று தன்னுடைய வீட்டில் குடியேறலாம் என்று நம்பினார். இந்த நம்பிக்கை அவருக்கு மேலும் மகிழ்ச்சியூட்டியது. ஆனால், அந்த மகிழ்ச்சி நீடிக்கவோ நிரந்தரமாகவோ இல்லை. அவருடைய நம்பிக்கைக்கு மாறாகவே ஸரமகத்துல்லாஹ்வின் பிள்ளைகள் சிந்தித்தார்கள்.

அவர்களுக்கு யாழ்ப்பாணம் இ[illegible]க்கவில்லை. ந[illegible]க்கையூட்டவில்லை. எந்தப் பிடிப்பையும் வழங்கவில்லை. ஸரமகத்துல்லாஹ்வுக்கே யாழ்ப்பாணம் இனிமையானது. அவர் யாழ்ப்பாணத்தில் பிறந்தார். வளர்ந்தார். படித்தார். விரட்டப்பட்டு வேறு இடங்களில் நீண்டகாலம் வாழ்ந்தாலும் அவருக்குச் சொந்த ஊர் யாழ்ப்பாணமே. அவருடைய விதையும் வேர்களும் யாழ்ப்பாணத்தில்தான். எனவே, எங்கெல்லாம் இருந்தாலும் யாழ்ப்பாணத்திற்தான் அவருடைய மனமிருக்கிறது. அதனால் தன்னுடைய சொந்த ஊருக்கு மீண்டும் வர துடிக்கிறார். இடைவிடுபட்டுப்போன வாழ்க்கையை அவர் சமனிலைப்படுத்துவதற்காக விரும்புகிறார்.


ஆனால், பிள்ளைகளுக்கு யாழ்ப்பாணம் புதிது. அங்கிருந்து வெளியேற்றப்பட்டது மட்டும் மங்கிய நினைவு. அதற்கப்பால் யாழ்ப்பாணத்தைப் பொறுத்து அவர்களுக்கு ஒன்றுமில்லை. அவர்கள் வளர்ந்தது, படித்தது, விளையாடியது, நண்பர்களோடு கூடித்திரிந்தது எல்லாமே யாழ்ப்பாணத்திற்கு வெளியே - புத்தளத்தில் என்பதால் அவர்களுக்கு அது ஊர் நினைவாகிவிட்டது. அது சிறு நகரந்தான் என்றாலும் அதை விட்டுவருவதற்கு அவர்கள் தயாராக இல்லை. கணவனின் பக்கம் நிற்பதா, பிள்ளைகளின் பக்கமாக நிற்பதா என்று தடுமாறிக்கொண்டிருக்கிறார் ஸரமகத்துல்லாஹ்வின் மனைவி. ஸரமகத்துல்லாஹ் தனித்து விட்டார்.

**நீண்டகாலத்துக்குப் பிறகு யாழ்ப்பாணத்துக்கு வந்திருக்கிறீங்கள் - யாழ்ப்பாண நிலைமைகள் எப்படியிருக்கு? யாழ்ப்பாணத்துக்கு நிரந்தரமாகவே வருவதற்கு முயற்சிக்கவில்லையா?**

யாழ்ப்பாணத்துக்கு வரும்போது எனக்கு ஏற்படும் சந்தோசத்தைச் சொல்லவே முடியாது. அவ்வளவு மகிழ்ச்சி. நெஞ்சு நிரம்பச் சந்தோசம். நான் பிறந்து வளந்த ஊர் அல்லவா! சொந்த ஊருக்கு வரும்போது யாருக்குத்தான் மகிழ்ச்சி வராது, சொல்லுங்க.

எத்தனை வயசானாலும் சொந்த ஊர் எண்டால் அது சந்தோசமாத்தான் இருக்கும். நான் யாழ்ப்பாணத்தில்தான் பிறந்தேன். என்னுடைய வாப்பா, உம்மா, காக்கா, தம்பி, தங்கைச்சி எல்லாருமே யாழ்ப்பாணத்திலதான் பிறந்தாங்க. வாப்பாவோட வாப்பா, அவரோட வாப்பா எல்லாருமே யாழ்ப்பாணத்தில் தான் பிறந்து வளந்தாங்க.

நான் யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரியில் படித்தேன். அந்த நாளையில இருந்த யாழ்ப்பாணமே வேறு. அப்போது முஸ்லிம்கள் இல்லாத யாழ்ப்பாண வாழ்க்கை கிடையாது. நகை செய்வதாக இருந்தாலும் சரி,





பாத்திரங்களைச் சீர்ப்படுத்திறதாக இருந்தாலும் சரி, புடவைகளை வாங்கிறதாக இருந்தாலும் சரி, வீட்டுப் பொருட்களை வாங்கிறதாக இருந்தாலும் சரி, அம்மி ஆட்டுக்கல் கொத்திறதாக இருந்தாலும் சரி எல்லாத்துக்கும் முஸ்லிம்கள்தான் தேவையாக இருந்தது.

நல்ல மதிப்பாக முஸ்லிம்கள் இருந்தாங்க. நல்ல அன்பாக தமிழர்களும் மதிச்சாங்க. அப்ப தமிழ், முஸ்லிம் என்ற பேதமெல்லாம் கிடையாது. நான் ஒருபோதுமே என்னை ஒரு முஸ்லிமாக உணர்ந்ததேயில்லை. ஆனா பள்ளிக்குப் போவோம். தொழுகை செய்வோம். அதெல்லாம் வேற. ஆனா, சந்தையில, கடைத்தெருவில, கூட்டாளிகள் வட்டத்தில எல்லாம் நாங்க எல்லாருமே ஒண்ணுதான்.

எனக்கு எவ்வளவோ நண்பர்கள் தமிழர்கள்தான். தருமலிங்கம், சின்னையா, அருமைத்துரை, குலநாயகம், எட்வேட், பொன்னம்பலம், காந்தராசா, துரை, சாமிநாதன், யோசேவ்... எண்டு ஏராளம் கூட்டாளிகள் இருந்தாங்க.

**இப்ப நான் வந்து அவங்களைத் தேடினால் ஆட்களைப் பிடிக்கவே முடியவில்லை. சிலர் இறந்து விட்டார்கள். சில ஆட்கள் வெளிநாடுகளுக்குப் போயிட்டாங்க. சிலபேர் எங்கேயென்றே தெரியாது. குமாரத்தம்பி என்றவரை மட்டும் பார்த்தேன்.**

நான் வந்தது அவசரமான பயணம். வியாபாரத்துக்காக வந்திருக்கிறோம். நடமாடும் வியாபாரம். பொருட்களை வைப்பதற்கும் எடுப்பதற்கும் பாதுகாப்பில்லாத சூழல். அதற்குள்தான் வீடு. காணி எல்லாத்தையும் போய்ப்பாத்தது.

பாருங்க, என்னோட இடத்திலேயே நான் இப்படி ஆயிருக்கன். ஆனா இப்ப நான் இதுக்கெல்லாம் கவலைப்படல்லை. காலம் மாறியிருக்கில்ல. நான் யாழ்ப்பாணம் வந்திருக்கிறன். ஆனா, இதுக்குள்ள நாம என்னத்தை எல்லாம் செஞ்சிருக்கம். அதுதான் முக்கியம். எவ்வளவு இழப்புகள்? எவ்வளவு சோகங்கள்? எவ்வளவு அலைச்சல்கள்?

முந்தி யாழ்ப்பாணத்தில துணை மேயராக எல்லாம் முஸ்லிம்கள் இருந்திருக்கிறாங்க. பெரிய படிப்பாளிகளாக, நீதிவானாகக்கூட இருந்திருக்கிறாங்க.

**ஆட்கள் மாறீட்டாங்க. நிலைமை மாறீட்டுது. பாதிப்புத்தான். நடந்தது பெரிய போர். பெரிய பெரிய காரியங்கள். நாம் கட்டுப்படுத்த முடியாத சங்கதிகள். எப்பவும் மனிசன் எதையும் கட்டுப்படுத்த முடியாத ஒரு நிலைமைக்குப் போறானோ அப்பவே இந்த மாதிரி துன்பங்கள்தான் கிடைக்கும். நமக்குக் கிடைச்சது அப்பிடிப்பட்ட துன்பந்தான்.**

ஆ.. யாழ்ப்பாணத்தைப் பத்திக் கேட்டீங்க. யாழ்ப்பாணம் நல்லாத்தான் இருக்கு. ஆனா இன்னும் அது மாறணும். அது வளராமல் அப்பிடியே இருக்கு. புத்தளத்துக்கு நாங்க போன போது அங்கே அவ்வளவு பெரிய ரவுண் கிடையாது. ஆனா, இப்ப புத்தளத்தப் பாத்தீங்கன்னா, நீங்களே ஆச்சரியப்படுவீங்க. மரம் வளருற மாதிரி கிசிகிசி எண்டு வளந்திருக்கு. ஆனா, யாழ்ப்பாணம் அப்பிடியில்ல.

நான் யாழ்ப்பாணத்து ஆள்தான். யாழ்ப்பாணத்துக்கு வரலாம் எண்டவுடனே வந்தேன். ஆனா வீடில்லை. காணி எல்லாம் பழுதாகிட்டுது. திருத்தணும். அதுக்குப் பணம் வேணும். இப்ப யாழ்ப்பாணத்துக்கு வந்து வியாபாரம் பண்ணுறன். புள்ளைகளையும் கூட்டிட்டு வந்திருக்கிறன். ஆனா இங்க தங்க முடியாது. வீட்டைத் திருத்தணும். அதுக்குப் பிறகுதான் இங்க வரலாம். அதிலயும் பிரச்சினை இருக்கு...

**ஏன்? மீள் குடியேற்ற நடவடிக்கைகளில் நீங்கள் இணைந்து கொள்ளவில்லையா? வீட்டைத் திருத்திக் கொள்ளலாம். இப்போது அதற்கான உதவிகளைச் செய்கிறார்களே!**

முன்னாடி எண்டால் வந்திருக்கலாம். பத்து இருபது வருசத்துக்கு முந்தி எண்டால். இப்ப பிள்ளைகள் வளந்திருக்காங்க. நாங்க யாழ்ப்பாணத்தை விட்டுப் போகும் போது மூத்த மகனுக்கு எட்டு வயது. மற்றவனுக்கு ஆறு. அடுத்தது மகள். கைப்பிள்ளையாக் கொண்டு போனம். கடைசி புத்தளத்தில் பிறந்தான்.

எல்லாருமே புத்தளத்தில்தான் வளந்தாங்க. அவங்களுக்கு யாழ்ப்பாணம் தெரியாது. பெரிய ஆளுக்கு மட்டும் கொஞ்சம் தெரியும். அவனுக்கு ஊருக்கு வர கொஞ்சம் விருப்பம். ஆனா, அவன்ர கூட்டாளிகள் அங்க - புத்தளத்தில், மற்றவங்களுக்கும் அப்படித்தான். அங்க இருக்கத்தான் அவங்களுக்கு விருப்பம். இப்ப யாருக்குமே யாழ்ப்பாணத்துக்கு வர இஸ்ரமில்லை.

(மீதி நாளைய முரசில்)

# ஐ.நா. தலையீடு இல்லாமல் உள்நாட்டு விசாரணை

## ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

ஐ.நா. அதிகாரிகளின் தலையீடு இல்லாத உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையை அடுத்த மாதத்துக்குள் நிறுவப் போவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பிரித்தானியாவுக்குப் பயணம் மேற்கொண்டிருந்த அவர், பிபிசி சிங்கள சேவையான சந்தேசயவுக்கு அளித்த செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

போர்க்குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கான உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையை இன்னும் ஒரு மாதத்துக்குள் நிறுவமுடியும் என்று நம்புகிறேன்.

அனைத்துலக அழுத்தங்கள் இருந்தாலும், ஐ.நா. விசாரணையாளர்கள் இதில் தொடர்புபட மாட்டார்கள்.

மனிதஉரிமை மீறல்கள் தொடர்பாக விசாரிக்கும் இந்த உள்நாட்டு விசாரணைக் குழு, காத்திரமாகவும், சமமாகவும், சட்டரீதியாகவும், நடுநிலையாகவும், விசாரணைகளை மேற்கொள்ளும் என்று நம்புகிறேன்.

ஐ.நாவின் ஆலோசனைகள் பெறப்படும். ஆனால், இந்த விசாரணையில் அவர்களின் தலையீடுகள் தேவையற்றது.

இந்த விவகாரங்களில் அனைத்துலக கருத்தை வெற்றி கொள்வதற்கு, இலங்கை மக்களிடையே, நல்லிணக்கம், சகோதரத்துவம், கூட்டு வாழ்க்கை, மற்றும் நட்புறவை ஊக்குவிக்கும் புதிய பயணம் ஒன்றை தொடங்க நாம் எதிர் பார்க்கிறோம். என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# சீன விவகாரத்தில் புதிய அரசு நியாயமாக நடக்கவில்லை



(கொழும்பு)

புதிய அரசாங்கம் சீன விவகாரத்தில் நியாயமாக நடந்து கொள்ளவில்லை என்றும், சீனாவை குற்றவாளி போல நடத்துவதாகவும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குற்றம் சாட்டியுள்ளார்.

ஹொங்கொங்கில் இருந்து வெளியாகும் சவுத் சைனா போஸ்ட் நாளிதழுக்கு அளித்துள்ள தனிப்பட்ட செவ்வி ஒன்றிலேயே மகிந்த ராஜபக்ஷ இவ்வாறு கூறியுள்ளார்.

இலங்கையின் புதிய அரசாங்கம் தேவையின்றி உள்நாட்டு அரசியலுக்குள் சீனாவை இழுத்துள்ளது. இது நியாயமற்றது.

சீனா வழங்கிய உதவிகளுக்காக இவர்கள் நன்றி கூறக் கடமைப்பட்டவர்கள்.

ஆனால், இவர்கள் குற்றவாளியைப் போல சீனாவை நடத்துகிறார்கள் என்றும் அவர் விசனம் வெளியிட்டுள்ளார்.

# 86 இந்திய மீனவர்களை விடுவிக்க ஜனாதிபதி உத்தரவு

இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்கள் 86 பேரையும் விடுதலை செய்யுமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகச் செயலகம் அறிவித்துள்ளது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை விஜயத்தை முன்னிட்டு நல்லெண்ண அடிப்படையிலேயே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதனைப் போன்று இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்களையும் விடுதலை செய்ய வேண்டும் என ஜனாதிபதி ஊடகச் செயலகம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சீனாவின் தலையீடுகள் குறித்து இலங்கையுடன் மோடி பேசுவார்

(கொழும்பு)



பிராந்தியத்தில் அதிகரித்து வரும் சீனாவின் தலையீடுகள் குறித்து, இலங்கைக்கான விஜயத்தின் போது, இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி இலங்கை அரசாங்கத்துடன் பேச்சு நடாத்துவார் என்று இந்திய பாதுகாப்பு நிபுணர் குவாமர் அகா தெரிவித்துள்ளார்.

இந்திய செய்தி நிறுவனமான ஏ.என்.ஐ.க்கு அளித்துள்ள செவ்வியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,


இந்தப் பிராந்தியத்தில் தனது பாதுகாப்புத் தளங்களை அமைப்பதன் மூலம் இந்தியாவைச் சுற்றிவளைப்பதே, சீனாவின் திட்டமாகும்.

தனியே இந்தியா மட்டுமன்றி, இலங்கையும் கூட தனது நாட்டை சீன இராணுவம் பயன்படுத்துவதை விரும்பவில்லை.

இலங்கையின் புதிய அரசாங்கம் இதையெல்லாம் விரும்பவில்லை. துறைமுகங்கள், அணைக்கட்டுகள் மற்றும் ஏனையவற்றை சீனா இந்தப் பிராந்தியத்தில் நிறுவுவது எமக்குப் பெரும் கவலையை அளிக்கிறது. அவர்களின் கடற்பயண வழிகள், பட்டுப்பாதை, வீதி இணைப்புகள், தொடருந்துப் பாதை இணைப்புகள், எல்லாமே அடிப்படையில் இந்தியாவை சுற்றிவளைக்கும் திட்டத்தின் ஒரு பகுதி தான். இந்தியப் பிரதமர் இந்த விவகாரங்கள் குறித்து கலந்துரையாடுவார் என தெரிவித்துள்ள அவர்

இந்தியாவுக்கு எதிராக தமது நாட்டை மற்றொரு நாடு பயன்படுத்திக் கொள்வதற்கு அனுமதிக்கப் போவதில்லை என்று இலங்கை வாக்குறுதி அளித்திருக்கிறது. என்றும் தெரிவித்துள்ளார்.

# மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை புதிய அரசு நிறைவேற்ற வேண்டும்



(கொழும்பு)

நாட்டு மக்கள் பொதுத் தேர்தல் ஒன்றை கேட்கவில்லை. மாறாக மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளே நிறைவேற்றப்பட வேண்டும் இது தொடர்பில் புதிய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். என மாதுலுவாவ சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் 100 நாள் வேலைத்திட்டத்தில் பொதுத் தேர்தல் ஒன்றுக்குச் செல்வது குறித்து நாம் பேசவில்லை. அதேவேளை மக்களும் பொதுத் தேர்தல் ஒன்றினை கேட்கவில்லை. தேர்தல் ஒன்றுக்குப் போவது குறித்து எமக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படல் வேண்டும். இது குறித்து தற்போது ஊடகங்களில் பரவலாகப் பேசப்பட்டுவருகின்றது.

மகிந்த ராஜபக்ஷவால் ஊழல், பனர்,ஊடக பிரசாரம் மூலம் வெற்றி பெற முடிந்து இருக்குமாயின் தோல்வியை அடைந்திருக்கமாட்டார். எந்த அரசாங்கம் குற்றம் செய்தாலும் அது குற்றம் தான். குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை வழங்கப்படல் வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. அவர்களுக்கு மன்னிப்போ, இரக்கமோ காட்டக்கூடாது.

முன்னைய அரசாங்கம் தவறு செய்திருந்தால் ஒரு தண்டனை என்றால் தற்போதைய அரசாங்கம் குற்றமிழைத்திருந்தால் இரட்டிப்பு தண்டனை வழங்க வேண்டும். தற்போதுள்ள அரசாங்கத்திற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை காணப்படுகின்றது. அதனைப் பயன்படுத்தி மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற புதிய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டிருந்தார்.

# மத்திய வங்கி ஆளுநருக்கு எதிராக இலஞ்ச ஊழல் முறைப்பாடு பதிவு



மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனுக்கு எதிராக இலஞ்ச மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த சமரவீர தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே இதனை அவர் தெரிவித்திருந்தார்.

தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் முறையற்ற வகையில் பணமுறிகளைக் கையாண்டுள்ளார். தனது மருமகனுக்கு 1000 மில்லியன் ரூபாக்களை 30 வருட கடனடிப்படையில் வழங்கியுள்ளார். இது நிதிப் பரிமாற்ற விதிகளுக்கு புறம்பானது.

ஆகவே இந்த ஊழல் குறித்து விசாரணைகளை நடத்தும் வகையில் முறைப்பாடு ஒன்றினை பதிவு செய்துள்ளோம். மேலும் இதனுடன் அரசாங்கத்தில் முக்கிய பொறுப்பில் உள்ளவர்களுக்கும் தொடர்பு காணப்படுகின்றது. ஆகவே நல்லாட்சியில் ஏற்பட்டுள்ள பாரிய நிதி மோசடி இது என்பது குறிப்பிடத்தக்கது எனவும் அவர் தெரிவித்தார்.

# நகரத் திட்டம் இடைநிறுத்தம் 3.8 இலட்சம் டொலர் இழப்பு

## எச்சரிக்கிறது சீனா



(கொழும்பு)

கொழும்புத் துறைமுக நகரத் திட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளதால், தமக்கு நாளொன்றுக்கு, 3.8 இலட்சம் டொலர் இழப்பு ஏற்படுவதாக்வும், தமது முதலீட்டைப் பாதுகாப்பதற்காக சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாகவும், சீன நிறுவனம் எச்சரித்துள்ளது.

கொழும்புத் துறைமுக நகர கட்டுமானப் பணியில் ஈடுபட்டுள்ள, சீன தொடர்பாடல் கட்டுமான நிறுவனமே இந்த எச்சரிக்கையை நேற்று முன்தினம் விடுத்துள்ளது.

புதிய அரசாங்கத்தினால் கடந்த 6 ஆம் திகதி இந்த திட்டப்பணிகள் இடைநிறுத்தப்பட்டதில் இருந்து, இன்று வரை 2.33 மில்லியன் டொலர் இழப்பு தமக்கு ஏற்பட்டுள்ளதாகவும் சீன நிறுவனம் தெரிவித்துள்ளது.

இறுதியான முடிவு எப்போது அறிவிக்கப்படும் என்று இது வரை எமக்குத் தகவல் தரப்படவில்லை. திட்டப்பணிகளை இடைநிறுத்தியதால்; நாளொன்றுக்கு எமது நிறுவனத்துக்கு 380,000 டொலர் நேரடி இழப்பு ஏற்பட்டுள்ளது.

மறைமுகமாக ஏற்படும் இழப்பு விபரம் இன்னமும் கணக்கிடப்படவில்லை. பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதால், பாரிய பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. குறிப்பாக , உள்ளூரில் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ள தொழிலாளர்களுக்கு சம்பளம் வழங்குவதில் பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

இந்தப் பணிகளை விரைவாக ஆரம்பிக்காவிட்டால், கடலில் கொட்டி நிரவப்பட்ட கற்களும் மண்ணும், கடல் அலைகளினால் இழுத்துச் செல்லப்பட்டு விடும். உண்மையில் கடல் அலைகள் பணத்தை கடலுக்குள் இழுத்துச் செல்கின்றன.

நாளாந்தம் ஏற்படும் நேரடி இழப்புடன், மறைமுக இழப்பையும் சேர்த்து, இழப்புகள் அதிகரித்து வருகின்றன.

எமது நிறுவனத்தை ஓரங்கட்டினால், எம்மைப் பாதுகாக்க சட்ட நடவடிக்கையில் இறங்குவோம் என்றும் சீன நிறுவன உயரதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

# கல்வி வளர்ச்சியில் அக்கறையுடன் செயலாற்றுகிறார் சந்திரகுமார் எம்.பி

## கிளி.வல்யக்கல்விப்பணிப்பாளர் முருகவேள் தெரிவிப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி வளர்ச்சிக்காக மிகவும் அர்ப்பணிப்பு மிக்க பணியாற்றுகின்றார் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் என கிளிநொச்சி வலயக கல்விப் பணிப்பாளர் க.முருகவேள் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கிளிநொச்சி வலயக் கல்வித்திணைக்களத்தில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவுக்கு கிளிநொச்சி வலயத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட நூறு வறிய மாணவர்களுக்கு தலா இரண்டாயிரத்து ஐநூறு ரூபா பெறுமதியில் கற்றல் உபகரணத் தொகுதிகளை வழங்கி வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி வளர்ச்சியில், மாணவர்களின் கல்வி நிலையை உயர்த்துவதற்கு அயராது உழைத்திருக்கிறார். அதற்கு பாடசாலை மாணவர்களின் பெறுபேறுகள் எடுத்துக்காட்டாகவுள்ளன. பௌதீக வளப்பற்றாக்குறையாக இருந்தாலும் சரி ஆசிரியர் வளப்பற்றாக்குறையாக இருந்தாலும் சரி கடந்த காலங்களில் விரைந்து சிறந்த தீர்மானங்களை மேற்கொண்டு அவற்றை நிவர்த்தி செய்து வந்திருக்கின்றார். ஒரு வலயக்கல்விப் பணிப்பாளராக எனக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து செயற்பாடுகளை முன்னெடுக்க உழைத்திருக்கின்றார் எனத்தெரிவித்த வலயக் கல்விப்பணிப்பாளர்.

கிளிநொச்சி கல்வி வலயம் தற்போது பெரும் ஆசிரியர் வளப்பற்றாக்குறையை எதிர்நோக்கி வருகிறது. இந்த பிரச்சினை தொடர்பாக எமது பதவி நிலை உத்தியோகத்தர்கள் அனைவரும் இணைந்து மாகாணக் கல்வி அமைச்சுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளோம். நலிவடைந்து வரும் கிளிநொச்சியின் கல்வி நிலைமையினை கருத்தில் எடுத்து ஆசிரியர் வளப்பற்றாக்குறையை நிவர்த்தி செயயுமாறு வேதனையுடனும், கவலையுடனும் கோரிக்கையை அனுப்புகின்றோம் என அக்கடிதத்தில் குறிப்பிட்டிருக்கின்றோம் எனத்தெரிவித்தார்.


கிளிநொச்சி மாவட்டத்தின் கல்விக்காக அயராது உழைத்த நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமாருக்கு கல்விச் சமூகத்தின் சார்பாக நாம் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம் என்றார்.

# "ஸ்கைலப்" விளையாட்டு கழகத்தினரிடம் மைதானம் கையளிக்கும் நிகழ்வு



நாடாளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய தேசியக் கட்சியின் வன்னி மாவட்ட பிரதான அமைப்பாளருமான சட்டத்தரணி ஹுனைஸ் பாறூக் இன் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட பாலிநகர் கிராமத்திற்கு விளையாட்டுமைதானத்தை அமைத்து அதை பாலிநகர் ஸ்கைலப் விளையாட்டுக் கழகத்தினரிடம் உத்தியோகபூர்வமாக அண்மையில் கையளித்தார்.

இந்நிகழ்வின் போது மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிந்தாகரன் மாந்தை கிழக்கு பிரதேச சபை உறுப்பினர், மற்றும் பாலிநகர் விளையாட்டுக் கழகத்தினர், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (160)



இலங்கைப் போக்குவரத்துச் சபை ஊழியர்களின் பிள்ளைகளுக்கான கௌரவிப்பு நிகழ்வின் போது....

# முதியவர்களுடன் இணைந்து பிறந்தநாள் கொண்டாட்டம்

## மருத்துவ மாணவனின் பாசத்தின் வெளிப்பாடு

(திருநெல்வேலி)

தனது பிறந்த தினத்தைக் கைதடி அரச முதியோர் இல்லத்தில் தங்கி வாழும் முதியவர்களுடன் இணைந்து கொண்டாடுவதற்கு விரும்பிய யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவன் கடந்த 3 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை முதியோர் இல்லத்தில் அவரது பிறந்த நாளைக் கொண்டாடி மகிழ்ந்தார்.

இவர் மருத்துவ பீடத்தின் மூன்றாம் வருட மாணவராவார். தனது நண்பர்களுடன் முதியோர் இல்லத்துக்கு வருகை தந்த இவர் கேக் வெட்டி, சிற்றுண்டிகள் வழங்கி, தேனீர் விருந்தளித்து மிகவும் மகிழ்ச்சியாகப் பிறந்த தினத்தைக் கொண்டாடினார்கள்.

பிறந்தநாளை முன்னிட்டு முதியோர் இல்லத்தில் இடம் பெற்ற ஆடல், பாடல் நிகழ்வுகளில் இல்லத்தை சேர்ந்த முதியவர்களும் கலந்து கொண்டு சிறிப்பித்தனர். பழைய சினிமாப் பாடல்கள் பலவற்றை அவர்கள் மிகவும் இனிமையாகப் பாடினர்.

பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவன் பல் குரலில் பேசி அங்கு குழுமியிருந்த அனைவரையும் மகிழ்வித்தான். மட்டக்களப்பை சொந்த இடமாகக் கொண்ட இவர் தனது மருத்துவப் படிப்புக்காக யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ளார்.

தம்மை நினைவு கூர்ந்து கைதடி முதியோர் இல்லத்துக்கு வந்து தம்முடன் இணைந்து பிறந்தநாளைக் கொண்டாடிய மருத்துவப் பீட மாணவனை அனைத்து முதியோர்களும் சேர்ந்து வாழ்த்தியதுடன் அவருக்குத் தமது நன்றியையும் தெரிவித்துக் கொண்டனர். (137)

# இளைஞர் குழுக்களின் அட்டகாசம்; வீதிகளை கடக்க மக்கள் அச்சம்

கிளிநொச்சி நகரை அண்மித்த கனகபுரம் மற்றும் உதயநகரை இணைக்கும் சந்தியில் கடந்த சில நாட்களாக மாலை மற்றும் இரவு வேளைகளில் இளைஞர் குழுக்களின் அட்டகாசம் அதிகரித்துள்ளது.

இதனால் இவ் வீதியூடாக பயணிக்கும் சிறுவர்கள், பெண்கள், மாணவர்கள், மாணவிகள் அச்சத்துடன் இந்த இடத்தைக் கடக்கவேண்டியுள்ளது.

குறிப்பாக மாலை நேரத்தில் தனியார் கல்வி நிலையங்களுக்கு சென்று வீடு திரும்பும் மாணவிகள் இந்த இடத்தால் தனியாக பிரயாணம் செய்ய முடியாதுள்ளதுடன் இந்த சுற்றாடலில் குடியிருக்கும் மக்களும் வர்த்தகர்களும் காடையர்களால் மிகுந்த நெருக்கடிகளை எதிர் நோக்குகின்றனர்.

இந்த வீதியில் அமைந்துள்ள பிளாஸ்ரிக் பொருட்களை ஒட்டும் தனியார் கடை உரிமையாளரே இதில் முக்கிய பங்குதாரர் எனத் தெரிவிக்கப்படுவதுடன் இது தொடர்பில் பல தடவைகள் கிளிநொச்சி பொலிஸாருக்கு அறிவித் துள்ள போதிலும் உரிய நடவடிக்கைகள் எதுவும் எடுக்கவில்லை என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

## முரசின் இன்றைய பலன்

(13.03.2015 வெள்ளிக்கிழமை)

ஜய வருஷம் மாசி மாதம் 29 ஆம் திகதி.
சப்தசி திதி / மரண யோகம். அட்டமி.
கேட்டை நட்சத்திரம் மு.இ. 09.13 வரை. பின் மூலம்.
இராகு காலம 10.52 - 12.22 வரை. சுபநேரம 06.22 - 07.52 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**
பரீட்சைச் சித்தியினால் கணவரைக்கரம் பிடிக்கும்யோக மேற்படல்.

**ரிஷபம்**
தலையணை மந்திரத்தினால் சகோதரர் உறவு கெட்டுவிடல்.

**மிதுனம்**
தவறிய பற்றுச்சீட்டு ஆவணம் பற்றிய செய்தி கேட்டல்.

**கடகம்**
விசா பிரச்சினை சுமுகமான நிலைக்குவருதல்.

**சிம்மம்**
சரியாக எண்ணிப்பெறாமையினால் பணத்தில் குறைவு ஏற்படல்.

**கன்னி**
மனையாளின் புத்திமதியைக் கேட்டதினால் ஆபத்து விலகிவிடல்.

**துலாம்**
பேதம் காரணமாக விவாகம் இழுபட்டதினால் கவலை தக்கவைத்தல்.

**விருச்சிகம்**
பாதுகாப்பில் அலட்சியம் முன்னிட்டு திருட்டுப்போதல்.


**தனுசு**
விலங்கு குறுக்கறுத்தவேளை இறை செயலால் விபத்து ஏற்படாமை.

**மகரம்**
பிள்ளைகளின் தவறுகளை பாதிக்காதவகையில் திருத்த முயலுதல்.

**கும்பம்**
மஞ்சள் கோட்டுக்குள்ளும் விபத்தேற்படலாம்.

**மீனம்**
டெங்கு ஒழிப்பில் குடும்ப சகிதம் ஈடுபடல்.

# டிவில்லியர்ஸின் அசத்தல் வீழ்ந்தது ஐக்கிய அரபு எமிரேட்ஸ்



ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணிக்கு எதிரான உலகக்கிண்ண லீக் போட்டியில் தென்னாபிரிக்கா 146 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

நியூசிலாந்தின் வெலிங்டன் நகரில் நடாத்த உலகக்கிண்ண "பி" பிரிவு லீக் போட்டியில், தென்னாபிரிக்கா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் (யு.ஏ.இ.,) அணிகள் விளையாடின.

இதில் நாணய சுழற்சியில் வென்ற யு.ஏ.இ. அணித்தலைவர் முகமது தாகிர், களத்தடுப்பை தெரிவு செய்தார்.

இதைத் தொடர்ந்து முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணிக்கு ஹசிம் அம்லா (12) ஏமாற்றினார். பின் இணைந்த குயின்டன் டி காக், ரோசோவ் ஜோடி நிதானமாக ஆடியது.

இரண்டாவது விக்கெட்டுக்கு 68 ஓட்டங்கள் சேர்த்த போது குயின்டன் (26) ஆட்டமிழந்தார். இதனையடுத்து களமிறங்கிய ரோசோவ் (43)ஓரளவு சிறப்பான ஓட்டங்கள் குவித்தார்.

அடுத்து பொறுப்பாக ஆடிய டேவிட் மிலலர் (49) அரைசத வாய்ப்பை இழந்தார். அபாரமாக ஆடிய அணித்தலைவர் டிவில்லியர்ஸ் (99) சதமடிக்கும் வாய்ப்பை கோட்டைவிட்டார்.

டுமினி (23) சோபிக்கவில்லை. கடைசி நேரத்தில் அசத்திய பெகார்டியன் அதிரடியாக விளையாடி அரைச்சதமடித்து அணிக்கு கைகொடுத்தார்.

இதனால் தென்னாபிரிக்க அணி 50 ஓவரில் 6 விக்கெட்டுக்கு 341 ஓட்டங்கள் எடுத்தது. பெகார்டியன் (64), பிலாண்டர் (10) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் சார்பில் முகமது நவீது 3, முகமது தாகிர், அம்ஜத் ஜாவேத், கம்ரான் ஷாஜத் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர்.

342 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்கை நோக்கி களமிறங்கிய ஐக்கிய எமிரேட்ஸ் அணிக்கு தொடக்க ஆட்டக்காரர் அம்ஜத் அலி (21) நல்ல தொடக்கம் கொடுத்தார். பெர்ளங்கர் (5) ஏமாற்றினார்.

குராம் கான் (12) நிலைக்கவில்லை. ஷய்மன் அன்வர் (39) சிறப்பாக விளையாடி வந்த நிலையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த ஷக்குலன் ஹய்டர் (7), அம்ஜத் ஜவிட் (5), முகமது நவீட் (17), முகமது தாகிர் (3) வரிசையாக வெளியேறினர். கம்ரான் ஷாஜத் (0) டக் அவுட் ஆக ஆட்டமிழக்க, பொறுமையாக ஆடி வந்த ஸ்வாப்னீல் பட்டில் (57) அரைச் சதம் அடித்து கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணி 47.3 ஓவர்களிலே அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 195 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது. இதனால் தென்னாபிரிககா 146 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

தென்னாபிரிக்க சார்பில், மொர்கல், பிலாண்டர், டிவில்லியர்ஸ் தலா 2 விக்கெட்டுகளையும், ஸ்டெய்ன், டுமினி, இம்ரான் தாகிர் தலா 1 விக்கெட்டையும் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக டிவில்லியர்ஸ் தெரிவு செய்யப்பட்டார்.

### ஒரே பார்வையில் போட்டி முடிவுகள்

| தென்னாபிரிக்கா 341/6 | | | |
|---|---|---|---|
| டிவில்லியர்ஸ் - | (99) | நாவீட் - | 3 (63) |
| பெகார்டியன் - | (64) | அம்ஜாட் யாவீட் - | (87) |
| மில்லர் - | (49) | | |
| **ஐக்கிய அரபு எமிரேட்ஸ்- 195** | | | |
| பட்டில் - | (57) | ஸ்ரெயின் - | 1 (40) |
| சைமன் அன்வர் | (39) | இம்ரான் தகிர் - | 1 (40) |

ஆட்டநாயகன் - டிவில்லியர்ஸ் (தென்னாபிரிக்கா)

# ரிச்சர்ட்ஸ் முதலிடம்



ஒரு நாள் போட்டியில் மகத்தானவர் யார் என்பதைத் தேர்வு செய்வதற்காக [illegible] கிரிக்கெட் [illegible] இணையதளம் ஒன்றினால் மாதாந்த கிரிக்கெட் இதழ் நடாத்திய போட்டியில், வெஸ்ட் இண்டீஸ் அதிரடி வீரர் விவியன் ரிச்சர்ட்ஸ் முதலிடம் பிடித்துள்ளார்.

இந்த விருதுக்கான பரிந்துரை பட்டியலில் இந்தியாவின் சாதனை மன்னன் சச்சின், கப்டன் எம்.எஸ்.டோனி, வாசிம் அக்ரம் (பாகிஸ்தான்), விவியன் ரிச்சர்ட்ஸ் (மேற்கிந்தியதீவுகள்), ஆடம் கில்கிறிஸ்ட் (ஆஸி.) ஆகியோர் இடம் பெற்றிருந்த நிலையில், 50 முன்னணி வீரர்கள், வர்ணனையாளர்கள், செய்தியாளர்கள் அடங்கிய குழுவினர் வாக்களித்து விருதுக்கான வீரரை தேர்வு செய்தனர். [illegible]

# மென்பந்து போட்டி

(அளவெட்டி)

வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான மென்பந்து போட்டியில் 19 வயது ஆண்களுக்கான போட்டி இன்று வெள்ளிக்கிழமை தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (93)

## உலகக் கிண்ணம் 2015

### இன்றைய ஆட்டம்

ICC CRICKET WORLD CUP 2015

நியூசிலாந்து
எதிர்
பங்களாதேஷ்

இடம்– ஹமில்டன்
நேரம்– காலை 6.30

ஆப்கானிஸ்தான்
எதிர்
இங்கிலாந்து
நேரம் - காலை 9.00
இடம் - சிட்னி

### நாளைய ஆட்டம்

இந்தியா
எதிர்
சிம்பாப்வே
நேரம்- காலை 6.30
இடம்- ஒக்லாந்து

அவுஸ்ரேலியா
எதிர்
ஸ்கொட்லாந்து
நேரம் - காலை 9.00
இடம் - ஹோபார்ட்

# ரூபல் ஹொசைனின் வழக்கு வாபஸ்





(தாகா)

இங்கிலாந்துக்கு எதிராக பவுலிங்கில் அசத்திய வேகப்பந்து வீச்சாளர் ரூபல் ஹொசைன் மீதான பாலியல் புகாரை வாபஸ் பெற்றார் நஜ்னின்.

பங்களாதேஷ் வேகப்பந்து வீச்சாளர் ரூபல் ஹொசைன், 25. உலக கோப்பை தொடருக்கு முன் நஜ்னின் அக்தர், 19 என்ற நடிகை கொடுத்த பாலியல் புகாரை அடுத்து, ரூபல் ஹொசைன் சிறையில் அடைக்கப்பட்டார்.

திருமணம் செய்வதாக கூறி ஏமாற்றிய வழக்கில், பிணை பெற்ற இவர், உலக கோப்பை தொடரில் பங்கேற்கிறார். இங்கிலாந்துக்கு எதிரான முக்கிய லீக் போட்டியில் 4 விக்கெட் வீழ்த்த, வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி, முதன் முறையாக காலிறுதிக்கு முன்னேறியது.

இது நடந்த அடுத்த சில மணி நேரத்தில், மக்களின் "ஹீரோ" ஆகி விட்ட ரூபல் ஹொசைன் மீதான வழக்கை, நஜ்னின் வாபஸ் பெற்றார். அவர் கூறுகையில், ரூபலை மன்னித்து விட்டேன். தேசத்தின் நலன் கருதி இவர் மீதான வழக்கை தொடர்ந்து நடாத்தப் போவதில்லை, என்றார்.

# தெல்லிப்பளை கோட்டமட்ட கரப்பந்தாட்டம்

## மெய்கண்டான், வசாவிளான், மகாஜனா அசத்தல்



தெல்லிப்பளை கல்விக் கோட்டமட்ட கரப்பந்தாட்ட போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. இதில் 15,17,19 வயது ஆண்கள் பெண்களுக்கான போட்டி மல்லாகம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

15 வயது பிரிவு ஆண்களுக்கான போட்டியில் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தை எதிர்த்து வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம் மோதியது. இதில் இரு சுற்றிலும் மெய்கண்டான் 25:20 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.


பெண்களுக்கான போட்டியில் மெய்கண்டானை எதிர்த்து அளவெட்டி அருணோதய மோதியது. இதில் மெய்கண்டான் இரு சுற்றிலும் 26:24 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

17 வயது பிரிவு ஆண்களுக்கான போட்டியில் வசாவிளானை எதிர்த்து மெய்கண்டான் மோதியது. இதில் இரு சுற்றிலும் மெய்கண்டான் 20:25 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றது. பெண்கள் பிரிவில் வசாவிளானை எதிர்த்து அளவெட்டி அருணோதய மோதியது. இதில் வசாவிளான் இரு சுற்றிலும் 25:23, 25:19 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

3 ஆம் இடத்தை அளவெட்டி அருணோதயக் கல்லூரி பெற்றுக்கொண்டது. 19 வயது பிரிவு ஆண்களுக்கான போட்டியில் வசாவிளானை எதிர்த்து தெல்லிப்பளை மகாஜனா மோதியது. இதில் 3 ஆம் சுற்று விளையாடிய நிலையில் வசாவிளான் இறுதியில் 25:22 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. 3 ஆம் இடத்தை மெய்கண்டான் மகாவித்தியாலயத் பெற்றுக்கொண்டது.

19 வயது பிரிவு பெண்களுக்கான போட்டியில் மகாஜனாவை எதிர்த்து வசாவிளான் மோதியது. இதில் மகாஜனா இறுதியில் 25:22 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றதுடன் 3 ஆம் இடத்தை அளவெட்டி அருணோதய பெற்றுக்கொண்டது. (93)

# உலகக் கிண்ணத்தை இந்தியா கைப்பற்றும்



உலகக் கிண்ணத்தை இந்திய அணி நிச்சயம் கைப்பற்றும் என. அணியின் இயக்குநர் ரவி சாஸ்திரி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

உலகக் கிண்ணத் தொடரில் தொடர்ச்சியாக 5 வெற்றிகள் பெற்று இந்திய அணி சாதனை படைத்துள்ளது.

இதனைத் தொடர்ந்து பல்வேறு பாராட்டுகள் குவிந்த வண்ணம் உள்ளன.

இந்நிலையில் இந்திய அணியின் இயக்குநர் ரவி சாஸ்திரி கூறுகையில், இப்போதுள்ள இந்திய அணியின் ஆட்டத்திறன்படி நாம் நல்ல நிலையில் உள்ளோம். ஒவ்வொரு போட்டியையும் நொக் அவுட் போட்டியாகவே அணுகினோம்.

வெற்றி பெறத் தொடங்கி விட்டால் மகிழ்ச்சி வர, களைப்பு நீங்கி விடும். தோற்கும் போதுதான் ஓய்வறையில் அடைபட்டுக் கிடப்போம்.

இப்போதைக்கு இந்திய அணியினர் ஒரு மகிழ்ச்சிகரமான குழுவாக இருந்து வருகின்றனர். கால்பந்து விளையாடுகின்றனர், உற்சாகமாக இருக்கின்றனர்.

எண்ணிக்கைகளை பூர்த்தி செயய நாம் இங்கு வரவில்லை. எந்த ஒரு எதிரணியினருக்கும் எந்த ஒரு வாய்ப்பையும் அளிக்கப்போவதில்லை. உலகக் கிண்ணத்தை நாம்தான் வெல்லப் போகிறோம் என்று தெரிவித்துள்ளார்.

## சங்கக்கார ஓய்வு பெறக்கூடாது மண்டியிட்டார் மத்தியூஸ்



இலங்கை கிரிக்கெட் வீரர் சங்கக்கார ஓய்வு பெறக் கூடாது என்று இலங்கை அணித் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் மண்டியிட்டு கேட்டுக்கொண்டுள்ளார்.

2015 உலகக்கிண்ண போட்டி முடிந்த பிறகு சங்கக்காரா ஒரு நாள் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுகிறார்.

இலங்கையின் சிறந்த துடுப்பாட்ட வீரர், விக்கெட் காப்பாளர் என்ற பெயர்களுக்கு சொந்தக்காரர சங்கக்கார.

மேலும், கிரிக்கெட் ஆட்டத்தின சிறந்த வீரர் சங்கக்கார என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் அவரது ஓய்வு குறித்து இலங்கை அணித் தலைவர் மத்தியூஸ் கூறியதாவது, நான் அவரிடம் மண்டியிட்டுக் கேட்டுக் கொள்கிறேன் ஓய்வு பெற வேண்டாம் என்று, ஆனாலும் அவரது ஆசையையும், முடிவையும் பெரிதும் மதிக்கிறேன். நாட்டுக்காக அவர் ஒவ்வொரு முறையும் சிறப்பாக ஆடியதற்கு அவருக்கு நன்றிக் கடன் பட்டுள்ளோம் என்று கூறியுள்ளார்.

இந்நிலையில் தனது முடிவில் மாற்றமில்லை என்று கூறிய சங்கக்காரா, ஓய்வு பெறுவது என்பது ஒருவரது போர்ம் தொடர்பான விடயமல்ல. சரியான உணர்வு மற்றும் கால நேரமே ஓய்வை தீர்மானிக்கும் என்று கூறியுள்ளார்.

## மத்தியூஸ் காயம்

ஸ்கொட்லாந்திற்கு எதிரான ஆட்டத்தில் 20 பந்துகளில் அரை சதம் விளாசிய இலங்கை கேப்டன் மத்தியூசுக்கு, கணுக்காலுக்கு சற்று மேலே காயம் ஏற்பட்டு, வீங்கியுள்ளது. இதனால் அவர் துடுப்பெடுத்தாடியதோடு சரி. களத்தடுப்புக்கு வரவில்லை.

இது பற்றி நிருபர்களிடம் பேசிய மத்தியூஸ், முன்எச்சரிக்கை நடவடிக்கையாக அணி நிர்வாகம் மற்றும் பிசியோதெரபிஸ்டின் அறிவுறுத்தலின் பேரில் களத்தடுப்புக்கு வரவில்லை. காயத்தன்மையை அறிவதற்கு ஸ்கான் பரிசோதனை மேற்கொள்ளப்பட உள்ளது. அடுத்த சில தினங்களுக்கு காயம் எந்தளவுக்கு சரியாகிறது என்பதை பார்க்க வேண்டும்.

உலக கோப்பையில் இருந்து விலக வேண்டி இருக்கும் என்று நான் நினைக்கவில்லை என்றார். இருப்பினும் மத்தியூஸ் காலிறுதியில் விளையாடுவாரா? என்பதில் சந்தேகம் எழுந்துள்ளது. காயம் காரணமாக இலங்கை அணியில் இதுவரை 4 வீரர்கள் மாற்றப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## யங்கம்பன்ஸ் வெற்றி



வல்வை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடாத்தும் Jaffna challengers உரி உதைபந்தாட்ட சுற்று தொடரில், நேற்று முன்தினம் நடை பெற்ற ஆட்டத்தில் சக்கோட்டை சென் சேவியர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கம்பர்மலை யங்கம் பன்ஸ் விளையாட்டுக் கழகம் மோதியது.

ஆட்ட முடிவில் இரு அணிகளும தலா ஒவ்வொரு கோல்களை பெற்றிருந்தன. யங்கம்பன்ஸ் அணி சார்பாக பிரியதர்சன் 1 கோலினை பெற்றிருந்தார்.

போட்டியின் வெற்றியை தீர்மானிப்பதற்காக நடுவர் தண்ட உதை வழங்கியிருந்தார். தண்ட உதையில் 3:1 என்ற கோல களை பெற்று, யங்கம்பன்ஸ் அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது.

## இங்கிலாந்து தோல்விக்கு வீரர்களே காரணம்



இங்கிலாந்து கிரிக்கெட் அணியானது உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் இருந்து முதற் சுற்றோடு வெளியேற, வீரர்களே காரணம் என இங்கிலாந்து கிரிக்கெட் சபையின் முகாமைத்துவப் பணிப்பாளர் போல் டோவ்ன்டன் தெரிவித்துள்ளார்.

வீரர்களே மைதானத்தில் விளையாடுகின்றனர். அவர்களே ஓட்டங்களைப் பெற வேண்டும், விக்கெட்களைக் கைப்பற்ற வேண்டும். எனவே, தோல்விக்கு முழுமையாக அவர்களே பொறுப்பு ஏற்க வேண்டும் என கூறி, இங்கிலாந்து அணியின் தோல்விக்கான பொறுப்புக் கூறலில் இருந்து தப்பித்துள்ளார்.

பயிற்றுவிப்பாளர் பீற்றர் மூர்ஸ், பதவியில் தொடர்வாரா, இல்லையா என்பது இப்போது கூற முடியாது. அணியின் வீழ்ச்சிக்கான காரணங்களை கண்டறிய வேண்டும். அதற்கு இன்னும் சிறிது காலம் தேவை. ஆனாலும் மூர்ஸ் பதவியேற்று 10 மாதங்கள் மட்டுமே. உடனடியாக அவரால் அணியை உச்சத்துக்கு கொண்டு செல்ல முடியும் என்று கூற முடியாது. இந்தக் காலத்தின் சிறந்த பயிற்றுவிப்பாளர் எனக் கூறப்படுபவரை சிறிது காலத்துக்குள்ளேயே மாற்றுவது கடினம் எனவும் போல் டோவ்ன்டன் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கெவின் பீற்றர்சன் தொடர்பில் இங்கிலாந்து கிரிக்கெட் சபையின் முடிவில் எந்தவித மாற்றமும் இல்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஆசிஸ் தோல்வியை தொடர்ந்து கெவின் பீற்றர்சன் அணியால் நீக்கப்பட்டமை, அன்று பிளவரின் தலைமையிலான பயிற்றுவிப்பாளர்கள் குழு விலகியமை போன்றனவும் அணி வீரர்களுக்குள் மாற்றங்கள் உருவாகியதும் தற்போதைய முகாமைத்துவப் பணிப்பாளர் போல் டோவ்ண்டனின் முகாமைத்துவத்தின் கீழ் என்பது குறிப்பிடத்தக்கது.

## தரம் வாய்ந்த வீரர்கள் முகமது ஷமி, உமேஷ்யாதவ்





(மும்பை)

உலக கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி இதுவரை தனது 5 லீக் ஆட்டங்களில் தொடர்ந்து வெற்றியை குவித்து தனது பிரிவில் முதலிடத்தை பிடித்துள்ளது. குறிப்பாக இந்தப் போட்டி தொடரில் இந்திய அணியின் பந்து வீச்சு பாராட்டும் வகையில் ஏற்றம் பெற்றுள்ளது. வேகப்பந்து வீச்சாளர்கள் முகமது ஷமி 4 ஆட்டத்தில் ஆடி 12 விக்கெட்டும், உமேஷ்யாதவ் 5 ஆட்டத்தில் விளையாடி 7 விக்கெட்டுக்களையும் வீழ்த்தி உள்ளனர.

வேகப்பந்து வீச்சாளர்கள் இருவரது பந்து வீச்சையும் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் அதிவேக பந்துவீச்சாளர் சொகைப் அக்தர் வெகுவாக பாராட்டி இருக்கிறார். இது குறித்து தொலைக்காட்சிக்கு அக்தர் அளித்த பேட்டியில், இந்திய அணி இது வரை தனது 5 ஆட்டங்களில் 50 விக்கெட்டுகளை வீழ்த்தி இருப்பது என்பது இலகுவான காரியம் அல்ல. இந்திய அணி மகத்தான சாதனை படைத்துள்ளது.

எல்லா ஆட்டங்களிலும் முகமது ஷமி, உமேஷ்யாதவ் ஆகியோர் அனுபவம் வாய்ந்த வீரர்களை போன்று பந்து வீசுவதை பார்க்கையில் பெருமை அளிக்கிறது.

இருவரும் உலகத் தரம் வாய்ந்த வேகப்பந்து வீச்சாளர்களாக உருவெடுக்கும் காலம் வெகு தூரத்தில் இல்லை. முகமது ஷமி, உமேஷ்யாதவ் ஆகியோர் அனுபவித்து பந்து வீசி வருகிறார்கள். இருவரும் இணைந்து பந்து வீசுவதை பார்க்க அருமையாக உள்ளது என்று தெரிவித்துள்ளார்.

## நீச்சல் வீரன் நவரத்தினசாமிக்கு தொண்டைமானாற்றில் சிலை



பாக்கு நீரிணையை ஒரு வழியாக நீந்தி கடந்த, யாழ். தொண்டைமானாற்றை சேர்ந்த நீச்சல் வீரன் நவரத்னசாமியின் சிலை எதிர்வரும் 25 ஆம் திகதி தொண்டைமனாற்றில் திறந்து வைக்கப்படவுள்ளதாக தெரிய வருகின்றது.

நவரத்னசாமியின் சிலைக்குரிய அடிக்கல் கடந்த தைப்பூச தினமான மாசி மாதம் 3 ஆம் திகதி நாட்டப்பட்டது. குறித்த சிலை தொண்டைமானாற்று சந்தி யில், பருத்தித்துறை காங்கே சன்துறை வீதியின். புதிய பாலத்திற்கு அருகில் வலப்பக்கத்தில் அமையவுள்ளது.

சிலையை நவரத்னசாமியின் குடும்பத்தினரும் பொது மக்களும இணைந்து அமைத்து வருகின்றனர்.

# சுரேஷுக்கு விழுந்த வெட்டு!

டி.பி.எஸ்.ஜெயராஜ் கட்டுரையிலிருந்து.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு, மார்ச் 1, ஞாயிறு அன்று வவுனியா, குருமண்காடு விருந்தினர் விடுதியில் கூடியது. இலங்கைத் தமிழரசுக் கட்சியின் செயற்குழு இரண்டு பிரேரணைகளை ஏகமனதாக நிறைவேற்றியது.

முதலாவது பிரேரணை ஜனாதிபதித் தேர்தலில் வழங்கப்பட்ட வாக்குறுதிகளை அரசு நிறைவேற்ற வேண்டும் என்பது சம்பந்தமானது. ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட இரண்டாவது பிரேரணை பின்வருமாறு சொல்கிறது:

"இலங்கை தமிழரசுக் கட்சியின் செயற்குழு, கட்சியின் மூத்த தலைவர் ஆர்.சம்பந்தன் மற்றும் சர்வதேச விவகார்ரங்களுக்கான துணைப் பொதுச் செயலாளரும் மற்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பேச்சாளருமான சுமந்திரன் ஆகியோர்மீது சமீபகாலமாக தமிழர் தாயகத்திலும் மற்றும் புலம் பெயர்ந்தோர் மத்தியிலும் மேற்கொள்ளப்பட்டுவரும் தேவையற்ற மற்றும் ஏற்றுக்கொள்ள முடியாத நடவடிக்கைகளை தொடர்ந்து அவதானித்து வருகிறது.

பெப்ரவரி 21 இல் யாழ்ப்பாணம் பேருந்து நிலையம் முன்பாக ஒரு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தின் நோக்கம், காணாமற் போனவர்கள் தொடர்பான உண்மை நிலையை அறிவிக்க கோரியும், அரசியல் கைதிகளை விடுதலை செய்யும்படி கோரியும் மற்றும் ஐ.நா அறிக்கையை தாமதமின்றி வெளியிடக் கோரியும் நடாத்தப்படுவதாகக் கூறப்பட்டது.

ரி.என்.ஏ யின் ஒரு அங்கமாகச் செயற்படும் ஈ.பி.ஆர்.எல்.எப். சுரேஸ் அணியை சேர்ந்த சுரேஸ் பிரேமச்சந்திரன் (பா.உ) மற்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மாதர் அணியின் துணைத் தலைவியுமான அனந்தி சசிதரனும் இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்தார்கள்.



இந்த நிகழ்வில் சுமந்திரன் (பா.உ) அவர்களது உருவப்பொம்மை ஒன்றுக்கு தீ வைக்கும் சம்பவம் இடம்பெற்றது, அது எந்தவிதத்திலும் ஏற்றுக்கொள்ளத் தக்கதோ அல்லது அந்த ஆர்ப்பாட்டத்துடன் தொடர்புபட்டதோ இல்லை.

இந்த உருவப் பொம்மை எரிப்பு: எந்த நோக்கங்களுக்காக மக்கள் அணி திரட்டப்பட்டார்களோ மற்றும் அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் பங்கெடுப்பதற்காக தங்களை அணிசேர்த்துக் கொண்டார்களோ அந்த நோக்கங்களுக்கு தவறான அர்த்தம் கற்பிக்கிறது.

எதிர்பாராத விதமாக இடம்பெற்ற இந்தச் சம்பவம், இந்த ஆர்ப்பாட்டத்தில் ஆர்வமாகக் கலந்து கொண்டவர்கள் சுமந்திரனுக்கு எதிராக குற்றம் சாட்டும் செய்கையில் ஈடுபட்டதாக ஒரு தவறான கருத்தை உருவாக்கியுள்ளது.

மேற்சொன்ன நடவடிக்கையில் ரி.என்.ஏ. தலைவர்களின் கூட்டு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமையை கேள்விக்கு இடமாக்கியுள்ளது.

இதில் வருத்தத்திற்கு உரியது, திருமதி அனந்தி சசிதரன் அந்த குறிப்பிட்ட உருவப் பொம்மையை ஆர்ப்பாட்டம் நடக்கும் இடத்திற்கு தனது சொந்த வாகனத்தில் ஏற்றி வந்ததுதான். இந்த நடவடிக்கை, கட்சியின் ஒழுக்கத்திற்கு பொறுப்புக்கூறும் அவரது செயற்பாடு பற்றிய கேள்வியை எழுப்புகிறது. இதில் உண்மை என்னவென்றால் கேள்விக்குரிய இரண்டு நபர்களும் பிரேமச்சந்திரன் மற்றும் திருமதி அனந்தி சசிதரன் - இந்தச் சம்பவம் பற்றி வருத்தம் தெரிவிக்காதது இந்தச் சம்பவத்துடன் அவர்களின் தொடர்புக்கான விருப்பத்தை நன்கு வெளிப்படுத்துகிறது".

மேலும் சுரேஸ் பிரேமச்சந்திரன், பல சந்தர்ப்பங்களில் தொடர்ந்தும் சம்பந்தன் மற்றும் சுமந்திரன் ஆகியோரை விமர்சித்து வருகிறார். மத்திய செயற்குழு பிரேமச்சந்திரனின் இந்த நடவடிக்கையை வன்மையாகக் கண்டிக்கிறது. கட்சியின் அங்கத்தவராக உள்ள அனந்தி சசிதரனுக்கு எதிராக இந்தக் குழு கட்டாயம் ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

ரி.என்.ஏ.யின் நாடாளுமன்றக் குழுவின் பேச்சாளராக தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட கடமையை பிரேமச்சந்திரன் பொறுப்பற்ற விதத்தில் கையாண்டுள்ளார். இது தொடர்பாக மத்திய குழு, நாடாளுமன்றில் உள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சி அங்கத்தவர்களிடம், அவரது பொறுப்பை துஷ்பிரயோகம் செய்தது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறது.

இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலைக்கு எதிராக விசாரணை நடாத்துவதற்கு ஆதரவு கோரி புலம்பெயர்ந்த அங்கத்தவர்கள் சிலர் லண்டனில் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டத்தின்போது ஐக்கிய இராச்சிய பிரதம மந்திரியின் இல்லத்துக்கு வெளியிலும் மற்றும் லண்டனில் உள்ள அமெரிக்க தூதரகத்தின் முன்பாகவும் சம்பந்தன் மற்றும் திரு. சுமந்திரனது படங்களை எரித்த சம்பவத்தையும் இந்த மத்திய செயற்குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

மேலும் மத்திய செயற்குழு, யாழ்ப்பாணத்தில் சுமந்திரனது உருவப் பொம்மையை எரியூட்டிய வல்வெட்டித்துறை நகரசபையின் முன்னாள் உப தலைவரான சதீஷின் செயற்பாட்டுக்கும் கண்டனம் தெரிவிக்கிறது".

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு முடிவாக நிரூபித்தது, கட்சியானது சம்பந்தன் மற்றும் சுமந்திரன் ஆகிய இருவரின் பின்னால் உறுதியாக நிற்கிறது என்பதை. புலிகள் மற்றும் புலிகள் சார்பு ஊடக ஊதுகுழல்கள் ரி.என்.ஏ.க்குள் பாரிய கொந்தளிப்பு நிலவுவதாக ஒரு தோற்றத்தை உருவாக்கியிருந்தும் அது எதிர்பார்த்த நெருக்கடிகள் ஒரு தேநீர் கோப்பைக்குள் உருவான புயலைப்போல மறைந்துவிட்டது.

வெளிநாட்டு ஊடகங்கள், தமிழ் மக்கள் சம்பந்தன் மற்றும் சுமந்திரனுக்கு எதிராக மாறியுள்ளார்கள் என்கிற ஒரு தோற்றத்தை சித்திரித்திருந்தாலும், யதார்த்தத்தில் நிலவும் சூழ்நிலையானது கிட்டத்தட்ட இந்த மாயத் தோற்றத்திற்கு எதிர்மாறாக இருந்தது. புலம்பெயர் சக்திகள் நம்பியது போல இந்த தீர்மானங்களுக்கு எதிராக எங்கும் பொதுமக்கள் கூக்குரல் எழுப்பவில்லை

# எழுத்துப் பாணிகள்

- சாருநிவேதிதா

பலவகையான எழுத்துப் பாணிகள் (Genre) உள்ளன என்பதை நாம் அறிவோம். அவற்றில் முக்கியமானது எதார்த்தவாதம். ரொபின்ஸன் க்ரூஸோ என்ற புகழ்பெற்ற வரலாற்று நாவலை எழுதிய Daniel Defoe வின் மற்றொரு நாவலான A Journal of the Plague Year என்ற நாவல் எதார்த்த பாணி நாவலின் உச்சம் என்று சொல்லலாம். 1665-66 ஆகிய இரண்டு ஆண்டுகளில் லண்டனில் ஒரு இலட்சம் பேர் ப்ளேக் நோயினால் இறந்தனர். அப்போதைய லண்டன் மக்கள் தொகை ஏழு இலட்சம். அது பற்றிய நேர்முக வர்ணனையைப் போன்ற நாவல் அது.

எதார்த்த வகை எழுத்தில் எனக்கு மிகவும் பிடித்த மற்றொருவர் பல்ஸாக். எழுபதுகளில் இவருடைய எழுத்தைத் தேடி மிகவும் அலைந்திருக்கிறேன். 1799 இல் பிறந்து 1850 இல் மறைந்த பல்ஸாக்கின் எழுத்து இப்போது இணையத்திலேயே படிக்கக் கிடைக்கிறது.

தற்போது எழுத வரும் இளைஞர்களில் பலரும் போதிய பயிற்சி இல்லாமலேயே எழுத ஆரம்பித்து விடுகிறார்கள். அவர்களுக்கெல்லாம் நான் சிபாரிசு செய்வது டானியல் டீ.்.போவின் மேலே குறிப்பிட்ட நாவலும், பல்ஸாக்கின் சிறுகதைகளும் தான். எமிலி ஸோலா, தஸ்தயேவ்ஸ்கி போன்ற எழுத்தாளர்களிடமும் பல்ஸாக்கின் சாயல்களைப் பார்க்கலாம்.

ரொமாண்டிசிஸப் பாணிக்கு உதாரணம் அலெக்ஸாந்தர் துய்மா. (தமிழில் கல்கி). இவை தவிர நச்சுரலிஸம், மஜிகல் ரியலிஸம், baroque என்று பலவிதமான பாணிகள் உண்டு. நச்சுரலிஸம் என்பது எதார்த்தவாதத்தின் அடுத்த கட்டம். ஒருவரின் ஆளுமையைத் தீர்மானிப்பதில் அவர் வாழும் சமூகச் சூழலுக்கு மிக முக்கியமான பங்கு உண்டு என்பது நச்சுரலிஸம்.

ஆனால், சமூகம் எதையெல்லாம் பாவம் என்றும் குற்றம் என்றும் ஒதுக்கி வைக்கிறதோ, விவாதிப்பதற்குக் கூட அஞ்சுகிறதோ அதையெல்லாம் எழுதுவது transgressive writing. ஒரு சமூகத்தின் ஒழுக்க வரையறைகளே ட்ரான்ஸ்க்ரெஸிவ் எழுத்தின் போக்கைத் தீர்மானிக்கிறது என்பதால் அதன் அடுத்த கட்டம் என்னவாக இருக்கும் என்ற கேள்விக்கே இடமில்லை. ட்ரான்ஸ்க்ரெஸிவ் எழுத்தை யார் வேண்டுமானாலும் எழுதி விட முடியாது. மார்க்கி தெஸாத்தன் எழுத்தில் குரூரம் மற்றும் சித்திரவதையின் அழகியலை உருவாக்கினார். அதன் பொருட்டு அவருடைய 74 ஆண்டு வாழ்க்கையில் 32 ஆண்டுகளை சிறையில் கழித்தார். அந்த 32 இல் 13 ஆண்டுகள் மனநோய் விடுதியில் அடைக்கப்பட்டார். ட்ரான்ஸ்க்ரெஸிவ் எழுத்து ஏன் ஒரு இலக்கியப் பாணி அல்ல என்பதற்கு மார்க்கி தெ ஸாத்-இன் எழுத்தும் வாழ்க்கையும் ஒரு உதாரணம்.

வில்லியம் பர்ரோஸ் ஒரு drug addict ஆக வாழ்ந்து அந்த அனுபவங்களை எழுதியவர். கேத்தி ஆக்கர் தன் உடல் மற்றும் வாழ்க்கை இரண்டையும் பெரும் பாலியல் ஆட்ட வெளியாக மாற்றி, அந்த அனுபவங்களை எழுதினார். ட்ரான்ஸ்க்ரெஸிவ் எழுத்தில் மற்றொரு மிக முக்கியமான பெயர் ஜோர்ஜ் பத்தாய் (Georges Bataille 1897 - 1962). இவர் காலத்தில் வாழ்ந்த சக ப்ரெஞ்ச் எழுத்தாளர்களையெல்லாம் விட ஏராளமாக எழுதினார் என்றாலும் உயிரோடு இருந்த போது யாரும் இவரை அங்கீகரிக்கவில்லை; சரியாக விவாதிக்கவும் இல்லை.

இவ்வளவுக்கும் உலகிலேயே அதிக அளவில் எழுத்தாளர்களைக் கொண்டாடும் தேசம் ப்ரான்ஸ். ஒரு பொப் பாடகரைப் போல் உலகம் முழுவதும் அறியப்பட்ட எக்ஸிஸ்டென் ஷியலிச சூப்பர் ஸ்டாரான ஜான் போல்



# கூகுளின் அடுத்த அதிரடி!

உலகளாவிய மொபைல் நெட்வேர்க் ஒன்றை உருவாக்கும் முயற்சியில் கூகுள் இறங்கியுள்ளது. இதற்கான அறிவிப்பு, அண்மையில் பார்சிலோனா நகரில் நடைபெற்ற, உலக மொபைல் கருத்தரங்கில் வெளியிடப்பட்டது.




தகவல் தொழில் நுட்பப் பிரிவில் இயங்கும் நிறுவனங்கள், இணைய இணைப்பினை அனைவருக்கும் கொண்டு செல்வதில் முனைப்புடன் செயற்படவில்லை என்றும் அப்படியே செயற்பட்டாலும், அவ்வசதியினை அனைவருக்கும் கொண்டு செல்வதில்லை என்றும் கூகுள் குற்றம் சாட்டி வருகிறது.

இதனால், தான் விரும்பும் வகையில், மக்களுக்குப் புதிய வசதிகளைக் கொண்டு செல்ல இயலவில்லை எனக் குற்றம் சாட்டும் கூகுள், உலகின் பல இடங்களில், அநேக மக்கள் இணைய இணைப்பு கிடைக்காமல் உள்ளனர் என்றும் வருத்தப்படுகிறது. இந்நிலையைப் போக்க, கூகுள், தானே களத்தில் இறங்கி, தன் வலிமையைக் காட்ட திட்டத்தினை அறிவித்துள்ளது.

மொபைல் சேவை வழங்கும் நிறுவனங்கள், தாங்கள் அனுமதி பெற்ற இடங்களில், மொபைல் நெட்வேர்க் ஒன்றை உருவாக்கி, மற்ற நெட்வேர்க் நிறுவனங்களுடன் ஒப்பந்தம் மேற்கொண்டு, வாடிக்கையாளர்களுக்கு மொபைல் சேவை வழங்கி வருகின்றன. (இலங்கையில், டயலொக், மொபிரெல், எயார்டெல், எடிசலாட் போன்றவை). இதே போல, உலகளாவிய அளவில், கூகுள் மொபைல் நெட்வேர்க் ஒன்றை அமைக்கத் திட்டமிடுகிறது.

இதற்கென உலகளாவிய மொபைல் நெட்வேர்க் ஒன்றை உருவாக்குகிறது. இது மொபைல் டவர் மற்றும் Wifi Hotspot இணைந்ததாக இருக்கும். இதனால், மொபைல் போன் ஒன்றில் அழைப்பு ஏற்படுத்துகையில், அது மொபைல் டவர் மற்றும் Wifi Hotspot வழிகளில் மாறி மாறிச் சென்று, விரைவாக இணைப்பை ஏற்படுத்தும்.

அமெரிக்காவில் கூட, இணைய வேகமும் இணைப்பும் பின் தங்கியே உள்ளது. இதனால், அதிக மக்களை கூகுள் தன் சேவைகள் மூலம் அடைய இயலவில்லை. தான் அமைக்க இருக்கும் மொபைல் நெட்வேர்க் மூலம், சிறப்பான, விரைவான சேவையை வழங்க முடியும் என மக்களுக்குக் காட்ட கூகுள் விரும்புகிறது. இதன் மூலம், தற்போது இயங்கும் மொபைல் நெட்வேர்க் நிறுவனங்கள், தங்கள் செயற்பாட்டினை மாற்றிக் கொண்டு, புதிய தொழில் நுட்பங்களை அறிமுகப்படுத்துவார்கள் என்று கூகுள் எதிர்பார்க்கிறது.

முன்னோட்டமாக, கூகுள், அமெரிக்காவில் தன் நெட்வேர்க்கினை அமைக்கிறது. அமெரிக்காவில் கூகுள் ஏற்படுத்த இருக்கும் மொபைல் நெட்வேர்க், உலகளாவிய அளவில் அமைக்கப்படும்போது, அதில் இணையும் வாடிக்கையாளர்கள், உலகின் எந்த மூலைக்கும் தொடர்பு கொள்ள முடியும். இப்போது போல, வெளிநாடு செல்கையில், தனியாகக் கட்டணம் செலுத்தியோ அல்லது கூடுதல் ரோமிங் கட்டணம் செலுத்தியோ தொடர்பு கொள்ள வேண்டியதிருக்காது. இணைப்பும் வேகமாகவும், எளிதாகவும், தெளிவாகவும் கிடைக்கும்.

---

ர்த்தர் கூட ஜோர்ஜ் பத்தாயை மட்டமாகவும் ண்டல...வும்தான் குறிப்பிட்டார். "பத்தாய் ஒரு ...துவ...தி அல்ல; அவர் ஒரு mystic. ...லக்கியம் என்பது மனித வாழ்க்கையை ...ம்படுத்துவதற்கு உதவுவதாக இருக்க ...ண்டும்" என்பது சார்த்தரின் நிலைப்பாடு. ...னால் பத்தாய் இதை ஸ்தாபன ரீதியான ...தாந்தம் (Status quo) என்று ஒதுக்கித் ...ளினார். சார்த்தருக்கும் பத்தாய்க்கும் நடந்த ...வாதங்கள் Excremental Vs Existential என்று பேசப்பட்டது. எக்ஸ்க்ரமெண்ட் என்றால் உடலின் கழிவு..



ஆனால் காலத்தின் விசித்திரம் என்னவென்றால், சார்த்தரின் தத்துவ, அரசியல் கோட்பாடுகள் யாவும் அவர் காலத்திலேயே காலாவதி ஆகி விட்டன. அதே சமயம் மலம் என்று வர்ணிக்கப்பட்ட ஜோர்ஜ் பத்தாய் அவரது மரணத்துக்குப் பிறகு மிகப் பெரிய அளவில் கொண்டாடப்பட்டார். "கொண்டாடப்பட்டார்" என்ற வார்த்தை கூட தவறு. இருபதாம் நூற்றாண்டின் சிந்தனைப் போக்கையே மாற்றி அமைத்த மிஷல் ஃபூக்கோ, ஜாக் தெரிதா போன்றவர்களின் தத்துவத்துக்கு ...த்தளமாக அமைந்தவர் ஜோர்ஜ் பத்தாய். ...கோ, தெரிதா (Jacques Derrida) மட்டும் ...லாமல் ரொலான் பார்த், ஜான் பொத்ரியார் (Jean Baudrillard), ஜாக் லக்கான் (Jacques Lacan), ஜூலியா கிறிஸ்தவா போன்ற பல் ...மைப்பியல்வாதிகளின் சிந்தனையில் அதிக ...கம் செலுத்தியவரும் அவரே.

ஜோர்ஜ் பத்தாய் அவருடைய காலத்தில் ...கீகரிக்கப்படாமல் போனதற்குக் காரணம், ...ருடைய சிந்தனை, எழுத்து எல்லாமே ...போது முற்றிலும் புதிதாக இருந்தது. உதாரண-...ச் சொன்னால், அவர் பச்சையான போர்னோ ...ழியில் கதைகளை எழுதினார். அதற்கு ...போது போர்னோ எழுத்து என்பதைத் தவிர ...று எந்த அர்த்தமும் கொடுக்கப்படவில்லை.

1928 இல் அவருடைய "கண்ணின் கதை" என்ற நாவல் Lord Auch என்ற பெயரில் வெளிவந்தது. பல ஆண்டுகளுக்கு அந்தப் பெயரில் எழுதியது யார் என்றே தெரியாமல் இருந்தது. Auch என்ற வார்த்தை aux chiottes என்ற பேச்சு வழக்கின் சுருக்கம். கிட்டத்தட்ட அதன் பொருள், நீ கக்கூஸுக்குத்தான் லாயக்கு. ஆக, Lord Auch என்பதை கக்கூஸ் நாயகன் என்று மொழிபெயர்க்கலாம்.

போர்னோ மொழியில் எழுதப்பட்ட "கண்ணின் கதை" ஒரு போர்னோ நாவலாகவே கருதப்பட்ட நிலையில் அந்த நாவலைப் பற்றி 1962 இல் ரொலான் பார்த் Metaphor of the Eye என்ற கட்டுரையை பத்தாயின் பத்திரிகையான Critique இலேயே எழுதினார். அந்தக் கட்டுரைதான் முதல் முதலாக "கண்ணின் கதை" என்பது போர்னோ நாவல் அல்ல; தத்துவார்த்தமாக விரியும் பல அர்த்தத் தளங்களைக் கொண்ட நாவல் என்பதை நிலைநாட்டியது. அந்தக் கட்டுரையை ரொலான் பார்த் எழுதிய போது ஜார்ஜ் பத்தாய் உயிரோடு இல்லை என்ற முக்கியமான தகவலை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

அது மட்டும் அல்ல; பத்தாய் 1935 இல் எழுதி முடித்த Blue Moon என்ற நாவலும் 1957 இல் தான் பிரசுரமாயிற்று. இந்த நாவல் எப்படி இருக்கும் என்பதை இங்கே நான் விவரிப்பது கூட சாத்தியம் இல்லை. ஆனால் பத்தாய் ஒரு தீர்க்கதரிசி என்று சொல்லப்படுவது எப்படியென்றால், 1935 இல் அவர் எழுதியதெல்லாம் 1939 இலிருந்து ஐரோப்பிய நகரங்களில் நிகழத் துவங்கியது. பாலியலும் மரணமும் ஒன்றுக்குள் ஒன்று சிக்கிக் கொள்ளும் தத்துவார்த்த முரண் பற்றிய நாவல் அது.

எது எப்படி இருந்தாலும் பத்தாய் உயிரோடு இருந்த போது அவர் ஒரு legend ஆக வாழ்ந்தார் என்பதை மறுக்க முடியாது. பத்தாயின் முதல் மனைவி ஸில்வியா ஒரு பிரபலமான நடிகை. பத்தாயோடு விவாகரத்து ஆனதும், ஸில்வியா மணந்து கொண்டது ஜாக் லக்கானை!

---

# ஊரும் உலகமும்

## மாமன் மருமகனல்ல



முக்கியமான பிரமுகர்கள் வெளியிடும் தகவல்களைச் சாதாரண மக்கள் அப்படியே நம்பிவிடுவார்கள். எனவே தகவல்களை வெளியிடும்போது அவற்றின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். இன அழிப்புப் பிரேரணையை வட மாகாண சபையில் சமர்ப்பித்து உரையாற்றிய முன்னாள் உச்ச நீதிமன்ற நீதியரசரான முதலமைச்சர் விக்னேஸ்வரன் ரணில் விக்கிரமசிங்கவும் பாதுகாப்புப் பிரதியமைச்சர் றுவான் விஜேவர்த்தனவும் மாமனும் மருமகனும் என்று தனது உரையில் பல இடங்களில் கூறினார். இதைப் பலர் அப்படியே நம்பினார்கள். இது தவறான தகவல்.

பாதுகாப்புப் பிரதியமைச்சர் றுவான் விஜேவர்த்தனவின் தகப்பன் றஞ்சித் விஜேவர்த்தன ரணிலின் தாயார் நளினியின் கூடப்பிறந்த சகோதரன். இந்த வகையில் றஞ்சித் விஜேவர்த்தன ரணிலின் மாமனார். அவருடைய மகன் றுவான் விஜேவர்த்தன ரணிலின் மைத்துனர். மருமகனல்ல.

## கருணாநிதி பிரபல்யம் ஆகவில்லை



"உதயணன் - வாசவதத்தா" என்ற படம் 1946 பொங்கலன்று வெளிவந்தது. ஜீ.என். பாலசுப்பிரமணியமும் வசுந்தராதேவியும் சோடியாக நடித்த இப்படத்தின் படப்பிடிப்பு நடந்துகொண்டிருந்தபோது படத்தின் இசையமைப்பாளர் சீ.எஸ்.ஜெயராமன் வசனகர்த்தா ஏ.எஸ்.ஏ.சாமியிடம் வந்து "என் மைத்துனர் ஒருவர் நன்றாகத் தமிழ் எழுதுவார், அவரை உங்களுக்கு உதவி யாளராக வைத்துக்கொள்ளுங்கள்" என்று வேண்டுகோள் விடுத்தார். பிற்காலத்தில் பல வெற்றிப் படங்களுக்கு வசனம் எழுதிய வரான மு.கருணாநிதி தான் அந்த மைத்துனர். ஏ.எஸ்.ஏ.சாமி கருணாநிதியை உதவியாளராக வைத்துக்கொண்டார்.

ஜுபிடர் பிக்சர்ஸ் தயாரிப்பில் அபிமன்யு என்ற படம் 1948 இல் வெளிவந்தது. ஏ.எஸ்.ஏ.சாமி கேட்டுக்கொண்டதன் பேரில் கருணாநிதியே இப்படத்துக்கான வசனம் முழுவதையும் எழுதினார். ஆனால் படத்தின் டைட்டிலில் "வசனம் ஏ.எஸ்.ஏ.சாமி" என்று போட்டிருந்தார்கள். இது பற்றிக் கருணாநிதி முறைப்பாடு செய்தபோது ஜுபிட்டர் சோமு இவ்வாறு கூறினார்.

"உன் பெயர் பிரபலம் ஆகும் வரை பொறுத்திரு"

## இவர்களின் பூர்வீகம் தென்னிந்தியா

சிங்கள சமூகத்தில் நிலவும் சாதிப் பிரிவுகளில் இடைநிலைச் சாதியினரான கராவ, துராவ, சலாகம சாதியினர் கரையோரப் பகுதிகளையே தங்கள் வாழ்விடங்களாகக் கொண்ட கீழ்நாட்டுச் சிங்களவர்கள்.



கீழ்நாட்டுச் சிங்களவரின் மொத்த சனத்தொகையில் இவர்கள் ஏறக்குறைய முப்பது வீதத்தினராகும். பதின்மூன்றாம் நூற்றாண்டுக்கும் பதினாறாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் தென்னிந்தியாவிலிருந்து வந்து இலங்கையின் தென்மேற்குக் கரையோரங்களில் குடியேறிய இவர்கள் புதுச் சாதியினராகச் சிங்கள சமூகத்தின் சாதி அமைப்பில் உள்வாங்கப்பட்டனர்.

## துடிப்பான சேவையாளர்களால் துல்லியமான பெறுபேற்றுடன் மிளிரும்

# யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை



அதிபர்

**என். மகேந்திரராசா**

**வரலாறு**

பழமையும் வரலாற்றுப் பின்னணியும் இந்து பாரம்பரியமும் கொண்ட இப் பாடசாலை ஓர் ஆரம்ப பாடசாலையாக 18.01.1915 இல் உருவாக்கம் பெற்றது. இதற்கு இந்து மகாசபை முக்கிய பங்கினை வகுத்தது. இப்பாடசாலை நகரத்தின் மையப்பகுதியில் அமைந்துள்ளமையாலும் பாடசாலையின் பண்பாடு, விழுமியங்கள் காலத்திற்குக்காலம் தனித்துவம் மிக்கதாக பேணப்பட்டு வருக்கின்றமையால் சமூகத்தில் நன்கு மதிக்கப்படும் பாடசாலையாக திகழ்கின்றது.

21.01.1975 இல் இருந்து இந்துக் கல்லூரியின் நிர்வாக அமைப்பிலிருந்து முற்றாக விலகி யாழ். இந்து ஆரம்ப பாடசாலை என்ற பெயரில் தனித்துவமான கட்டமைப்புடன் ஆரம்பக்கல்விக்குரிய பாடசாலைகளில் ஒன்றாகத் திகழ்ந்து வருகின்றது.

**பாடசாலை விபரம்**

முகவரி : 224 கஸ்தூரியார் வீதி , யாழ்ப்பாணம்

கிராம அலுவலகர் பிரிவு இலக்கம் : J/ 101/ நீராவியடி

பிரதேச செயலாளர் பிரிவு நல்லூர்

தொகை மதிப்பட்டு இலக்கம் : 09452

குறியீட்டு இலக்கம்: 11105

வகை : தரம் iii

வகுப்புக்களின் பரம்பல்: 1-5(30 வகுப்புக்கள் )

பிரதான மொழிமூலம்: தமிழ்

தேரதல் தொகுதியின் பெயர்: நல்லூர்

தேர்தல் தொகுதியின் இலக்கம் : 87

**மாணவர் தொகை**

ஆண்கள் :817

பெண்கள் :600

மொத்த ஆசிரியர்கள் தொகை: 45

ஆண் ஆசிரியர்கள் :05

பெண் ஆசிரியர்கள் :40

கல்வி சாரா ஊழியர்கள்: 02

Vision | தூர நோக்கு

தூர நோக்கு மொழி, எண், சுற்றாடல் சார் .அனுபவக்கற்றலை, அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றின் தேர்ச்சியுடன், விழுமியமூடாக புலமைபெறச்செய்து ஆரோக்கியமான எதிர்கால நல்லூற்றுக்களைப் பிரசவித்தல்.


Mission **பணிக்கூற்று**

- எண், மொழி, சுற்றாடல் புலமை பெற்ற மாணவ சமூகத்தை விருத்தி செய்தல்.
- அறிவு, ஆற்றல், நலஅகம், விரிபார்வை, உடல், உள வாண்மை மிகு பிரஜைகளாக உருவாக்கல்.
- சமநிலை ஆளுமையும், பண்புசார் சமூகப் பொருத்தப்பாடும்மிக்க நிறைவான சமூகத்தை உருவாக்கல்.

- குலம்




இணை பாடவிதான விளையாட்டுச் செயற்பாடு






அதிபர், ஆசிரியர் குழாம்



மாகாணமட்ட ஆங்கில தின கவிதை கூறல் போட்டியில் 3ஆம் இடம் பெற்ற சிவகோணேசன் சிவாம்சன்

மாவட்ட மட்டத்தில் முன்னிலை பெற்ற மாணவர்கள்



இ.கபிஷன் 192 மா.நிலை 02
ம.கிருஷ்ணவி 190 மா.நிலை 04
ச.பேருஜன் 189 மா.நிலை 08
ந.கேசவன் 188 மா.நிலை 10

யாழ். இந்து ஆரம்ப பாடசாலை

புலமைப் பரிசில் பரீட்சை – 2014

சித்தியடைந்த 162 மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்



# மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் திருப்புமுனை ஏற்பட்டுள்ளது



மாணவர்களின் தனிப்பட்ட தேவைகள், பாடசாலைகளின் பௌதீக வளங்கள், பெற்றோர் களுக்கான வாழ்வாதார உதவி கள் என்பவற்றிற்கு முக்கியத் துவம் வழங்கி, கடுமையாக உழை த்ததன் பயனாக கிளிநொச்சி மாவட்டம் தற்போது பல மாற்றங் களைக் கண்டுள்ளது. இதனை மக்கள் நன்கு உணர்ந்துள்ளனர் என வடக்கு மாகாணசபை உறுப் பினர் வை.தவநாதன் தெரிவித் துள்ளார்.

நேற்று முன்தினம் .கிளி நொச்சி வலயக் கல்வித்திணைக் களத்தில் கற்றல் உபகரண தொகு திகளை வழங்கி வைக்கும் நிகழ் வில் கலந்துகொண்டு உரையாற் றும் போதே அவர் இவ்வாறு தெரி வித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்

மீள்குடியேற்றத்தின் பின்னர் கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி அபிவிருத்தியில் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகு மார் ஆற்றிய பங்களிப்பு, மாவட் டத்தின் கல்வி வளர்ச்சியில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தி யுள்ளது,

கடந்த மூன்று வருடங்களாக நாடாளுமன்ற உறுப்பினரின் சொந்த நிதியில் இருந்து இலவசமாக, கிளிநொச்சி மாவட் டத்தில் உள்ள தரம் ஐந்து புல மைப் பரிசில் பரீட்சை மாண வர்களுக்கான மாதிரி பரீட்சை வினாத்தாள்களை வழங்கி மாண வர்களின் கல்வி வளர்ச்சியை மேம்படுத்தியுள்ளார். அதுமட்டு மல்ல, பிரபல ஆசிரியர் அன்ப ழகன் அவரின் குழுவினரும் கிளிநொச்சி மாவட்டத் திற்கு நேரடியாக வருகை தந்து செயல மர்வுகளை நடாத்தியிருந்தார் கள். அதனடிப்படையில் புல மைப் பரிசில் பரீட்சையின் வெட் டுப்புள்ளிகள் யாழ்.மாவட்டத் தின் வெட்டுப் புள்ளியுடன் சம னாக காணப்படுகின்ற அளவுக்கு மாவட்டத்தின் கல்வி வளர்ச்சி காணப்படுகிறது.

அத்தோடு எமது இந்த முயற் சிக்கு பெற்றோர், பாடசாலை சமூ கம் உள்ளிட்ட அனைவரும் உழைக்க வேண்டும் அப்போதே, எமது மாணவர்கள் இன்னும் பல சாதனைகள் படைப்பார்கள் எனத் தெரிவித்தார்.

# ‘தமிழ் விருட்சம்’ அமைப்பினால் வறிய மாணவர்களுக்கு உதவி


(வவுனியா)

தமிழ் விருட்சம் சமூக ஆர்வலர்கள் அமைப் புடன், சிகரம் பவுண்டேசன் இணைந்து நேற்று முன்தினம் மரையடித்தகுளம் ஓமந்தையில் இந்தியன் வீட்டு திட்டத்தில் வசிக்கும் 25 மிகவும் வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் கடந்த செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டன.

மாதர் சங்கம் தமிழ் விருட்சத்திடம் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக லண்டனில் வாழும் சமூக ஆர்வலரான ஒரு பெண்மணியின் நிதி அனுசரணையின் மூலம் குறித்த கற்றல் உபகர ணங்கள் வழங்கி வைக்கபட்டன .


மரையடித்தகுளம் பொதுநோக்கு மண்ட பத்தில் நடந்த இந்த நிகழ்வில் வடமாகாணசபை உறுப்பினர் கௌரவ ம.தியாகராசா, தமிழ் விருட் சம் சமூக ஆர்வலர்கள் அமைப்பின் தலைவர் சந்திரகுமார் (கண்ணன்), சிகரம் பவுணடேசன் செய லாளர் டினேஷ், மாதர் சங்க தலைவி அஜந்தா, கிராம அபிவிருத்தி சங்க தலைவர் ராஜகோபால் பிள்ளை, செயலாளர், உறுப்பினர்கள், பொது மக்கள்,மாணவர்கள் என பலரும் கலந்து கொண் டனர்.

கிராம அபிவிருத்திச் சங்க செயலாளரின் தலைமையில் நடந்த இந்த நிகழ்வில் உரை யாற்றிய சந்திரகுமார் (கண்ணன்) சுமார் 4 km தூரம் நடந்து சென்று கற்று வரும் உங்களின



நிலையை மாதர் சங்கம் எடுத்து கூறியதுக்கு அமைவாக இந்த கற்றல் உபகரணங்களை லண்ட னில் வசிக்கும் ஒரு பெண்மணி மூலம் உங்க ளுக்கு கிடைக்க செய்து உள்ளோம்,ஆகவே நீங் கள் நன்றாக கற்று நல்ல பிரஜைகளாக வர வேண்டும் என்று கேட்டு கொண்டார். (70)

## வெள்ளி நற்சிந்தனை...



# உடலோடு உள்ளத்தையும் உயர்த்தும் (4)

மனம் என்றால் என்ன? என்ற கேள்விக்கு விடை யைத் தேடும் போது “மனிதன் என்றால் என்ன? என்ற கேள்வியும் உண்டாகும் அதற்கு வருகின்ற விடை மனம் என்றால் மனிதம் தான், மனிதன் என்றால் மனம் தான்” என்பதுவேயாகும். ஏனெ னில் உடல் உயிர் இந்த இரண்டடையும் எடுத்துக் கொண்டு உடல்தான் மனிதனா? என்று கேட்டால், உடலானது மனிதன்தான் என்று பதில் வரும்.

உள்ளத்தின் உள்ளே உள பலதீர்த்தங்கள்
மெள்ளக் குடைந்து நின்றாடர் வினை கெடப்
பள்ளமும் மேடும் பறந்து திரிவரே கள்ள முன
முடைக்கல் வியில்லாரே

என்று திருமந்திரம் கூறுகிறது.

இதில் என்ன ஐயம்? என்று சிலர் கேட்க லாம் உயிர் பிரிந்த பிறகு உடலை மனிதன் என்று எவரும் ஒப்புக் கொள்வதில்லை அப்படிப்பட்ட உட லும் உயிரும் சேர்ந்து இயங்கும் போது தான் மனம் என்ற ஒன்று விளக்கமாக இயக்கமாக நடைபெற்று வருகிறது. அதைத்தான் ஆங்கிலத் தில் பெசனாலிட்டி என்கிறோம்.

மனத்தின் தன்மை எதுவோ அது தான் மனி தனின் தன்மை மனத்தின் மாண்பும் உயர்வும் எதுவோ அதுவே மனிதனின் பெருமையும் உயர் வும் ஆகும். ஆகையால் மனத்தை எந்த அளவு தூய்மையாக வைத்துக் கொண்டு வலுப்படுத் திக்கொண்டு நெறிப்படுத்திக் கொள்கிறோமோ அந்த அளவுக்கு மனிதனுக்கு வாழ்க்கையில் வெற்றியும் பிறருடைய மதிப்பும் கிடைக்கும் மன வளமே மனிதனுக்கு வாழ்க்கையையும் வளம் நிறைந்ததாக ஆக்கும்.

மனம் எதைப்பற்றிக் கொள்கிறதோ அதை மனத்தால் பதிவு செய்து கொள்ள மந்திரம் உப யோகப்படுகிறது. மனதை நிலை நிறுத்தும் ஓர் மைப் பயிற்சிக்கு மந்திரத்தின் மூலம் பழக்கம ஏற்படுகிறது. முதலில் விக்கிரகத்தை வைத்துக் கொண்டு செய்யலாம்.பிறகு சொல்லை வைத் துக் கொண்டு செய்யலாம். ஒவ்வொருஎழுத்தும் எங் கிருந்து கிளம்பி ஒலியாக வருகிறதோ அதைப பொறுத்து அது இத்தனை நரம்புகளைத தேடும என்று இருக்கிறது

ஓம் என்ற சொல்லை எடுத்துக்கொண்டால், மூலாதாரத்திலிருந்து மூளைவரையில் உள்ள நரம்புகள் யாவும் இவ்வாறு தொடர்பட்டு இயக் கம் பெறுகின்றன. (தொடரும்)

**சொல்லின் செல்வர்**
**இரா.செல்வவடிவேல்**

# பதிவிறக்கப் பெட்டகம்

நேற்று சாலையில் நடந்து கொண்டிருந்த போது எதிரே ஒரு பள்ளி மாணவன். உடனே கவனத்தை ஈர்த்தது அவன் போட்டிருந்த ரீ–ஷேர்ட். காரணம், அதில் நான் படித்த பள்ளி யின் பெயர் இருந்தது. அப்போது எங்களுக்கு மஞ்சள் நிறம். எதிரே வந்த மாணவன் எங்களை கடுப்பேற்றிக் கொண்டிருந்த எதிர் அணியான நீல நிறத்தை அணிந்திருந்தாலும்கூட எனக்கு அந்த மாணவனை காரணமில்லாமலேயே உடனே பிடித்துப் போயிற்று. ‘இதோ.. இவன் என்னுடைய கன்னியின் தொடர்ச்சி’ என்று அந்தக் கணத்திலேயே ஒரு நேசம் படர்ந்தது. ஆனால் சற்று நேரத்திலேயே அதிலுள்ள அபத்தம் உணர்ந்து உடனேயே அந்த நெகிழ்வு கலைந்து போனது.

தங்களின் சாதி, மத, மொழி, தேசம் போன்ற கற்பிதங்க ளைச சேர்ந்தவர்கள் என்பதாலேயே முன்பின் சந்தித்திராத அந்நியர்களின் மீது சார்புநிலையிலான மனோபாவம் தோன்றுவதும் அது அல்லாதவர்களின் மீது எதிர்மனோபாவம் தோன்றுவதற்கான துவக்கப்புள்ளிகள் இப்படித்தான் அமை கின்றன. **– சுரேஷ் கண்ணன்**

தனி மனிதனை அரித்துத் தின்னும் பொறாமையை, அவன தனக்கும் பிறரிடத்தும் மறைக்கும்போது அது சக மனி தர்களிடம் பரவியிருக்கும் ஒரு கூட்டுக் கனவாகி, அவர்களை இன வாதத்திற்கு இட்டு சென்றது. தங்களை குறித்து தாங் களே மகிழ்ந்திராத ஒடுக்கப்பட்ட ஜேர்மனியர்களுக்கு இந்த இன வாதம் ஒரு பெரும் வரப்பிரசாதமாக அமைந்தது. மந்த மான (maladroit) கிறிஸதுவ மாணவர்கள், சிந்திக்கத் தெரி யாத விற்பனையாளர்கள் மற்றும் தப்புக் கணக்கு போட்ட தொழில் முனைவர்கள் யூதர்களின் தொடர்ந்த வளர்ச்சி குறித்து குற்றம் சொல்லிக் கொண்டே இருக்க முடியவில்லை. இது தார்மீக உணர்வுக்கு உவப்பானதாகவுமில்லை, தோல்வி குறித்த பயத்தை அதிகரிக்கவும் செய்தது. அதனால், தங் கள் பொறாமையையும், யூத–எதிர்ப்பையும், இன அவதா ராக மாற்றிக்கொண்டனர். இந்த இன வாதக் கோட்பாடு, தங் களைக் குறித்து சந்தேகமும், தாழ்வுணர்ச்சியும் கொண் டிருந்த பலவீனமான ஜேர்மானியர்களை, தாங்கள் ஒரு வலுவான மற்றும் உயர்ந்த அறிவுஜீவிகளாகக் கற்பனை செய்துகொள்ளும் கூட்டத்தினராக மாற்றியது. இனவாதம் என்பது பலவீனத்தால் உந்தப்பட்டு மந்தைக்குள் சென்று சேர் வதன்றி வேறல்ல. **– கொட்ஸ் ஆலி**

வளரிளம் பருவத்தில் நாம் மற்றவர்கள் முன்னால் நம் மைக் காட்டிக்கொள்கிற விதம்தான் நம்முடைய வாழ்க்கை என்றும், நம்முடைய ஆளுமை என்றும் நினைத்துக் கொள்கி றோம். அதாவது அப்போது “இருத்தல்” என்றாலே, தோற்ற மளிப்பதுதான். விதவிதமாக பிறரிடம் நம்மை நிரூபித்துக் கொள்வது பற்றியே கனவு கண்டுகொண்டிருக்கிறோம்.

பழப்படியாக நம்மை மற்றவர்கள் பொருட்படுத்தவில்லை என்றும், அவர்களுக்கும் நமக்கும் பெரிய தொடர்பெல்லாம் ஒன்றும் இல்லை என்றும் தெரியவருகிறது. ஒரு தோற்றத்தை மட்டும் மற்றவர்களுக்குத் தந்துவிட்டு நம்முடைய விருப்பப்படி நம்மை வைத்துக்கொள்ள வேண்டும் என்றும் புரிந்துகொள் கிறோம். **– கன்னியாகுமரி நாவலில்**

நாம் யோசிக்கக் கற்றுக்கொண்டு விட்டோம். ஆகவே அந்த வித்தையைப் பிரயோகிப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம். ஆனால் நாம் யோசித்தாலும் யோசிக்காவிட்டாலும் வாழ்க்கை ஒவ்வொரு கணமும் கழிந்து கொண்டே இருக்கிறது. சிந் தனைகள் நமக்கு நாமே கூறிக்கொள்ளும் ஒருவகை சமா தானங்கள்தான். உன் பாதையில் ஏற்பட்ட தோல்விக்கு கார ணம் கற்பிப்பதற்காக, நீ பாதையே தவறு என்ற ரீதியில் சிந் திக்கத் தொடங்குகிறாய். இந்தச் சிந்தனை உனக்கு இத மாக இருக்கிறது. ஏனென்றால், உன் பொறுப்புகள் தட்டிக் கழிக்கப்படுகின்றன. **– ஆதவன்**

என்க்கு ஊக்கமளிக்கும் அறிவுரைகளைக் கொட்டிக் கவிழ்த்துவிடும் ஆவலோடு யாரும் தயவுசெய்து வந்து விடாதீர்கள். உடல் ஆரோக்கியம் மிக்க ஒருவன் நோய்வாய்ப் பட்ட இன்னொருவனை தன்னுடைய ஆரோக்கியத்தின் ஒரு துளியைக் கொண்டும் உத்வேகப்படுத்திவிட முடியாது. ஒரு மனிதனின் சூழ்நிலைகளை எல்லாம் ஆழ்ந்தறிந்து விடலாம் என்று நீங்களாக முடிவு செய்து விடாதீர்கள். **– கதே (காதலின் துயரம்)**

# சட்டத்திற்கு முரணாக அனுமதி வழங்கல்

## போக்குவரத்து அமைச்சு விசாரணை

(கொழும்பு)

அதிவேக வீதிகளில் சேவையில் ஈடுபடும் சில பேருந்துகளுக்கு சட்டத்திற்கு முரணாகவும், கேள்வி மனுக்கள் கோரப்படாலும் அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டமை தொடர்பில் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக உள்ளக போக்குவரத்து அமைச்சு குறிப்பிடுகின்றது.

விசாரணை அறிக்கை கிடைக்கப்பெற்றதன் பின்னர், அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் ரஞ்ஜித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

நியாயமற்ற முறையில் தற்காலிகமாக சில பேருந்துகளுக்கு அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார்.

இந்த முறைப்பாடுகள் தொடர்பில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

விசாரணை அறிக்கை கிடைத்ததும் அவ்வாறான அனுமதிப் பத்திரங்களை இரத்துச்செய்வதற்கு அல்லது அபராதம் விதிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் ரஞ்ஜித் மத்தும பண்டார குறிப்பிட்டார்.

இதேவேளை, போக்குவரத்தில் ஈடுபடும் அரை சொகுசு பஸ்களின் தரம் தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளதாகவும் உள்ளக போக்குவரத்து அமைச்சு தெரிவித்தது.

மக்கள் மேலதிக பணத்தை போக்குவரத்திற்கு வழங்குவதால், அதற்கேற்றவாறு பேருந்துகளின் தரம் காணப்பட வேண்டுமென அமைச்சர் ரஞ்ஜித் மத்தும பண்டார மேலும் சுட்டிக்காட்டினார்.

### பேனா வடிவில் துப்பாக்கி சந்தேக நபர் கைது

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட பேனா அமைப்புடைய துப்பாக்கியுடன் சந்தேகநபர் ஒருவர் தங்காலை குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட மேலுமொரு துப்பாக்கி மற்றும் ரவைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

தங்காலை குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றின் அடிப்படையில், கடுவன - கொடுவேகொட பகுதியில் இந்த சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சந்தேகநபர் கடுவன பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்பதோடு, இவர் புதையல் தோண்டும் நடவடிக்கைகளுக்கு செல்லும் போது துப்பாக்கியை பயன்படுத்துவதாகவும் தெரியவந்துள்ளது.

குறித்த துப்பாக்கி சந்தேக நபருக்கு எவ்வாறு கிடைக்கப்பெற்றது என்பது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### ஊடகப் பேச்சாளராக ருவான் குணசேகர நியமனம்



(கொழும்பு)

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன கொழும்பு - வடக்கு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், புதிய பொலிஸ் ஊடகப் பேச்சாளராக உதவி பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர நியமிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் நேற்று தெரிவித்துள்ளது.

# தேர்தல் முறையில் மாற்றம் ஏற்றுக்கொள்ள முடியாது

ஜே.வி.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

தேர்தல் முறைமை மாற்றத்திற்கு ஜே.வி.பி. கட்சி கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது. தேசிய நிறைவேற்றுப் பேரவை நேற்று கூடிய போது ஜே.வி.பி. கட்சி இந்த எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.


விருப்பத் தெரிவு முறைமையில் மாற்றம் ஏற்படுத்தப்படுவதனை ஏற்றுக்கொள்ள முடியும் என ஜே.வி.பி.யின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

எனினும் விகிதாசார முறைமையில் மாற்றம் ஏற்படுத்தப்படுவதனை முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாது.

விகிதாசார முறைமையில் மாற்றம் செய்யப்படுவதனால் சிறு கட்சிகளின் இருப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படக்கூடும். எனவே விகிதாசார முறைமை மாற்றத்தை ஜே.வி.பி. கட்சி எதிர்க்கின்றது.

ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தை இரத்துச் செய்தல் மற்றும் 19 ஆம் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தல் ஆகியனவற்றுக்கு இணக்கம் காணப்பட்டது 19 ஆவது திருத்தச் சட்டம் எப்போது நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என்பது பற்றிய விபரங்கள் வெளியிடப்படவில்லை.

இதேவேளை, அவன் கார்ட் மிதக்கும் ஆயுதக் களஞ்சியம் தொடர்பிலான விசாரணைகள் கிரமமாக நடாத்தப்பட வேண்டுமெனவும் இணக்கம் காணப்பட்டது என அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.



## பரமர் சங்கமம்

தடக்கி விழுந்தால் அது ஒரு சமாதான நீதிவான் ஜே.பியாக இருக்கும் எண்டொரு காலம், பாரிய இடப்பெயர்வுகளுப் பின்பாக யாழ்ப்பாணத்திலை இருந்தது. ஏனெண்டா அப்ப கட்சிகள், அமைப்புகள் அதிகமாகப் புழங்கிய காலம். அப்ப ஒவ்வொரு கட்சிகளுக்கும் அமைப்புகளுக்கும் ஜே.பி.க்களை நிரப்புற விண்ணப்பப் படிவங்கள் தாராளமாக வழங்கப்பட்டதாலை அந்நிலைமை வந்ததெண்டு சொல்லுவினம்.

இண்டைக்கெண்ணெண்டா ஊரிப்பட்ட பெட்டை. பெடியள் செல்லாம் மீடியா ஊடகமெண்டு மலிஞ்சேபோச்சு. அண்டைக்கு [03.03.2015] செவ்வாய்க்கிழமை இரவு 7 மணி இருக்கும் வண். வடமேற்கு நாவலடி வீதியாலை வீட்டை போகச் சைக்கிளில் போனன்.

ஐயா இண்டைக்குப் போகமாட்டார் போல பின்னாலை குரல் கேட்டுது. போகட்டும் பாப்பமெண்டு கவனிச்சன். ஒரு பெடை இதுக்கிடேலை நுளைஞ்சு சைக்கிளில் பறந்துது.. பின்னாலை ரெண்டு பேர் ஒரு சைக்கிளில் லைச்சினம்.

இவைதான் தங்களுக்கு இடைஞ்சலா இருக்கெண்டு ஐயா இண்டைக்குப் போகமாட்டாரெண்டவை. மனதிலை உறைச்சுது. 'டேய் என்னடா சேட்டை' எண்டன். கொஞ்சத் தூரம் முன்னுக்கோடினவை நிண்டினம் பெட்டை தப்பிட்டுது.

டெண்டவை மனதிலை உறைச்சுது டேய் என்னடா சேட்டை... எண்டன் கொஞ்சத் தூரம் முன்னுக்கோடினவை நிண்டினம். பெட்டை தப்பிட்டுது.

நானும் இவை நிண்ட இடத்திலை சைக்கிளை நப்பாட்டு என்னைத் தெரியுமா எண்டன் நீயும் மீடியா நானும் மீடியா எண்டன் அவலே ஒருவன் 'மீடியா இருக்கிட்டும் என்னடா சேட்டை ஐயா போகமாட்டேண்டு' பெட்டையைப் பற்றிப் பிரஸ்தாபிக்காமல் என்ரை விசயத்தைச் சொன்னான்.

அவருக்கு நானதைக் கவனிக்கேல்லை எண்டது தென்பைக் கொடுத்திருக்கு. பிறகென்ன சண்டித்தனக் கதையள் அக்ஷன்கள், கையோடை கையைக் குத்துவதுமாக முறைச்சார். கடைசிலை நீ மீடியா இல்லை மோடியா எண்டிட்டுப் பேசிக்கொண்டு போட்டன்.

விசாரிச்ச அளவில் அவரேற்கனவே ஆரியகுளம் பகுதியிலை பெட்டை ஒண்டோடை பிரச்சினைப்பட்டதா மாதர் சங்கத் தலைவி மூலம் அறியக்கிடைச்சிருக்கு. அவரெந்த மீடியாவிலை வேலை செய்யிறார். பெயர் என்னவெண்டும் அறியேல்லை.

இப்ப என்னெண்டா 10 ஆம் திகதிப் பேப்பர்லை 29 வீதமான பெண் ஊடகவியலாளர் பாலியல் துன்புறுத்லுக்கு உள்ளாகின்றனரெண்ட செய்தியைப் பார்த்ததும் இந்த ஞாபகம் வந்துது. அந்தத் தகவல்களில் அது சம்பந்தமான முறைப்பாடுகள் இதுவரை பதிவாகவில்லையெண்டும் சொல்லப்பட்டுள்ளது. அதுக்கு பாதிக்கப்பட்ட பெண் ஊடகர் சம்மந்தப்பட்டவர்களிடம் முறைப்பாடு செய்தும் பயனில்லாததே காரணமெனவும் சுறப்படுகிறது.

சமுதாயத்தின் குற்றங்குறை களையும் தொழிலான மீடியா மட்டத்திலே சீரழிவுகள் நடக்கேக்கை மற்ற இடங்களிலை கேக்கவே வேணும். இதுக்கிடேலே இன்னொரு சேதி வட இந்திய மாநிலமான நாகாலந்தில் பெண்ணொருவரை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி சிறை வைக்கப்பட்டிருந்த நபரை சிறைக்குள் நுழைந்தவர்கள். நிர்வாணமாக்கி வீதிகளில் இழுத்து வந்து மரண தண்டனை நிறைவேற்றினெண்டும் வந்திருக்கு.

தடக்கி விழுவதும் விளாதத்தும் எங்களிலைதான் இருக்கு. முதல்ல எங்கட்டை இருக்கிற அழுக்குகளைப் போக்கிப் பாக்க வேணும். இல்லையே பின்னை சொல்லுங்க பாப்பம்...

# இலங்கையர் கொலை நால்வர் கைது

(கொழும்பு)

பிரிட்டனில் இலங்கையர் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் குறித்து இதுவரை நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கு மிட்லேண்ட் - பொலேசில் பகுதியில் உள்ள வீட்டில் வைத்து கடந்த மார்ச் 05 ஆம் திகதி அடிகாயங்களுடன் ஒருவர் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அன்றைய தினம் மாலை உயிரிழந்தார்.

உயிரிழந்த நபர் இலங்கைப் பிரஜையான 48 வயதுடைய அருணாச்சலம் அருணேநாதயன் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

பிரேத பரிசோதனை அறிக்கையில் இவர் தாக்குதலுக்கு உள்ளாகியே உயிரிழந்ததாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனை அடுத்து கொலைச் சந்தேகத்தின் பேரில் கொவன்றி, பெட்வேர்த் பகுதி விடுதி ஒன்றில் பணிபுரியும் கிரிதாஸ் சிறிஸ்கந்தராஜா என்பவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அவர் பேர்மிங்காம் குற்றவியல் நீதிமன்றில் ஆஜர் செய்யப்படவுள்ளார். இந்நிலையில் கொலையுடன் தொடர்புடைய சந்தேகத்தில் 20, 31 மற்றும் 39 வயதுடைய மேலும் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

## சுற்றுலா விசாவில் தொழில் செய்யும் 74 இந்தியர்களை நாடு கடத்தத்திட்டம்

(கொழும்பு)

சுற்றுலா விசாவில் இலங்கை வந்து தொழில் நடவடிக்கையில் ஈடுபட்ட இந்தியர்கள் சிலரை நாடு கடத்த குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தீர்மானித்துள்ளது.

மத்துகம பிரதேச தொழிற்சாலை ஒன்றில் பணிபுரிந்த 74 பேரே இவ்வாறு நாடு கடத்தப்படவுள்ளனர்.

சுற்றுலா விசாவில் வந்த இந்தியர்கள் சிலர் குறித்த தொழிற்சாலையில் பணியாற்றுவதாக குடிவரவு மற்றும் குடிய கல்வு திணைக்கள அதிகாரிகளுக்கு தகவல் கிடைத்தது.

அதன்படி, விசாரணை நடாத்திய குடிவரவு மற்றும் குடியகல்வு பிரிவு குறித்த இந்தியர்களின் கடவுச்சீட்டுகளை பறித்துள்ளது

### போதை பொருள் வர்த்தகம் 8 பேர் பொலிஸாரால் கைது

ஈஸி கேஷ் எனப்படும் கையடக்க தொலைபேசி மூலம் பணத்தை பரிமாற்றிக் கொள்ளும் முறையின் ஊடாக, போதைப் பொருட் வணிகத்தில் ஈடுபட்ட எட்டு பேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பண்டாரவளையில் வைத்து அவர்கள் கைதானதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கையடக்க தொலைபேசியின் மூலம் பணத்தைப் பெற்றுக் கொள்ளும் போதைப் பொருள் வியாபாரிகள், அதற்கான பண்டாரவளை - அட்டாம்பிட்டிய வீதியில் பல்வேறு இடங்களில் மறைத்து வைப்பர். பணத்தை செலுத்தியவருக்கு மறைத்து வைக்கப்பட்ட இடம் கூறப்பட்டு, அதனை அவர் பெற்றுக்கொள்ளும் வகையிலான நடைமுறை ஒன்று பின்பற்றப்பட்டு வந்துள்ளது.

தகவல் ஒன்றின் அடிப்படையில் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.




முல்லைத்தீவு மாவட்டத்தின் பெண்கள் எழுச்சி நாள் நிகழ்வு அண்மையில் முல்லைத்தீவு கடற்கரைப் பகுதியில் மாவட்ட செயலக இணைப்பாளர் திருமதி தேவராசா பற்றிமா தலைமையில் இடம்பெற்ற போது.. (40)

41. நாம் நீரை சுடவைத்துப் பருக வேண்டும் எனக் கூறப்படுவதற்கான காரணம்
(01). சுடவைக்கப்பட்ட நீர் சுவையானது என்பதாகும்
(02). நீரினால் பரவும் நோய்களைத் தடுப்பதற்காகும் (.....)

42. பாதை ஒன்றை அமைப்பதற்கு 8 மனிதர்களுக்கு 10 நாட்கள் தேவை. என கணக்கிடப்பட்டது. இதே வேலையை 5 மனிதர்களைப் பயன்படுத்தினால் எத்தனை நாட்களில் முடிப்பர்?
(01). 10 (02). 16 (03). 20

43. கமலன் வரிசை ஒன்றில் முன்னாலிருந்து ஆறாவதாகவும் பின்னாலிருந்து எட்டாவதாகவும் நிற்கின்றான். எனின், வரிசையில் உள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?
(01). 12 (02). 13 (03). 10

44. ஒரு பண்ணையில் மாடுகளும், கோழிகளுமாகச் சேர்த்து 16 உள்ளன. அவற்றின் கால்களின் எண்ணிக்கை 56ஆகும். ஆகவே பண்ணையிலுள்ள மாடுகளின் எண்ணிக்கை யாது?
(01). 4 (02). 12 (03). 14

45. குறிப்பிட்ட ாணவர்கள் கணித பாடத்தில் பெற்ற புள்ளித்தகவல்கள் பின்வருமாறு குறியீடுகள் மூலம் காட்டப்பட்டுள்ளன.
குறைவு > கூட மதன் > சுஜீவ்
கூட < குறைவு மதன் < ரமேஸ்

இதற்கேற்ப புள்ளித்தகவல்களில் அதிக எண்ணிக்கையில் உள்ளவர் யார்?
(01). சுஜீவ் (02). மதன் (03). ரமேஸ்

46. இந்தப்புள்ளித் தகவல்களில் கூடியதில் இருந்து குறைந்தது வரை ஒழுங்குபடுத்தும் போது கிடைக்கும் சரியான விடையைத் தெரிக
(01). மதன், ரமேஸ், சுஜீவ் (02). சுஜீவ், மதன், ரமேஸ் (03). ரமேஸ், சுஜீவ், மதன்

47. மாசி மாதத்தில் 29 நாள்களை உடையது. நெட்டாண்டு ஆகும். ஒவ்வொரு 4ஆண்டுகளுக்கு ஒருமுறை நெட்டாண்டு வரும் 1992ஆம் ஆண்டு நெட்டாண்டு ஆகையால் 29 நாள்கள் கொண்ட மாசி மாதங்கள் பின்வரும் எந்த ஆண்டுகளில் வரும்?
(01). 2006உம் 2010உம் (02). 2012உம் 2016உம் (03) 2010 உம் 2014 உம்

48. 200ml கொள்ளும் பாத்திரத்தினால் 10 தடவைகள் பால் அளந்து ஒரு பானையில் இடப்பட்டது. பானையில் உள்ள பாலின் அளவு எத்தனை லீற்றர் ஆகும்?
(01). 3L (02). 5L (03). 2L

### நேற்றுமுன்தினம் பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

(01).1. 2 2. 2 3. 3 (02).5. 3 6. 3 7. 2 8. 2 9. 3 10. 2 11. 1
12. 3 13. 3 14. 1 15. 1 16. 2 17. 2 (03).18. பயிற்சியளிப்பதற்கு
19. விளையர் 20. மகிழ்ச்சி (04). 21. காலை / காலைவேளை / அதிகாலை
22. இசை / கீதம் / பாட்டு / சத்தம் / ஓசை 23. மென்மை 24. மென்மையான பட்டுக்கம்பள விரிப்பு போன்ற தரை / நீலவண்ண ஆடையைப் போன்ற அலைகள் 25. நீர் / ஆறு
26. அங்குமிங்கும் 27. மலர் + இதழ் 28. வருடிச்சென்றது / தொட்டுச்சென்றது
29. காட்சியளிக்கும் (05).30. வேலை 31. உலவு (06).32. கல் பாறையில் இருந்து விழுந்தது
(07).33. நாங்கள் சுயசுத்தம் பேணுவோம் (08).34. விதண்டாவாதம் 35. தந்திரமாக பேசுதல்
(09).36. அணிந்துரை 37. தீர்ப்பு 38. அநாதை (10).39. மன்னா ! என்ன கூறுகிறீர்கள்?
40. சங்கர் தனது தாயைப் பார்த்து 'நாளைக்குப் பாடசாலைக்கு வருவீர்கள் தானே'' என்று கேட்டான்
(11).41. கவிதாவும் தங்கையும் பொருட்கள் வாங்குவதற்காகச் சந்தைக்கு சென்றனர்
(12).42. முன்தாதிர் 43. விண்பெருமை (13).44. Yester day 45. today
46. tomorrow (14).47. அமைதியாக இருக்கவும் 48. எவ்வளவு?
49. நான் வலைப்பந்து விளையாடுகின்றேன் (15).50. இது எனது புத்தகம் 51. காகம் கறுப்பு நிறம்
(16).52. 4 53. 2

**பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்**



தரம் - 4 பரீட்சை முன்னோடி- 2015

பகுதி - I
1 மணி 30 நிமிடம்

# கல்வி முரசு



எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க

01. பின்வருவனவற்றுள் சீனாவின் பெல்ஜியம் ஒலிம்பிக் நிகழ்ச்சியில் சின்னமாக கொள்ளப்படும் பிராணி எது?
(01) காட்டுக்கோழி (02) கங்காரு (03) பண்டா (04) புறா


02. உடலுக்கு சக்தியைக் கொடுப்பதில் பெரிதும் செல்வாக்குச் செலுத்தும் உணவுச்சோடி எது?
(01) பசுப்பாலும் முட்டையும் (02) பயறும் சோயாஅவரையும்
(03) சோறும், கிழங்கும் (04) தோடம்பழமும் முட்டையும்

03. விற்றமின் A குறைபாட்டால் ஏற்படும் நோய் எது?
(01) மாலைக்கண் (02) குருதிச்சோகை (03) கண்டமாலை (04) மரஸ்மஸ்

04. பயிர்களிடையே காணப்படும் நன்மை செய்யும் பூச்சிகளை அழிக்காது பயிருக்கு தீங்கு செய்யும் பூச்சிகளை மட்டும் கட்டுப்படுத்தும் வழியல்லாதது
(01) களையை உரிய வேளையில் அழித்துவிடல்
(02) பூச்சிகளை கையால் சேகரித்து அழித்தல்
(03) பூச்சிகளின் முட்டைக் குவியல்களை சேகரித்து அழித்தல்
(04) பயிர்களுக்கு கிருமிநாசினியை தெளித்தல்

05. பூச்சிபீடைகளை கட்டுப்படுத்தும் பாரம்பரிய முறையல்லாதது
(01) அடுப்புச் சாம்பலை பயிர்மீது தூவுதல்
(02) வேப்பெண்ணெய்க் கரைசலை பயிர்மீது தெளித்தல்
(03) பயிர்கள் மீது முசுறுக் கூட்டைப் போடுதல்
(04) கிருமி நாசினியை பயிர்களுக்கு தெளித்தல்

06. இக்குறியீடு குறிப்பது



(01) முன்னால் பாதுகாப்பான புகையிரதக்கடவை
(02) பஸ்வண்டி ஒழுங்கை
(03) வீதிதடை செய்யப்பட்டுள்ளது
(04) பாதுகாப்பற்ற புகையிரதக்கடவை

07. தாவரங்களின் இளங்கொழுந்துகளின் கீழ்ப்பகுதியில் முட்டையிடும் பிராணி எது?
(01) கரப்பான் (02) வண்ணாத்துப்பூச்சி (03) எறும்பு (04) இலையான்

08. நீரில் வாழ்ந்து நிலத்தில் முட்டையிடும் பிராணி எது?
(01) நுளம்பு (02) வாத்து (03) ஆமை (04) தவளை

09. இந்நாட்டிலுள்ள சாதாரண தபால் மூலம் கடிதத்தை அனுப்புவதற்கு எவ்வளவு பெறுமானமுள்ள முத்திரை தேவைப்படும்?
(01) 20ரூபா (02) 30ரூபா (03) 10ரூபா (04) 50ரூபா

10. தேசப்படத்தில் புகையிரதப் பாதையை காட்டுவதற்கு பயன்படுத்தப்படும் நிறம் என்ன?
(01) நீலம் (02) கறுப்பு (03) சிவப்பு (04) கபிலம்

11. களனிகங்கை கடலுடன் கலக்கும் இடம் எது?
(01) திருகோணமலை (02) களுத்துறை (03) கொழும்பு (04) மாத்தறை

12. நிலத்தில் விழும் ஒரு துளிநீரும் பயன்படுத்தப்படாமல் கடலில் சென்று விழக் கூடாது என்று கூறிய மன்னன் யார்?
(01) பண்டுகாபயன் (02) தாதுசேனன்
(03) மகாசேனன் (04) மகாபராக்கிரமபாகு

13. கலாவாவியை கட்டிய மன்னன் யார்?
(1) தாதுசேனன் (2) மகாசேனன் (3) பண்டுகாபயன் (4) முகலன்

14. இயற்கை அனர்த்தம் அல்லாதது பின்வருவனவற்றுள் எது?
(1) புவியதிர்ச்சி (2) மின்னல் (3) வீதிவிபத்து (4) சூறாவளி

15. தீப்பிடித்த ஒருவர் செய்ய வேண்டியது எது?
(1) ஓடுதல் (2) நீரை ஊற்றுதல்
(3) நிலத்தில் உருளுதல் (4) இன்னொருவரை இறுகப்பிடித்தல்

16. பின்வருவனவற்றுள் கிராமிய விளையாட்டு எது?
(1) கிட்டியடித்தல் (2) கரப்பந்து (3) பூப்பந்து (4) காற்பந்து

17. சிறுவர்களுக்கு உடல் ரீதியாகவோ, உளரீதியாகவோ துன்பம் விளைவிப்போர் பற்றி அறிவிக்க வேண்டிய தொலைபேசி இலக்கம் எது?
(1) 119 (2) 1919 (3) 456 (4) 147

18. பனிக்கட்டியை நீரில் இட்ட போது அவதானிக்க முடியாதது எது?
(1) பனிக்கட்டி கரையும் (2) நீர் குளிர்ச்சியடையும்
(3) பனிக்கட்டி மிதக்கும் (4) பனிக்கட்டி கரையாது

19. உடையில் படிந்த தார்க்கறையை அகற்றப் பயன்படுவது எது?
(1) சவர்க்காரம் (2) தேங்காய்யெண்ணெய்
(3) மண்ணெண்ணெய் (4) நீர்

20. இலங்கை அரச இலச்சினையில் தன்னிறைவைக் குறித்து நிற்பது எது?
(1) தர்மசக்கரம் (2) நிறைகுடம் (3) நெற்கதிர் (4) பூவிதழ்கள்


21. இலங்கையில் இரு மாவட்டங்களின் பெயர்களை எழுதுக?
(1) .................................... (2) ....................................

22. காட்டப்பட்டுள்ள இலக்க அட்டைகள் நான்கையும் பயன்படுத்தி ஆக்கத்தக்க மிகச்சிறிய எண் யாது?

| | |
|---|---|
| 9 | 7 |
| 0 | 5 |

............................................................

23. உருவில் ஒரு தாயக்கட்டை காணப்படுகின்றது அதன்
01. விளிம்புகளின் எண்ணிக்கை யாது? ..............................
02. உச்சிகளின் எண்ணிக்கை யாது? ..............................




24. 8450 உடன் 706 ஐக் கூட்டுக. கூட்டுத்தொகை யாது?
............................................................

25. 7600 இலிருந்து 345 ஐக் கழிக்க வித்தியாசம் யாது?
............................................................

26. கீழ் உள்ள சொற்களுடன் பெரும்பாலும் தொடர்புபட்ட உருவைத் தெரிவு செய்து கோடிடுக
1. வீடு 2. விலங்கு 3. நன்றி, விசுவாசம் 4. அதிக மோப்பசக்தி


1.


2.


3.

27. 0.25, 0.75, 0.2, 0.5, 1.25 போன்றவற்றை ஏறுவரிசைப்படுத்தினால் வருவது
01. 1.25, 0.75, 0.25, 0.5, 0.2
02. 0.2, 0.5, 0.25, 1.25, 0.75
03. 0.2, 0.5, 0.25, 0.75, 1.25



28.

| | | | | |
|---|---|---|---|---|
| △ | ▭ | ○ | □ | ? |
| ○ | □ | ○ | △ | 11 |
| 5 | 9 | 4 | 7 | 25 |

(1) 14 (2) 12 (3) 10

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| R | L | 5 | 1 | L | 2 | M | A | 2 | 5 | 1 | 0 | 2 | A | L |
| C | 7 | 8 | 1 | L | 5 | 6 | 8 | L | 2 | T | 8 | 2 | S | |

29. அதிகளவில் எழுதப்பட்ட இலக்கம் எது?
(01). 8 (02). 1 (03). 2

30. அதிகளவில் எழுதப்பட்ட ஆங்கில எழுத்து எது?
(01). L (02). S (03). A

31. தற்போது சுதனின் வயது 12ஆகும். அவனுடைய வயது சகோதரனின் வயதின் நான்கு மடங்காகும். சுதனின் வயது இன்னும் எத்தனை ஆண்டுகளில் சகோதரனின் வயதின் இரு மடங்காக இருக்கும்?
(01). 2 (02). 5 (03). 6

32. 5600 ரூபாவின் $\frac{3}{8}$ ஐ சுரேஸ் செலவு செய்தான். மீதியை தங்கைக்குக் கொடுத்தான். அவன் தங்கைக்குக் கொடுத்த பணம் எவ்வளவு?
(01). 1400ரூபா (02). 3500ரூபா (03). 2000ரூபா

ரமணியின் தாயின் பெயர் விமலா, தகப்பனின் பெயர் சுதாகர் தீபன் விமலாவின் சகோதரன், தீபனுக்கு சுமதி, ஜோன் என்னும் இரு பிள்ளைகள் உள்ளனர்.

33. ஜோன் ரமணிக்கு என்ன உறவு முறை
(01). மாமா (02). சகோதரன் (03). மச்சான்

34. விமலா சுமதிக்கு என்ன உறவு முறை
(01). மருமகன் (02). பேத்தி (03). மாமி

35. பழமொழிக்குரிய கருத்தினை தெரிவு செய்க
வெள்ளம் வருமுன் அணைகட்ட வேண்டும்
(01). ஒரு வேலையைச் செய்யத்தொடங்க முன் அதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொள்ளல்
(02). ஒன்றை செய்ய முன் அதற்கான பலனை எதிர்பார்த்தல்
(03). நஷ்டம் ஏற்படாத வேலைகளில் ஈடுபடுதல்

36. வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்
(01). திறமையானவன் புல்லை ஆயுதமாகப் பயன்படுத்துவான்
(02). வல்லவனுக்கு முன்னால் புல் ஆயுதமாக மாறிவிடும்
(03). திறமையானவன் எதையும் சாதிப்பான்

பொருத்தமான சொற்களைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக

37. பசு : கன்று போல சிங்கம் : ..........................................
(01). குட்டி (02). குருளை (03). பிள்ளை

38. சோறு : பசி போல நீர் : ..........................................
(01). போத்தல் (02). கிணறு (03). தாகம்

39. விளக்கு : வெளிச்சம் போல கல்வி : ..........................................
(01). பணம் (02). அறிவு (03). புத்தகம்

40ஆம், 41ஆம் வினாக்களுக்கு மிகச்சரியான விடையின் இலக்கத்தை அடைப்புக்குறியினுள் இடுக.

40. நாம் அதிக நேரம் புத்தகங்கள் வாசிக்க வேண்டும். எனக் கூறப்படுவதற்கான காரணம்
01. நாம் புதிய புதிய தகவல்களையும் அறிவினையும் பெற்றுக்கொள்ள முடியும் (......)
02. நாம் எழுத்துக்களைப் பற்றித் தெரிந்து கொள்ள முடியும்

# நொதேர்ன் பவர் நிறுவனத்தின் ஊழியர்கள் வேலையிழக்கும் நிலை

## ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியிடம் மகஜர் கையளிப்பு



(யாழ்ப்பாணம்)

தவறுகள் எமது பக்கமிருப்பின் மின்சார உற்பத்தி நிறுவனத்தின் செயற்பாடுகளை மூடிவிடுவதற்கு நாங்கள் முழுமையான நடவடிக்கையை மேற்கொள்வோம். ஆனால் திட்டமிட்ட வகையில் பழி வாங்கு முகமாக எமது தொழில்கள் இழக்கவைக்கப்படுவதனால் இதையே நம்பி தமது வாழ்வாதாரத்தை நகர்த்தி வரும் 55 மேற்பட்ட தொழிலாளரகளான எமது குடும்பங்களின் நிலைபற்றி சிந்தித்துப்பார்க்க ஒருவரும் முன்வருவதாக தெரியவில்லை - என சுன்னாகம் நொதேர்ன் பவர் நிறுவனத்தின் ஊழியர்கள் தமது வாழ்வாதார உத்தரவாதத்தை பெற்றுத்தருமாறு கோரி ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியிடம் மகஜர் மூலம் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

நேற்று முன்தினம் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் அலுவலகத்தில் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவுக்கு மின்சார நிறுவனத்தின் ஊழியர்கள் 50 இற்கும் மேற்பட்டவர்கள் மகஜர் ஒன்றை கட்சியின் யாழ்.மாவட்ட ஒழுங்கிணைப்பாளர் கே.வி. குகேந்திரன் (வி.கே. ஜெகன்) மற்றும் வட மாகாணசபை எதிர்க்கட்சித் தலைவர் தவராசா, தென்மராட்சி அமைப்பாளர் சாள்ஸ் ஆகியோரிடம் கையளித்துள்ளனர்.

தமது கோரிக்கையடங்கிய மகஜரை கையளித்தபின்னர் ஊழியர்கள் கருத்து தெரிவிக்கும்போது கூறியதாவது,

கடந்த 2009 ஆம் ஆண்டிலிருந்து இந்த நிறுவனத்தை தாங்கள் செயற்படுத்தி வருவதாகவும் தமது செயற்பாடுகள் யாவும் சட்ட நடைமுறைகழுக்குட்படும் வகையில் தான் செயற்படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளதுடன் தமது தொழில்தரு நிறுவனத்தை கடந்தகால அரசியலுடன் தொடர்புபடுத்தி பழி வாங்கும்முகமாகவே திட்டமிட்டு பிரச்சினைகளை உருவாக்கி நிறுவனத்தை முடக்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

2008 ஆம் ஆண்டுக்கு முன்னர் செயற்படுத்திவந்தவர்களது தவறுகளால்தான் இத்தகைய எண்ணெய் கசிவுகள் பரவி வருகின்றன. அந்தக் காலப்பகுதியில் இப்பகுதியில் மரத்தினாலான மின் கம்பங்களுக்கு ஒயிலிடும் செயற்பாடுகள் நடைபெற்றுள்ளன. இத்தகைய பாதுகாப்பற்ற செயற்பாடுகளாலும் நிலத்தடியில் எண்ணெய் கசிவு ஏற்பட வாய்ப்பு இருந்திருக்கலாம்.

ஒன்றரை மாதங்களுக்கு மேலாக நிறுவனத்தை முடக்கியுள்ளதால் அங்குள்ள இயந்திரங்கள் செயலிழக்கும் ஆபத்தை அடைந்துள்ளதாகவும் இந்த நிலை தொடர்ந்தால் தமது தொழில் வாய்ப்புக்கள் இழக்கப்படும் நிலை ஏற்படவுள்ளதாகவும் ஊழியர்கள் மனவேதனையுடன் தெரிவித்துள்ளனர், இதனால் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் நிபுணத்துவக் குழுவினரது அறிக்கையை விரைவாக தெரியப்படுத்தி அதற்கான தீர்வு களை பெற்றுத்தருவதற்கு ஏற்பாடுகள் செய்துதருமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா கவனத்திக்கு கொண்டுசெல்வதுடன் வடமாகாண சபையின் கவனத்திற்கும் கொண்டுசென்று இதற்கான தீர்வை விரைவுபடுத்த நடவடிக்கை மேற்கொள்வதாக இவர்களது மகஜரை பெற்றுக் கொண்டபின் கருத்து தெரிவித்த ஒருங்கிணைப்பாளர் வி.கே. ஜெகன் மற்றும் வடமாகாண எதிர்க்கட்சி தலைவர் தவராசா ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

## திருமறைக் கலாமன்றத்தின் பொற்தூறல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்திய உயர்ஸ்தானிகரகமும் யாழ்.திருமறைக் கலாமன்ற கலைத்தூது கலையகமும் இணைந்து நடாத்தும் மார்ச்மாததத்துக்கான பங்குனித் திங்கள் பொற்தூறல் நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு யாழ்.கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக கிறிஸ்தவ இஸ்லாமிய நாகரிகத்துறை தலைவர் பேராசிரியர் அருள் கலாநிதி ஞானமுத்து பிலேந்திரன் கலந்துகொள்ளவுள்ளார்.

தொடர்ந்து திருமறைக்கலாமன்ற நாட்டுக் கூத்துப் பிரிவு அண்ணாவியார் அ.பேக்மன் ஜெயராஜாவின் ஒழுங்கமைப்பில் பாரம்பரிய தவக்காலப் பண்டன் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

## உலக சிறுநீரக தினம் வவுனியாவில் அனுஷ்டிப்பு



(வவுனியா)

வவுனியாவில் சுகாதார பிரிவினால் உலக சிறுநீரக தினம் நேற்று அனுஸ்டிக்கப்பட்டது.

வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் ஆரம்பமான இவ் ஊர்வலம் வவுனியா நகரசபை மண்டபம் வரை சென்று அங்கு விழிப்புணர்வு நிகழ்வுகளுடன் நிறைவு பெற்றிருந்தது.

வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி, வவுனியா பொது வைத்தியசாலை பணிப்பாளர் கு. அகிலேந்திரன், வவுனியா பிரதேச செயலாளர் கா. உதயராசா, வவுனியா நகரசபை செயலாளர் க.சத்தியசீலன் உட்பட பாடசாலை மாணவர்கள், சுகாதார திணைக்களம் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், தேசிய கல்வியியல் கல்லூரி பயிற்சி ஆசிரியர்கள் உட்பட பலரும் கலந்துகொண்ட இவ் விழிப்புணர்வு ஊர்வலத்தில் சிறுநீரக நோய்கள் ஏற்படுவதற்கு காரணமான காரணிகளை உள்ளடக்கிய பதாகைகளை தாங்கியிருந்தனர்

# வீதியின் குறுக்கே பாய்ந்தது நாய் சகோதரனும், சகோதரியும் காயம்

மோட்டார் சைக்கிளுக்குக் குறுக்காக நாயொன்று பாய்ந்ததில் ஏற்பட்ட விபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை சகோதரனும், சகோதரியும் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் தெல்லிப்பளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

ஈவினையிலுள்ள தனது சகோதரியை கீரிமலையில் அமைந்துள்ள தனது வீட்டுக்கு மோட்டார்ச் சைக்கிளில் கூட்டிச் செல்லும் போதே இரவு 11.30 மணிக்குத் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரிக்கு அருகில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

கீரிமலைப் பகுதியில் வசிக்கும் குண்டுமணி உதயகுமார் (வயது-46), ஈவினை தெற்கில் வசிக்கும் அவரது சகோதரியான திருமதி.ரவீந்திரன் உதயரஞ்சினி (வயது-42) ஆகிய இருவருமே படுகாயமடைந்தவர்களாவர்.











கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக கலாசார விழா கடந்த செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

(29)

## நிலக்கரி ஊழல் வழக்கு குறித்து மன்மோகனுக்கு ஆதரவாக

# சோனியா தலைமையில் பேரணி



முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு ஆதரவாக டில்லியில் உள்ள காங்கிரஸ் அலுவலகத்தில் இருந்து அக்கட்சித் தலைவர் சோனியா தலைமையில் காங்கிரஸ் கட்சியினர் ஏராளமானோர் நேற்று பேரணி நடாத்தினர்.

மோதிலால் நேரு மார்க் பகுதியில் உள்ள மன்மோகன் சிங் இல்லத்தில் பேரணி நிறைவு பெற்றது.

நிலக்கரி ஊழல் வழக்கில் மன்மோகன் சிங்குக்கு காங்கிரஸ் கட்சியினர் அனைவரும் துணை நிற்பதை பறைசாற்றுவதற்காகவே பேரணி நடாத்தியதாக சோனியா காந்தி தெரிவித்தார்.

இது குறித்து சோனியா மேலும் கூறும்போது, "மன்மோகன் சிங்குக்கு ஆதரவு தெரிவிப்பதற்காக இந்தப் பேரணியை நடத்துகிறோம். எங்கள் தலைமைக்கு எதிரான இந்த வழக்கை சட்ட பூர்வமாக எதிர்கொள்வோம். எங்கள் மீது குற்றமில்லை என்பதை நிலைநிறுத்துவோம்" என்றார்.

முன்னதாக, நிலக்கரி சுரங்க ஒதுக்கீடு ஊழல் வழக்கில் ஏப்ரல் 8ஆம் திகதி ஆஜராகுமாறு, முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங், தொழிலதிபர் குமாரமங்கலம் பிர்லா உட்பட 6 பேருக்கு சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றம் நேற்று முன்தினம் கட்டளை அனுப்பியது.

சி.பி.ஐ. நீதிமன்றம் கட்டளை அனுப்ப உத்தரவிட்டுள்ளது குறித்து டில்லியில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் மன்மோகன் சிங் கூறும்போது, இந்த உத்தரவை அறிந்து வருத்தம் அடைந்தேன். எனினும், வாழ்க்கையில் இதுபோன்ற சூழ்நிலையும் ஒரு அங்கம்தான். நேர்மையான விசாரணை நடக்கும் போது உண்மை வெளியில் வரும் என்று நம்புகிறேன். சட்டப் படி எந்த விசாரணையையும் சந்திக்கத் தயார்.

நாட்டில் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு மதிப்பளிக்கிறேன். இந்த வழக்குக்கும் எனக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பதை நீதிமன்றத்தில் நிரூபிப்பேன். உண்மை நிச்சயம் வெற்றி பெறும்" எனக் கூறியிருந்தார்.

## பிறந்த 7 வாரங்களில் ஹலோ சொன்ன குழந்தை



(அயர்லாந்து)

அயர்லாந்து நாட்டில் வசிக்கும் ஒரு தம்பதியரின் குழந்தை பிறந்த ஏழே வாரங்களில ஹலோ சொல்லி பெற்றோரை ஆனந்த வெள்ளத்தில் ஆழ்த்தியுள்ளது. டோனி-பால் மெக்கேன் தம்பதியருக்கு பிறந்த ஆண் குழந்தையான சில்லியன், சில வாரங்களிலேயே தாயைப் பார்த்து சிரிக்க தொடங்கியது. துறுதுறுவென அலைபாயும் மகனின் கண்களை பார்த்து பரவசப்பட்ட டோனி, ஏழாவது வாரத்தில் மகனின் மழலை குறும்புகளை வீடியோ காட்சியாக படம் பிடிக்க ஆரம்பித்தார்.

அப்போது, கன்னங்களில் குழி விழ, தனது வாயை காட்டி சிரித்த சில்லியன், திடீரென "ஹலோ" என்று சொன்னான். தனது கண்களையும், காதுகளையும் தன்னால் நம்ப முடியாத டோனி, தனது கமராவில் பதிவான காட்சிகளை ஓடவிட்டு பார்த்தார். பின்னர், தான் அது கனவில்லை என்பது தெரிவந்தது. நான் அந்த காட்சியை வீடியோவாக எடுத்திருக்காவிட்டா்ல் நான் சொல்வதை யாருமே நம்பியிருக்க மாட்டார்கள் என்று கூறிய டோனிக்கு 12, 11, 8 வயதில் மூன்று பெண் குழந்தைகளும் உள்ளனர்.

ஆனால், நான்காவது குழந்தையான சில்லியன், பிறந்த ஏழே வாரங்களில் "ஹலோ" சொல்லும் அந்த வீடியோவின் மூலம் தனது தாய் டோனியை உலகப் பிரபலமாகி விட்டான்.

# ஆப்கானில் குண்டுத் தாக்குதல் 13பேர் பலி; 50 பேர் படுகாயம்



(காந்தஹார்)

ஆப்கானிஸ்தானின் பல்வேறு பிராந்தியங்களில் நேற்று முன்தினம் நடைபெற்ற வெடிகுண்டு தாக்குதலில் 13 பேர் பலியாகி உள்ளனர். மேலும் 50 பேர் படுகாயம் அடைந்தனர் என்று ஆப்கான் பொலிஸார் தெரிவித்துள்ளனர். ஆப்கானிஸ்தானில் ஹெல்மான்ட் பிராந்தியத்தில் தலிபான் உட்பட பல்வேறு தீவிரவாத இயக்கத்தினரை ஆப்கன் பொலிஸாரும் இராணுவத்தினரும் வேட்டையாடி வருகின்றனர். அவர்களுக்கு பதிலடி கொடுககும் விதமாக, தலிபான் தீவிரவாத இயக்கத்தினர் பல்வேறு வெடிகுண்டு தாக்குதல்களை நடாத்தி வருகின்றனர்.

இந்நிலையில், ஹெல்மான்ட் பிராந்தியத்தில் இருக்கும் லஸ்கர் கா என்ற இடத்தில் நேற்று முன்தினம் தலிபான்கள் வெடிகுண்டு தாக்குதல் நடத்தினார்கள். இத்தாக்குதலில் 8 பேர் பலியானார்கள். மேலும் 23 பேர் படுகாயம் அடைந்தனர். இதே போல், மற்றொரு பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற சாலையோர வெடிகுண்டு தாக்குதலில் 4 பேர் பலியானார்கள். 5 பேர் படுகாயம் அடைந்தனர். இதைத் தொடர்ந்து, ஆப்கான் வடக்கே பாக்லான் பிராந்தியத்தில் மருத்துவமனைக்கு அருகே நடைபெற்ற வெடி குண்டு தாக்குதலில் ஒருவர் பலியானார். 22 பேர் படுகாயம் அடைந்தனர்.

## சீன ஆட்சியை எதிர்த்து திபெத்திய பெண் தீக்குளிப்பு



சீன ஆட்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து திபத்திய பெண்ணொருவர் தீக்குளித்துள்ளதாக அந்நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

நோர்சுக் என சுருக்கப்பெயரால் அழைக்கப்படும் மேற்படி 40 வயது மதிக்கத்தக்க பெண் விசுவான் மாகாணத்தில் அபா பிராந்தியத்திலுள்ள துரொட்ஸ்க் நகருக்கு அண்மையில் இவ்வாறு தீக்கு ளித்துள்ளார்.

சீன ஆட்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து திபெத்தியர் ஒருவர் தீக்குளிப்பது இந்த வருடத்தில் இதுவே முதல் சம்பவமாக கருதப்படுகிறது.

2008 ஆம் ஆண்டிலிருந்து தனக்குத்தானே தீ வைத்து தீக்குளித்த 137 ஆவது திபெத்தியராக நோர்சக் விளங்குகிறார்.

# சித்திரவதை செய்யப்பட்டு 600 மருத்துவர்கள் கொலை

## சிரியாவில் சம்பவம்



600 மருத்துவர்களை சிரிய அரசே படுகொலை செய்துள்ளதாக நியூயோர்க்கை சேர்ந்த மனித உரிமைகளுக்கான மருத்துவர்கள் அமைப்பு தெரிவித்துள ளது.

சிரியாவில் 2011ஆம் ஆண்டு உள்நாட்டு போர் தொடங்கியது முதல், இன்று வரை நடைபெற்று வரும் தாக்குதலில் ஏராளமானோர் பலியாகி வருகின்றனர்.

இந்நிலையில், அரசு படைகள் மருத்துவமனைகளைக் கூட விட்டு வைக்காமல் நடாத்திய தாககுதலின் போது, போரினால் மோசமாக காயமடைந்து சிகிச்சை பெற்றவர்களும், அவர்களுக்கு சிகிச்சை அளித்துக்கொண்டிருந்த 600இற்கும் மேற்பட்ட மருதத்துவ்ர்கள் மற்றும் மருத்துவ பணியாளர்களும் கொல்லப்பட்டிருக்கலாம் என அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

இது பற்றி அந்த அமைப்பின் இயக்குனர் ஏரின் ஹல்கர் கூறியதாவது, போரின் போது மருத்துவமனைகள் மீது தாக்குதல் நடத்துவது சர்வதேச சட்டங்களின் படி போர்க்குற்றம்.

ஆனால் சிரியாவின் அரசுப் படைகள் எதைப்பற்றியும் கவலைபடாமல் மருத்துவமனைகள் மீது குண்டுகளை வீசி தாக்குதல் நடாத்தியுள்ளது.

மேலும் காயம் அடைந்தவர்களை காப்பாற்ற முயன்ற சிவிலியர்களையும் சித்திரவதை செய்து கொலை செய்துள்ளது என்று தெரிவித்துள்ளார்.

உலகச் செய்திகள்

## தீவிரவாதிகளுடன் இணையவே பலஸ்தீனம் சென்றார்



ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பால் படுகொலை செய்யப்பட்ட இஸ்ரேலிய நபர் உளவாளி அல்ல என அவரது பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

பலஸ்தீனத்தில் உளவு பார்ததாக கூறி முகமது சயீத் இஸ்மாயில் (வயது-19) என்ற பிணைக கைதியை,10 வயது சிறுவன் ஒருவன் சுட்டுக் கொல்லும் கொடூர காட்சி இடம் பெற்றுள்ள வீடியோவை நேற்று முன்தினம் ஐ.எஸ்.ஐ.எஸ்.வெளியிட்டுள்ளனர்.

இதைப் பார்த்து அதிர்ச்சியடைந்த முகமதின் பெற்றோர் தங்கள் மகன் உளவாளியல்ல என கூறியுள்ளது.

இதுகுறித்து முகமதின் தந்தை, சயீத் முஸல்லாம் அளித்த பேட்டியில் பேசியதாவது,. ஐ.எஸ்.ஐ.எஸ்.அமைப்பில் இணைவதற்காகத் தான் எங்கள் மகன் சிரியா சென்றான்.

அவன் அடிப்படையில் மதவாதி அல்ல் ஆனால் பெண்கள். பணம் மற்றும் விதவிதமான காரகளைத் தருவதாக ஆசை வார்ததைகள் கூறி ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு எங்கள் மகனை சிரியாவுக்கு வரவழைத்தது.

இந்நிலையில் பயிற்சி முடிந்ததும் அங்கிருந்து வெளியேறி நாடு திரும்ப சயீத் விரும்பினான் என்றும் அதனால் தான் இஸ்ரேலுக்கு உளவு பார்த்ததாகக் கூறி அவனை சுட்டுக் கொன்று விட்டனர் எனவும் கண்ணீருடன் பேட்டியளித்துள்ளார்.

# வியப்பூட்டும் கல்வி வளர்ச்சி; சந்திரகுமார் எம்.பி. புகழாரம்



கிளிநொச்சி அம்பாள்குளம் விவேகானந்தா வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டு ஒரு சில வருடங்களில் கல்வி உட்பட இணைபாட விதானங்களில் சாதித்து வருகின்றமை அனைவர் மத்தியிலும் வியப்பை எற்படுத்தியிருக்கிறது என நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதிதலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

தரம் ஐந்து புலமை பரிசில் பரீட்சை-2014 இல் சித்தியடைந்த பத்து மாணவர்களையும், நூறு புள்ளிகளுக்கு மேல் பெற்ற 28 மாணவர்களையும் கௌரவிக்கும் நிகழ்வில் நேற்று முதன்மை விருந்தினராக கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்

ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில் என்பது இன்று சமூகத்தின் மத்தியில் மக்கள் மத்தியில் குறிப்பாக பெற்றோர்கள் மத்தியில் ஒரு பெரிய பரீட்சைக்கு முகங்கொடுக்கின்ற ஒரு மனோநிலையைத் தோற்றுவிக்கின்றது.

பிள்ளைகளுக்கும் அதில் ஒரு உற்சாகமான ஈடுபாடு காணப்படுகின்றது.. இப்போது இது எல்லா இடமும் பெற்றோர்கள் மத்தியில் சமூகத்தின் மத்தியில் மிகவும் ஒரு எழுச்சியை ஏற்படுத்தியிருக்கின்றது. ஐந்தாம் ஆண்டு மாணவர்கள் மத்தியில் கூட பரீட்சையில் சிறந்த பெறுபேற்றை பெற வேண்டும் என்ற ஒரு வெறித்தனமான உணர்வு இருக்கின்றது. எனவேதான் மாணவர்களை நல்ல முறையில் தயார்ப்படுத்தி இந்த பரீட்சையை எதிர்கொள்ள வைக்கவேண்டியது கல்விச் சமூகம் சார்ந்த சகலரதும் பொறுப்பு.

அந்த வகையில் நாங்கள் அந்தப் பொறுப்பை மாவட்டக் கல்வி அபிவிருத்திக்குழு ஊடாக கடந்த மூன்று வருடங்களாக மிகவும் பிரபல்யமான ஆசிரியரின் வினாத்தாள்களைப் பெற்று எங்கள் மாணவர்களுக்கு வழங்கி அவர்களை பரீட்சைக்குத் தயார்ப்படுத்தி வருகின்றோம். இந்த மாவட்ட மாணவர்களின் கல்வியில் மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் இந்தப் பணியை கடந்த மூன்று வருடங்க ளாக பெருமளவு நிதிச் செலவு செய்து நடாத்தி வருகின்றோம். இது மிகப்பெரிய மாற்றத்தை இந்த மாவட்டத்திலே ஏற்படுத்தியிருக்கின்றது.

யாழ். மாவட்த்திற்கும் கிளிநொச்சி மாவட்டத்திற்கும் கல்வி வளர்ச்சியில் மிகப்பெரிய ஏற்றத்தாழ்வு இருக்கும் நிலையில் யாழ். மாவட்டம் தான் தமிழர்களின் கல்வியில் மிகப்பெரிய கல்வியாளர்களையும், அறிஞர்களையும் உருவாக்கியது என்று உலகளவில் பேசக் கூடிய நிலையில் இந்த ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை வெட்டுப்புள்ளி இரண்டு மாவட்டததிற்கும் ஒன்றாக இருப்பது என்பது இந்த மாவட்டம் கல்வியில் முன்னேற்றம் அடைந்துள்ளது என்பதே பொருள். மாவட்டத்தின் கல்வித்தரம் வளர்ச்சிப்போக்கை நோக்கிச் சென்றுகொண்டிருக் கின்றது என்பதற்குச் சான்றாக உள்ளது.

எங்கள் பிள்ளைகள் தங்கள் கல்வியில் நம்பிக்கை வைக்கக்கூடிய காலகட்டம் முன்னர் இருக்கவில்லை. யுத்தத்தின் அவலம் எங்களைத் துரத்தியது. இப்போது பிள்ளைகள் தங்களது கல்வியில் எதிர்காலத்தை நோகக்கிய கனவுகளுடன் கற்பதற்குரிய சூழல் ஒன்று அமைந்திருக்கின்றது. இப்போதுதான் பெற்றோர்கள் மத்தியில் தங்கள் பிள்ளைகளை நல்ல கல்வியாளர்களாக மாற்ற வேண்டும் என்ற உற்சாகம் காணப்படுகிறது. பாட சாலைகளில் தங்களது பாடசாலைகளை வளர்க்க வேண்டும் அந்தப் பாடசாலை எல்லாத் துறையிலும் சிறந்து விளங்கவைக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்ட பாடசாலைச் சமூகம் உருவாகியிருக்கின்றது. தங்களது திறமைகளுக்கூடாகப் பிள்ளை களுக்கு நல்ல கல்வியை ஊட்டி அவர்களைச் சிறந்த மாணவர்களாகச் சிறந்த பெறுபேறுகளை பெறுபவர்களாக மாற்ற வேண்டும் என்ற வெறி ஆசிரியர்களிடம் இருக்கின்றது. என்றும் தெரிவித்தார்.

பாடசாலை முதல்வர் திருமதி மாணிக்கவாசகர் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் வடக்கு மாகாணசபையின் உறுப்பினர் வை.தவநாதன் கிளிநொச்சி வலய ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் கணேசலிங்கம் கரைச்சிப் பிரதேச சபையின் உறுப்பினர் திரு. கிருஸ்ணசாமி , மற்றும் அயற் பாடசாலைகளின் அதிபர்கள், கிராம சேவையாளர், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் மற்றும் பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப்பலர் கலந்துகொண்டனர்.

## உள்ளக விசாரணையை..

தமிழருக்கு நியாயம் கிடைக்கும் என்கிற நம்பிக்கை தமக்கு இல்லை என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரே' பிரேமச்சந்திரன் பி.பி.சி. தமிழோசையிடம் தெரிவித்தார்.

சகல சிங்கள அரசாங்கமும் தலைவர்களும் வெளிநாட்டு விசாரணையை ஏற்றுக்கொள்ள முடியாது எனத் தெளிவாகக் கூறியுள்ளனர், மனித உரிமை மீறல்கள் குறித்த குற்றச்சாட்டிலிருந்து அவர்கள் நழுவப் பார்க்கிறார்கள் என்பதே உண்மை எனவும் அவர் கூறுகிறார்.

ஐ. நா. மட்டுமல்ல எந்தவொரு நாடு அல்லது அமைப்பின் ஒத்துழைப்பு டனான உள்ளக விசாரணை என்பது தமிழ் மக்களை ஏளனப்படுத்தும் ஒரு செயலாகவே பார்க்கப்படும் எனவும் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

அப்படியான விசாரணைகள் மூலம் ஒருபோதும் உண்மை வெளிவராது, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயம் கிடைக்காது என்பதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு எனவும் அவர் கூறுகின்றனர்.

உள்நாட்டு விசாரணை என்பது காலத்தை விரயமாக்கும் ஒரு செயலே என்றும், தேர்தல் அரசியலை மையப்படுத்தியே சிங்களத் தலைவர்கள் நிலைப்பாடுகளை எடுக்கிறார்கள் எனவும் அவர் குற்றஞ்சாட்டுகிறனர்.

## கொழும்பில்...

மையில் ஈடுபடுத்தப்பட உள்ளனர் மோடி பல்வேறு இடங்களுக்கு விஜயம் செய்ய உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், மோடியின் இலங்கை விஜயத்தை முன்னிட்டு விசேட போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. பண்டாரநாயக்க விமான நிலையத்திலிருந்து இவ்வாறு விசேட போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## உள்ளக...

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் யுத்த குற்றங்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்துவதற்காக வெகு விரைவில் விசேட குழுவொன்றை நியமிப்பதற்கு தான் எதிர்பார்த்திருப்பதாகவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய தின விழாவில் கலந்துகௌ?வதற்காக பிரித்தானியாவிற்கு விஜயம் செய்துள்ள ஜனாதிபதி பிபிசி சிங்கள செய்திச் சேவைக்கு வழங்கிய விசேட செவ்வியின் போதே இதனைத் தெரிவித்துள்ளார்.

நீதியான முறையில் நியமிக்கப்படவுள்ள இந்த குழுவிற்கு விசாரணை தொடர்பான அனைத்து பொறுப்புகளும் வழங்கப்படவுள்ளதுடன் அந்த குழுவினால் மேற்கொள்ளப்படவுள்ள விசாரணைகள் தொடர்பில் கண்டறிந்து அவற்றை நடைமுறைப்படுத்தவுள்ளதாகவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த செவ்வியின் போது குறிப்பிட்டிருந்தார்.

விசாரணைகளின் போது குற்றவாளிகளாக அடையாளம் காணப்படுபவர்களுக்கு நாட்டின் சட்டத்திற்கு அமைய தண்டனை வழங்கப்படும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

## மகிந்தவையும்...

பெறும் இந்தச் சந்திப்பில் கலந்துகொள்வதற்காக தனது சொந்த ஊரான தங்காலையில் இருந்து இன்று கொழும்புக்கு மஹிந்த ராஜபக்ஷ வரவுள்ளார்.

இதேவேளை, மோடியை ராஜபக்ஷ சந்திப்பாரா? என்று புதுடில்லியில் வைத்து இந்திய வெளியுறவுச் செயலர் ஜெய்சங்கரை செய்தியாளர்கள் கேட்டபோது இது குறித்த தகவல்கள் எதுவும் இல்லை என்று தெரிவித்தார். இந்தியப் பிரதமர் மோடி முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்க, எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா, தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல் கட்சித் தலைவர்களையும் சந்திக்கவுள்ளார்.

## மோடியின்..

நாடாளுமன்ற சபாநாயகர் சமல் ராஜபக்ஷ உத்தியோகப்பூர்வமாக வரவேற்கவுள்ளார்.இந்தியப் பிரதமரை வரவேற்று நாடாளுமன்றத்தில் சபாநாயகர் உரையாற்றுவார்.

அதனைத் தொடர்ந்து இந்தியப் பிரதமர் இலங்கை நாடாளுமன்றத்தில் விசேட உரையாற்றவுள்ளார். அதனைத் தொடர்ந்து இலங்கைப் பிரதமரும் எதிர்கட்சித் தலைவரும் பாராளுமன்றில் விசேட உரை நிகழ்த்தவுள்ளனர்.

தொடர்ந்து விசேட விருந்தினர்களுக்கான புத்தகத்தில் கையெழுத்திடும் இந்தியப்பிரதமர் தேநீர் விருந்திலும் கலந்துகொள்வார்.இதற்கு முன்னர் இந்தியப் பிரதமர்களான ஜவஹர்லால் நேரு- இந்திரா காந்தி- மொராஜி தேசாய் ஆகியோர் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முல்லை..

இவர்களது பெயர் விபரங்களை புலனாய்வுப் பிரிவினர் இதுவரை வெளியிடவில்லை.

கைது செய்யப்பட்டவர்களில் இருவர் புனர் வாழ்வு அளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் என விசாரணையின்போது தெரியவந்துள்ளதாக புலனாய்வுப் பிரிவினர் குறிப்பிட்டனர்.

## மக்கள்..

வழங்கவேண்டுமென எதிர்பார்க்கின்றோம்.

28 வருடங்களுக்குப் பின்னர் இந்தியப் பிரதமர் ஒருவர் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளும் அதேவேளை பல்வேறு தரப்பிலான அரசியல் தலைவர்களுடன் சந்திப்புகளையும் கலந்துரையாடல்களையும் நடத்தவுள்ளார்.

இந்தியப் பிரதமரின் வருகையின்போது வடபகுதிக்கும் விஜயும் செய்யவுள்ளமையும் பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்கவுள்ளமையும் எமக்கு மகிழ்ச்சி தரும் விடயமாகவுள்ளது.

கடந்த யுத்த காலங்களின்போது பேரழிவைச் சந்தித்து தற்போது அபிவிருத்தியூடாக மீளக் கட்டியெழுப்பப்பட்டு வரும் வடக்கு கிழக்குப் பகுதிகளின் அபிவிருத்திப் பணிகளில் இந்திய அரசின் பங்களிப்பும் உதவி, ஒத்தாசைகளும் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளதாகக் குறிப்பிட்டார்.

இந்நிலையில் 2010 ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவும் தாம் இந்தியா சென்றிருந்தவேளை அப்போதைய இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் உள்ளடங்கலான மத்திய அரசின் அமைச்சர்களுடன் (பிரணாப் முகர்ஜி, சிதம்பரம், அந்தோனி, கருஸ்ணா) இடம்பெற்ற கலந்துரையாடலின் போது யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் அபிவிருத்திக்காகவும் மக்களின் வாழ்வாதாரத்திற்காகவும் இந்தியா உதவித் திட்டங்களை வழங்க வேண்டுமென தாம் கோரிக்கைகளை முன்வைத்ததாகவும் அதன் அடிப்படையிலேயே வடபகுதியில் இந்திய அரசின் நிதியுதவியுடன் பல்வேறுபட்ட அபிவிருத்திச் செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

குறிப்பாக 50 ஆயிரம் வீட்டுத்திட்டம், அச்சுவேலி கைத்தொழிற் பேட்டை மீளுருவாக்கம், வடபகுதிக்கான புகையிரத சேவை, கைதடியிலுள்ள பனை ஆராய்ச்சி நிலையப் புனரமைப்பும் தொழிற்துறை சார்ந்த நவீன உபகரணங்கள், குருநகரிலுள்ள வடகடல் நிறுவனத்திற்குச் சொந்தமான மீன்வலைத் தொழிற்சாலைக்கு உரிய இயந்திர சாதனங்கள், துரையப்பா விளையாட்டரங்கின் மீள் புனர்நிர்மாணம், காங்கேசன்துறை துறைமுக மீள்கட்டுமானம், பலாலி விமான நிலையப் புனரமைப்பு உள்ளிட்ட இந்திய அரசின் உதவித்திட்டங்களுடன் யாழ்ப்பாணத்தில் புதிதாக அமையப் பெறவுள்ள நவீன வசதிகளைக் கொண்டதான கலாசார நிலையத்திற்கான அடிக்கல்லும் (14-03-2015) பிரதமர் நரேந்திர மோடி அடிக்கல் நாட்டப்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ள டக்ளஸ் தேவானந்தா இவ்வாறான உதவிகளை இந்தியா ஏற்கனவே வழங்கியுள்ளதற்கு நாம் இந்திய மக்களுக்கு எமது மக்களின் சார்பில் மீண்டும் மீண்டும் நன்றிகளைத் தெரிவிப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிலையில் இலங்கைக்கு வருகைதரவுள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் கடந்த யுத்த காலத்தின்போதும் சுனாமி பேரவலத்தின்போதும் வடக்குக் கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த தமிழ் பேசும் மக்கள் அழிவுகளுக்குள்ளும் இழப்புகளுக்குள்ளும் வாழ்ந்துவரும் நிலையில் தற்போது ஓரளவு இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பிக்கொண்டிருக்கின்றனர்.

மக்கள் தத்தமது தனித்துவங்களோடும் அரசியல் உரிமைகளோடும் ஐக்கியமாக இலங்கை நாட்டில் வாழ்வதற்கு தேவையான பங்களிப்பை பிரதமர் நரேந்திர மேடியிடம் நாம் எதிர்பார்க்கின்றோம்.

இந்நிலையில் குறிப்பாக இந்திய மீனவர்களுடைய எல்லை தாண்டியதும் அத்துமீறியதுமான தொழிற்துறை நடவடிக்கைக்ளால் வட பகுதி கடற்றொழிலாளர்கள் நாளாந்தம் எதிர்நோக்கி வரும் அவலங்களுக்கும் இடர்பாடுகளுக்கும் பிரதமர் நரேந்திர மோடி உரிய நடவடிக்கைகளை விரைவில் முன்னெடுப்பார் எனத் தாம் நம்புவதாகவும் செயலாளர் நாயகம் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

எனவே, மக்களின் இயல்பு வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படை வசதிகள் குறிப்பாக மீள்குடியேற்றம், மேலதிக வீடுகள், தொழிற்துறை சார்ந்த வசதிகள், உட்கட்டுமான வசதிகள் உள்ளிட்ட ஏனைய தேவைப்பாடுகளையும் இந்திய அரசு தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டும் என்பதுடன் தமிழ் பேசும் மக்களுக்கும் இந்திய குறிப்பாக தமிழ் நாட்டு மக்களுக்கும் இடையேயான கலை, கலாசாரம், வர்த்தகம் உள்ளிட்ட உறகளை மேலும் வலுப்படுத்தும் வகையில் அதற்கான திட்டங்களை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் இலங்கைக்கான குறிப்பாக வட்பகுதிக்கான பயணத்தின்போது அறிவிக்க வேண்டுமென தாம் எதிர்பார்ப்பதாகவும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

# மாற்று வலுவுள்ளோருக்கு அரச சேவையில் வாய்ப்பு

## வழங்கக்கோரி பேரணி



(வவுனியா)

மாற்று ஆற்றலுடையோரையும் அரச சேவையில் இணைத்துக் கொள்ளுமாறு வலியுறுத்துவதுடன் மேலும் 4 கோரிக்கைகளை முன்னிறுத்தி பேரணியொன்றை செவிப்புலனற்றோர் அமைப்பு வவுனியாவில் நேற்று நடத்தினர்.

இதன் போது பேச்சு கேட்டல் சிரமமுடைய மாணவர்கள் சாதாரண பாடசாலைகளில் க.பொ.சாதாரணதரம் கல்வி கற்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளல், அரச வேலை வாய்ப்பில் ஆற்றலுடையோர் உள்வாங்கப்பட வேண்டும்,

பொது வைத்தியசாலை, மாவட்ட செயலகம், பிரதேச செயலகம் ஆகியவற்றில் சைகை மொழி தெரிந்தவர்கள் மொழி பெயர்ப்பாளர்களாக பணிக்கு அமர்த்தப்படவேண்டும், பொருத்தமான மாற்று ஆற்றலுடையோருக்கு பொருத்தமான சாரதி அனுமதிப் பத்திரத்தை வழங்குதல், மாற்று ஆற்றலுடையோருக்கான 3000 ரூபா கொடுப்பனவை அனைத்து மாற்று ஆற்றலுடையோருக்கும் வழங்குதல் போன்ற கோரிக்கைகளை உள்ளடக்கி வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்திற்கு முன்னதாக ஆரம்பித்து மாவட்ட செயலகம் வரை ஊர்வலமாக சென்று மகஜரொன்றினையும் வவுனியா அரசாங்க அதிபரிடம் கையளித்தனர்.

இதன்னயடுத்து வவுனியா அரசாங்க அதிபர் சாரதி அனுமதிப்பத்திர முறைமைக்கு தற்போது தீர்வினை பெற முடியாது என்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்துவதாகவும் தெரிவித்தார். பேரணியில் ஈடுபட்டவர்களிடம் அவர்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டார்.

# யாழில் நேற்று உண்ணா நோன்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள இந்திய பிரதமர் நரேந்திரமோடியின் வருகை தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வினை எற்படுத்த வேண்டுமென வலியுறுத்தி போரால் பாதிக்கப்பட்ட மக்கள் இயக்கத்தலைவர் வி.சகாதேவன் நேற்று உண்ணாவிரதத்தினை ஆரம்பித்துள்ளார்.

யாழ். பொதுநூலகத்திற்கு முன்பாக நேற்று காலை 7.00 மணிமுதல் இந்த உண்ணாவிரத போராட்டத்தினை ஆரம்பித்துள்ளார்.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது, இந்திய வீட்டுத் திட்ட பிரச்சினை மற்றும் தடுப்பில் உள்ள அரசியல் கைதிகள் மற்றும் காணாமற் போனோர்கள், கடத்தப்பட்டவர்கள் விடுதலை உள்ளிட்ட தமிழ மக்களுக்கான இனப்பிரச்சினை தீர்வு என்பவற்றிற்கு தீர்வு முன்வைக்க வேண்டுமென்று வலியுறுத்தி இந்த உண்ணாவிரத போராட்டத்தினை முன்னெடுத்துள்ளார்.

இந்த உண்ணாவிரத போராட்டத்தினை நாளை சனிக்கிழமை இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் வருகையினை முன்னிட்டு தொடரவுள்ளதாகவும் போரால் பாதிக்கப்பட்ட மக்கள் இயக்க தலைவர் மேலும் கூறினார். (25)

# கறுப்புப்பட்டி அணிந்து மௌனப்போராட்டம்

(யாழ்ப்பாணம்)

இந்தியப் பிரதமரின் வருகையின்போது பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் கறுப்புப் பட்டி அணிந்து மௌனப் போராட்டம் ஒன்றை நடாத்தவுள்ளது.

யாழ். பஸ் நிலையம் முன்பாக நாளை காலை 9.30 மணிக்கு ஆரம்பிக்கும் இப்போராட்டம் தொடர்ந்து ஊர்வலமாகச் சென்று யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் தூதரகத்தில் மகஜர் கையளிக்கப்படவுள்ளது.

இடம்பெயர்ந்த மக்களை மீள் குடியேற்றம் செய்வதற்கு இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும், இடம்பெயர்ந்த மக்களின் அடிப்படைத தேவைகளை நிர்வத்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும், இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினைகளுக்கான நிரந்தரத் தீர்வு காணவேண்டும், இந்திய - இலங்கை மீனவர் பிரச்சினையில் பாதிக்கப்பட்டோருக்கு நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும் போன்ற பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இப்போராட்டம் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (25)

# மரியாவுடன் ரோஷி கொழும்பில் சந்திப்பு



மனித நேயத்துக்காக நாங்கள் கவனம் எடுப்போம் என்ற நிறுவன தலைவரும் மலேசியாவைச் சேர்ந்தவருமான பிரின்ஸஸ் மரியா அமோர் டி.டி அபிவிருத்தி அமைச்சர் ரோஷி சேனநாயக்கவை சந்தித்தார்.

அமைச்சரின் அலுவலகத்தில் இடம்பெற்ற இவ்விஜயத்தில் கருத்துத் தெரிவித்த மரியா அமோர் தற்போது இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கான ஆதரவு மிகவும் பாராட்டத்தக்கத்தொன்றாகும் என தெரிவித்தார். தற்போதய இலங்கை அரசினால் நாட்டிலுள்ள கர்ப்பிணித் தாய்மார்கள் ஒவ்வொருவருக்கும் 20,000 ரூபா பெறுமதியான ஊட்டச்சத்து பொதிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது .

# வீடுகள் கையளிப்பு இளவாலைக்கு மோடி

(யாழ்ப்பாணம்)

யாழ். வரும் இந்தியப் பிரதமர் மோடி இளவாலையில் இந்திய வீட்டுத் திட்டப் பயனாளிகளுக்கு வீடுகளைக் கையளிக்கவுள்ளார். நாளை பிற்பகல் 1.20 மணியளவில் யாழ். வரும் மோடி யாழ். நூலகத்திற்கு அருகில் கலாசார நிலையத்திற்கான அடிக்கல்லை நாட்டிவைக்கவுள்ளார். தொடர்ந்து அங்கிருந்து இளவாலைக்குப் புறப்பட்டுச் செல்வார். அங்கு வீடுகளைக் கையளித்த பின்னர் பலாலி விமான நிலையம் செல்வார். பின்னர் அங்கிருந்து கொழும்பிற்கு புறப்படுவார்.

## மகளிர் தினம் விசேட கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மகளிர் தினத்தை யொட்டி விசேட கருத்தரங்கு ஒன்று இன்று யாழ். யூரோவில் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. பிற்பகல் 3.00 மணியளவில் இடம்பெறவிருக்கும் இந்தக் கருத்தரங்கில் பெண்கள் உரிமைகள் தொடர்பான விசேட உரைகள் இடம்பெறவுள்ளன.

# சரண குணவர்த்தன மோசடி தொடர்பில் கைது



(கொழும்பு)

விசாரணைகளுக்காக குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு அழைக்கப்பட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சரண குணவர்த்தன கைது செய்யப்பட்டுள்ளார்.

96 இலட்சம் ரூபா நிதி மோசடி மற்றும் நம்பிக்கையை மீறியமை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் உதவி பொலிஸ் அத்தியட்சகருமான ருவன் குணசேகர தெரிவித்தார்.

குறித்த குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் சரண குணவரத்தன குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார்.

விசாரணைகளின் பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர் கைது செய்யபட்டுள்ளதுடன் அவர் அத்தனகல்ல நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து அவரை மார்ச் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைப்பதற்கு உத்தரவிடப்பட்டுள்ள்து.

# மலையக பிரமுகர்களுடனும் நரேந்திர மோடி சந்திப்பு

உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு இலங்கை வரும் இந்திய பிரதமர் நரேந்திர மோடி தென்னிலங்கை மலையக தமிழ் அரசியல் தலைவர்களை நாளை சனிக்கிழமை மாலை கொழும்பில் சந்திக்க ஏற்பாடாகியுள்ளது. இச்சந்திப்பில் ஜனநாயக மக்கள் முன்னணி தலைவரும், தேசிய நிறைவேற்று சபை உறுப்பினருமான மனோ கணேசன், தொழிலாளர் தேசிய சங்கத் தலைவரும், தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சருமான பழனி திகாமபரம், மலையக மக்கள் முன்னணித் தலைவரும், கல்வி ராஜாங்க அமைச்சருமான ராதாகிருஷ்ணன் மற்றும் பெருந்தோட்ட ராஜாங்க அமைச்சர் வேலாயுதம் ஆகியோர் பங்குபற்றுவர்.

இந்தச் சந்திப்பு தொடர்பில் ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் கூறியதாவது:- இலங்கையில் புதிய அரசு பதவியேற்றுள்ளது. இந்தியாவிலும் புதிய அரசு ஆட்சியில் உள்ளது. இந்நிலையில் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் ஒரு புதிய அத்தியாயம் ஆரம்பமாகியுள்ளது. இந்த யதார்த்தங்களின் அடிப்படையில் நமது இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் பலப்படும் சாத்தியம் தோன்றியுள்ளது.

அதேபோல் இங்கே தமிழர்கள் மத்தியிலும் புதிய அரசியல் தலைமைத்துவ அறிகுறிகள் தோன்றியுள்ளன. எனவே அரசுகள் மத்தியிலான உறவுக்குள் உள்ளடங்கலாக, இங்கே வாழும் இந்தியாவுடன் தொப்புள் கொடி உறவு கொண்ட நமது மக்களுடனும் புதிய போக்கில் இந்திய அரசு உறவுகளை பலப்படுத்த வேண்டும். இந்த பின்னணியில் இலங்கையில் உருவாகிவரும் நல்லாட்சி சூழல் நாடு முழுக்க வாழும் தமிழ் மக்களை அரவணைத்திட, இந்திய அரசு துணை செய்திட வேண்டும். குறிப்பாக இந்நாட்டில் மிகவும் பின்தங்கிய சமூக நிலைமைகளின் மத்தியில் வாழ்ந்து கொணடிருக்கும் மலையக இந்திய வம்சாவளி தோட்ட தொழிலாளர்கள் தொடர்பாக பாரத நாட்டுக்கு வரலாற்றுரீதியான தார்மீக கடப்பாடு இருக்கின்றது.

இப்பத்திரிகை இல: 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 மார்ச் 13ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.